கவிஞர் அம்பி

அகவை 90

பாராட்டு விழா

Poet Ambi Ambihaipahar 90 Years

Special felicitation in appreciation of his work,
contributions and achievements
by the Tamils in Sydney

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Yaarl Function Centre, Sydney, Australia
28 April 2019

அகவை தொண்ணூறு காணும் கவிஞர் அம்பி ஐயாவுக்கு

வாழ்த்துக்களும், வணக்கங்களும்

அன்புடன்
வைத்திய கலாநிதிகள் திரு. திருமதி மனோ மோகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னுரை....

பன்முக ஆளுமை அம்பி ஐயாயை வாழ்த்த வயதில்லை, வணங்குகிறோம்.

அம்பிகைபாகன் மாஸ்டர் என்றும் அம்பி ஐயா என்றும் அன்புடன் அழைக்கப்படும் ஐயாவுக்கு அகவை தொண்ணூறு. நம்மிடையே இருக்கும் மூத்த தமிழ் ஆளுமை. சிறுகதை எழுத்தாளராக ஆரம்பித்து, கவிஞராகப் பரிணாமம் பெற்றவர். ஈழத்தின் முக்கியமான கவிஞர்களுள் அம்பி ஐயாவும் ஒருவர். அம்பி ஐயா ஈழகேசரி பத்திரிகையில் விஞ்ஞான பாடங்களையும் , கலைக்கதிர் விஞ்ஞான சஞ்சிகையில் கட்டுரைகளையும் எழுதி விஞ்ஞான எழுத்தாளராகவும் பரிணமித்தவர்.

தமிழ்க் கலைச் சொல்லாக்கத்தில் பங்களிப்புச் செய்தததுடன், உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளிலும் பங்குபற்றி ஆய்வுகளை அளித்த ஆய்வாளர். இரு நூற்றாண்டுகளிற்கு முன் தமிழ் மொழியில் மருத்துவம் கற்பித்தலில் பெரும் பங்களிப்புச் செய்த வைத்தியர் சாமுவேல் கிறீன் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டு 1967ம் ஆண்டில் “கிறீனின் அடிச்சுவடு” என்னும் அருமையான புத்தகத்தை வெளியிட்டார். விஞ்ஞான, கணித ஆசிரியாகவும், இலங்கை பாடநூல் வெளியீட்டுத் திணைக்களத்தில் பங்களித்தவராகவும் மிளிர்ந்த கல்வியாளர்.

தனது குழந்தைப் பாடல்களுக்காகவே பெயர் பெற்ற குழந்தை இலக்கியவாதி, தமிழ் நாடக இயக்கத்துக்கு பங்களித்த நாடகவியலாளர் அம்பி ஐயா. “வீட்டிலே தமிழைப் பேசும் விதிசெயல் கடமை“ என்று தமிழ் உணர்வுக்கு வித்திட்டு, குறிப்பாக புலம்பெயர்ந்த தமிழ்க் குழந்தைகளுக்குத் தமிழைக் கற்பிப்பதில் அவர் மேற்கொண்ட முயற்சிகளும் பங்களிப்பும் என்றென்றும் நினைவில் நிற்க வேண்டிய தமிழ் உணர்வாளர்.

அத்தகைய பன்முக ஆளுமை அம்பி ஐயாவுக்கு விழா எடுப்பதில் சிட்னி வாழ் தமிழர்களாகிய நாம் பெருமை கொள்கிறோம். வணங்கிப் பணிகிறோம்.

விழாக் குழுவினர்

விழாக் குழுவினர்

பேராசிரியர் ஆசி. கந்தராஜா	*கானா பிரபா*
லெ. முருகபூபதி	*யசோதா பத்மநாதன்*
சந்திரிகா சுப்பிரமணியன்	*ஜெ. ஜெய்ராம்*
தி. திருநந்தகுமார்	*ஞானசேகரம் சிறீறங்கன்*
சௌந்தரி கணேசன்	*உஷா ஜவகர்*
அன்பு ஜெயா	*நா. சுகிர்தன்*
நடராஜா கருணாகரன்	*ரஞ்சகுமார் சோமபால*
செ. பாஸ்கரன்	*ச. சுந்தரதாஸ்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே...

- **என் அம்பித் தம்பிக்கு அகவை 90 வாழ்த்துகள்** - அ. ,ரகுநாதன் (பக்கம் 03)
- **அம்பியுடன் தொடர்ந்த பயணம்** - முருகபூபதி (பக்கம் 06)
- **எங்கள் தங்கக் கவிஞர்** - திரு எஸ். திருச்செல்வம் (பக்கம் 09)
- **அம்பியும் தமிழும்'** - பேராசிரியர் ஆசி கந்தராஜா (பக்கம் 11)
- **என் நினைவுகளில் அம்பி** - பேராசிரியர் எம். ஏ. நு.்.மான் (பக்கம் 14)
- **அம்பியும் நானும்** - தி. திருநந்தகுமார் (பக்கம் 16)
- **மனித நேய இலக்கியவாதி கவிஞர் அம்பி** - மாத்தளை சோமு (பக்கம் 20)
- **அகவை 90 காணும் கவிஞர் அம்பி** - கவிஞர் செ. பாஸ்கரன் (பக்கம் 23)
- **அம்பி ஐயா பல்லாண்டு வாழ்க** - குலசிங்கம் சண்முகம் (பக்கம் 24)
- **தமிழ் மருத்துவ முன்னோடி கிறீன் பற்றிய கவிஞர் அம்பியின் எழுத்தும் ஓர் அவுஸ்திரேலியத் தமிழ் இளைஞியின் பார்வையும்**
  - திருமதி நிஷேவிதா அஷ்வின் பாலசுப்பிரமணியன் (பக்கம் 26)
- **கவிஞர் அம்பி** - எஸ். விஸ்வநாதன் (பக்கம் 29)
- Loving Memories - (பக்கம் 30)
- **அண்ணாந்து பார்க்கிறேன்...** சௌந்திரி கணேசன் (பக்கம் 36)
- **கவிஞர் அம்பி அவர்கள் யாத்த, யூனியன் கல்லூரிக் கீதம்** - நாகரட்ணம் சுகிர்தன் (பக்கம் 39)
- Honour where Honour is due - V. Gunaratnam (பக்கம் 41)
- **கவிஞர் அம்பிக்கோர் கவி** - பல்வைத்தியக் கலாநிதி இளமுருகனார் பாரதி (பக்கம் 43)
- **அம்பியின் கவிதைகளில் 'OZ தமிழ்" அடையாளங்கள்** - யதோசா பத்மநாதன் (பக்கம் 45)
- **MY AMAPPA** - Ashvini Samji (பக்கம் 51)
- **யூனியன் கல்லூரியில் அம்பி அவர்களின் அடிச்சுவடுகள்** - Dr. S. Gnanarajan (பக்கம் 53)
- **"நினைவலைகளில் அம்பி ஐயா"** - நடராசா கருணாகரன் (பக்கம் 56)
- **ஊடகங்களுடன் இணைந்து நின்ற பெரியார் அம்பி** - எஸ். எம் வரதராஜன் (பக்கம் 57)
- **கொஞ்சும் தமிழ் தந்து நெஞ்சம் கவர்ந்த கவிஞர்** - ப்ரணிதா பாலசுப்பிரமணியன் (பக்கம் 62)
- **கவிஞர் அம்பிகைபாகன் அவர்களுக்கு எனது பிறந்தநாள் வாழ்த்துக்கள்**
  - ஆ. ந. இராசேந்திரன் (பக்கம் 64)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் அம்பித் தம்பிக்கு அகவை 90 வாழ்த்துகள்

அ. இரகுநாதன்
"தமிழாள் கூத்தவை"

வேதாளம் சொன்ன அம்பி

1970களின் ஆரம்ப காலம்

வானொலி மாமா அரச பாடநூல் பதிப்பகப் பொறுப்பாளர், கவிஞர், பேராசிரியர், (மற்றும் பல பல பள பழ) அம்பி அவர்களுடன் பேசும், பழகும் வாய்ப்புகள் 25, பசசல் லேன் கொழும்பில் வசித்த எனக்கும், மனிங் பிளேசில் வசித்த அம்பிக்கும் கலை நிகழ்ச்சிகள், நாடகங்கள், வானொலி நிகழ்ச்சிகள் என நெருக்கமாகப் பழகும் வாய்ப்பு அமைந்தது.

கவிஞர் மகாகவி எழுதிய "கோடை" நாடகம் ஈழத்தின் முப்பெரும் நாடக இயக்குநர்கள் என, அக்காலத்தில் பாராட்டப் பெற்ற தாசீசியஸ் – சுஹேர் ஹமீட் – சுந்தரலிங்கம் மூவரில் ஒருவராகிய தாசீசியசின் நெறியாள்கையில் அரங்கேறியது. "கோடை" கவிதை நாடகம் பார்த்துப் பரவசமாகிய நாள் முதல் அதைப் பற்றியே பேசி, நாங்களும் ஒரு நாடகம் அப்படிச் செய்ய வேண்டும் என்று, பெரும்பான்மையான என் நாடகங்களை நெறிப்படுத்திய சுஹேர் ஹமீட்டும் நானும் எண்ணினோம். என் மனைவி ஊருக்குச் சென்ற சமயம் என் வீட்டில் யாழ்ப்பாணக் கூழ் காய்ச்சி சாப்பிடத் திட்டமிட்டோம். கூழ் காய்ச்சுவதில் அனுபவம் வாய்ந்த நான்தான் சமையல்காரன். அடுப்பில் கூழ் கொதித்துக்கொண்டிருந்தது. நாடகத்தை யார் எழுதுவது என்று கேள்வி வந்தது. அம்பி இதைச் செய்தால் என்ன என்று ஒருவர் முன் மொழிய, சுஹேர் ஹமீட் வழிமொழிய, தயாரிப்பாளரான நான் பெரு மகிழ்வுடன் ஏற்றுக்கொண்டேன். அந்தக் கூழ் குடித்த களிப்புடன், குஷியில், உற்சாகமாக வீடு திரும்பிய அம்பி தன் மனைவியிடம் என் கூழின் பெருமையைப் புலம்ப, அவர் வாய் சிலம்பாடியது.ஃ அது ஒரு தனிக் கதை.

அடிக்கடி சந்தித்தோம். வேதாளம் சொன்ன கதை என்ற நாடகப் பிரதி தயாராகியது. பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் அரங்கேற்றம். ஈழத்தைச் சேர்ந்த பல பகுதி நடிகர்களை ஒன்றிணைத்து, குறிப்பாக யாழ்ப்பாணம் பிரான்ஸிஸ் ஜனம் வேதாளமாக மக்கள் குரல் புனிதலிங்கம் விக்கிரமாதித்தனாக, முனிவராகவும் புலவராகவும் இரட்டை வேடத்தில் நான், பெண் பேயாக ஈழத்தின் மாபெரும் கலைஞராகிய லடீஸ் வீரமணியும், இளவரசனாக கே. ஏ. ஜவாகரும், ஏழைப் பிராமணனாக கண்டி விஸ்வநாதராஜாவும், இளவரசியாக செல்வி ஜெயந்தியும் பிராமணப் பையனாக ஜெயதேவனும் நடிக்க – ஈழத்தின் மிகப் பெரும் இசை வல்லுனர்களில் ஒருவராகிய திலகநாயகம் போல் இசையமைக்க, ஒப்பனைக்கு சுப்புவும் ஒன்று சேர்ந்து அந்த நாடகத்தை அரங்கேற்றினோம்.

யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழ் ஆராய்ச்சி மாநாட்டிலும் கண்டி, மாத்தளை, கொழும்பு என பல நகரங்களிலும் அரங்கேற்றப்பட்டு பெரும் பாராட்டைப் பெற்ற இந்த நாடகம் கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் அரங்கேறிய போது "கோடை" நாடகத்தை எழுதிய மகாகவி உருத்திரமூர்த்தியும் வந்திருந்தார். வாசலில் எங்களுக்காகக் காத்திருந்த உருத்திரமூர்த்தி என் கைகளைப் பற்றியபடியே, "ரகு! என்னுடைய நாடகமொன்றையும் நீங்கள் அரங்கேற்ற வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார். மனம் மகிழ்ந்து நெகிழ்ந்து போன நான் அவர் கைகளை எடுத்து கண்களில் ஒற்றிக்கொண்டேன். என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரதிஸ்டம், அடுத்த வாரம் மகாகவி இதய நோயினால் காலமாகிவிட்டார். அமரராகிவிட்ட அப்பெரும் கலைஞருக்காக மனம் வேதனையில் நெகிழ்ந்தாலும், அந்த மகாகவி எங்களுக்குத் தந்த பாராட்டுகள் இன்னும் பசுமையாக இருக்கிறது.

அந்த நாடகத்தைப் பின்னர் வானொலியிலும் ஒலிபரப்பினோம். அதைத் தொடர்ந்து புலவர் தட்சணாமூர்த்தியின் சம்பூர்ண ராமாயணம் நாடகத்தை ரகுபதி ராகவ ராஜாராம் என்ற பெயரில் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் அரங்கேற்றினோம்.

பெரும் காப்பியமான கம்பராமாயணத்தைக் குறுகத் தொகுப்பதற்காக தங்கச் சங்கிலி போல் அறுபது பாடல்களாக அமைத்திருந்தோம். அந்தப் பாடல்களை எழுதுவதற்கு நானும் அம்பியும் சுஹேர் ஹமீட்டும் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் செல்லும் சரக்கு வண்டியில் (குட்ஸ் றெயின்) ஏறி யாழ்ப்பாணம் நோக்கிப் போவதாகத் திட்டம். அதிகாலையில் எழுந்து பழக்கமில்லாத சுஹேர் ஹமீட் நேரத்துக்கு வரத் தவறிவிட்டார். நானும் அம்பியும் வண்டியில் ஏறிக்கொண்டோம். பாடல் வரும் இடத்தை நான் வாசிக்க அம்பி பாடல் எழுத ஆரம்பித்தார். உலகத்தில் எவருக்குமே இல்லாத பாக்கியம் எனக்கு உண்டு. இரண்டு நிமிட நேரத்திலேயே எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் உடனே நித்திரையாகிவிடுவேன். அப்படியே பாடலும், நித்திரையும் கவிதையும் அறுபது எண்களைத் தொட்டுவிட அநுராதபுரம் வந்துவிட்டது.

பயணத்திட்டத்தில் ஒரு சிறு மாற்றம். வவுனியா மகா வித்தியாலயத்தில் பணியில் இருந்த இசைக்கலைஞர் திலகநாயகம் போலிடம் அந்தக் கவிதைகளைக் கொடுத்துவிட்டு நான் கொழும்புக்குத் திரும்புவதாகவும். அம்பி யாழ்ப்பாணத்துக்குப் போவதாகவும் திட்டம். அப்படியே நடைபெற நான் கொழும்பு திரும்பும் வண்டியில் ஏறிக்கொண்டேன்.

அம்பியின் கவித்துவத்தையும், செழுமையையும், புலமையையும் அவர் பேனாவின் புனிதத்தையும் எண்ணி பிரமித்தபடியே அவர் வேதாளம் சொன்ன கதையில் எழுதிய நெஞ்சை உருக்கும் ஒரு கவிதைநடை வசனத்தைச் சொல்லிப் பார்த்துக்கொண்டேன்.

ஏழைப்பிராமணத்தி: " கைக்குழந்தை பாலன் கசக்கிப் பிழிந்து எடுத்தும், நக்கி உறிஞ்சியும்,

நா வரண்டும், ஓர் தனத்தில் கூட ஒரு துளியும் ஊறவில்லை"

பிற்பாடு ரகுபதி ராகவ ராஜாராம் நாடகத்தில் குத்துவிளக்கு ஆனந்தன் ராமராக, நான் ராவணனாக, இமானுவல் பெஞ்சமின் கும்பகர்ணனாக, கே. எஸ். பாலச்சந்திரன் பரதனாக – தர்மலிங்கம் மாஸ்டர் விபீட'ணனாக, தமிபிராசா மாஸ்டர் அனுமராக, லடீஸ் வீரமணி தசரதனாக, பிரான்சிஸ் ஜனம் கைகேயியாக ஈழத்தில் மிகச்சிறந்த நடிகர்கள் இணைந்து நடித்தார்கள்.

1977 – அட்டன் பொன்னுச்சாமி தயாரிப்பில் ஈழத்தில் தயாராகிய ஒரே சினிமாஸ்கோப் படம் "தெய்வம் தந்த வீடு" என்ற பெயரில் படமாகியது. எம்.ஏ. கபூர் ஒளிப்பதிவு செய்து அபிமான் எடிட்டிங் செய்ய ஈழத்தின் இசைவல்லுனர்களாகிய யாழ்ப்பாணத்து கண்ணன், நேசன், கொழும்பு ரெங்கசாமி இணைந்து இசையமைத்த பாடலுக்கும் அம்பி எழுதிய பாடல் பதிவாகியது. "மணமேடையில் ஒரு நாடகம் உருவானதே அரங்கேறுமா வாழ்விலே" என்று கலாவதி சின்னச்சாமி பாடிய இந்தப்பாடல் அருமையாக அமைந்திருந்தது. இப்படிப் பலப்பல பள, பழ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமையான பேச்சு, சிரித்த முகம், அறிவியல் சார்ந்த வார்த்தைகள், யாருடனும் நேசமாகவும், அன்பாகவும், பண்பாகவும் நடந்துகொள்ளும் அம்பி ஒரு சிறந்த கவிஞர் – சிறந்த மனிதர் -சிறந்த பேராசிரியர் – சிறந்த பண்பாளர். இன்னும் அந்தச் சிரித்த முகம் கண் முன் தெரிகிறது.

நீண்ட இடைவெளி. எட்டு வருடங்களுக்கு முன் ஈழன் இளங்கோவின் ”இனியவளே காத்திருப்பேன்” படத்துக்காக அவுஸ்திரேலியா சென்றிருந்த போது என் அன்பு நண்பர் நடாவின் மூத்த மகன் கருணாவின் உதவியுடன் மீண்டும் அம்பியைச் சந்தித்தேன். அவரை நடக்கமுடியாத கோலத்தில் பார்த்தேன்.

பார்த்தோம் – மகிழ்ந்தோம் – பேசினோம் – இரைமீட்டோம் – சிறிது நேரம் பார்த்து பேசாமலும் இருந்தோம். இன்று அவருக்கு 90 வயது. அவரை வாழ்த்தி எழுத என் கைகளால் முடியவில்லை. என் மனைவி சந்திராதேவி துணைகொண்டுதான் இதை எழுதுகின்றேன். நான் கணிதத்தில் கொஞ்சம் சக்கட்டை. நான் 1935ஆம் ஆண்டு மே மாதம் 5ஆம் திகதி மலேசியாவில் பிறந்தவன். எனக்கு எனக்கு இப்போ வயது 84. “நான் உயிருடன் இருந்தால் என் அன்புக் கவிஞர், நண்பர், பேராசிரியர் அம்பிகைபாகன் அவர்களின் நூற்றாண்டு விழாவிலும் கலந்துகொண்டு அவரின் சிறப்புகளைப் பேசுவேன்” என்று உங்கள் முன் உறுதி எடுத்துக்கொண்டு “வாழ்க அம்பி” என்று நெஞ்சார வாழ்த்தி அவரை வணங்குகிறேன்.

வாழ்க வளமுடன்

என்றும் அன்பன்
கலை ஆர்வலன் அப்புத்துரை ரகுநாதன்

4 Quarter
Rue de la Solidarite
75019 Paris, France

கைபேசி: 003306067653
தொலைபேசி: 0033950986401

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பியுடன் தொடர்ந்த பயணம்

முருகபூபதி

வாழ்க்கைப்பயணத்தில் நாம் சந்திப்பவர்கள் அனைவரும் தொடர்ந்து எம்முடன் இணைந்து வருவதில்லை. எந்தவொரு விக்கினமுமில்லாமல் எம்முடன் சிலரும் சிலருடன் நாமும் தொடர்ந்து இணைந்து பயணிப்போம்.

அவ்வாறு கடந்த நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக அன்பினால் அரவணைத்து, ஆதரித்து நண்பராக – மூத்த சகோதரராக – இனிய குடும்ப நண்பராக இணைந்து பயணித்திருப்பவர்தான் அம்பி.

அதனால் இவரை **அன்புக்கோர் அம்பி** என்றும் நான் அழைப்பதுண்டு.

1972 ஆம் ஆண்டு நான் இலக்கியப்பிரவேசம் செய்த காலப்பகுதியில் ஒருநாள் நண்பர் மல்லிகை ஜீவா, இவரை எனக்கு கொழும்பில் அறிமுகப்படுத்தினார். முதல் முதலில் என்னைக்கண்டவுடனே, அம்பி எனக்குத் தந்த பரிசு, அவர் எழுதிய **கிறீனின் அடிச்சுவட்டில்** என்ற அவரது நூல்தான்.

சிறுகதைகளும் நாவல்களும் தொடர் நவீனங்களும் படித்துக்கொண்டிருந்த எனக்கு, அந்த நூல் புதிய வெளிச்சங்களை அன்றே காண்பித்தது.

எங்கோ ஒரு தேசத்திலிருந்து வருகை தந்த ஒரு பாதிரியார் வட இலங்கையில் மானிப்பாயில் மருத்துவமனை அமைத்து, மக்களுக்கு சிகிச்சையும் அளித்து, ஆங்கில மருத்துவ சிகிச்சை முறைகளை தமிழுக்குத் தந்திருக்கிறார் என்ற அரிய செய்தியை அந்த நூலிலிருந்து அறியமுடிந்தது.

ஈழத்து இலக்கிய வளர்ச்சி எழுதிய நடமாடும் நூலகம் என போற்றப்பட்ட இரசிகமணி கனகசெந்திநாதன் அவர்கள்தான், தமிழில் மருத்துவமுன்னோடியாக விளங்கிய அந்த பாதிரியார் கிறீனின் வாழ்வையும் பணிகளையும் அம்பிக்கு அறிமுகப்படுத்தியவர்.

மல்லிகை ஜீவா அவர்களால் எனக்கு அறிமுகப்படுத்தப்பட்ட அம்பி அவர்களைப்பற்றி பின்னாளில் 2003 ஆம் ஆண்டு **அம்பி வாழ்வும் பணியும்** என்ற நூலை நான் எழுதி அம்பியின் பவளவிழாக்காலத்தில் சமர்ப்பித்தேன்.

1972 ஆம் ஆண்டு முதல் எனக்கும் அம்பிக்கும் இடையே உருவாகிய நட்புறவு ஆரோக்கியமாக வளர்ந்து, இன்று அவரது 90 ஆவது அகவை வரையில் தங்கு தடைகளின்றி நீடிக்கிறது.

தொடக்க காலத்தில் அம்பியை கொழும்பு கல்வி வெளியீட்டுத்திணைக்களத்தில் அடிக்கடி சந்திப்பேன். அவரும் எங்கள் நீர்கொழும்பூரில் நடக்கும் தமிழ்விழா மற்றும் கலைமகள் விழாக்களுக்காக நடத்தப்படும் நாவன்மைப்போட்டிகளுக்கு நடுவராக வருவதுடன், இரவில் நடக்கும் நிகழ்ச்சிகளிலும் பங்கேற்று உரையாற்றிவிட்டு புறப்படுவார். அந்த இரவு வேளைகளில் அம்பியை பஸ்நிலையம் வரையில் அழைத்துவந்து விடைகொடுப்பேன்.

எங்கள் ஊர் வித்தியாலயத்தில் ஆசிரியர்களுக்காக நடத்தப்படும் கருத்தரங்குகளிலும் உரையாற்றுவதற்கு அம்பி வருவார்.

அம்பி கற்பித்த மாணவர்களும் ஆசிரியர்களும் பூமிப்பந்தெங்கும் வாழ்கின்றார்கள். தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் அம்பி பணியாற்றிய காலத்தில் இயற்றி வழங்கிய கல்லூரிக்கீதம்தான் இற்றை வரையில் அங்கும் அக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கங்கள் உலகெங்கும் நடத்திவரும் நிகழ்வுகளிலும் பாடப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பி சுவாரசியமான மனிதர். அங்கதச்சுவையுடன் பேசவல்லவர். அவருடன் பயணித்த பொழுதுகளில் அவர் உதிர்த்த செய்திகள், கதைகளிலும் நகைச்சுவை இழையோடும். அது பற்றியே ஒரு தனிக்கட்டுரை எழுதவும் முடியும்.

அம்பியை காணும் மாணவர்கள் மற்றும் இளம்தலைமுறையினர், **"சேர் என்னை ஆசிர்வதியுங்கள் "** எனச்சொன்னால், **" ஆசி உமக்கு வாதம் எனக்கு "** என்பார்.

மெல்பனில் நடந்த ஒரு தமிழ் மாநாட்டில் அம்பி பேசிக்கொண்டிருந்தபோது, அந்த நிகழ்ச்சியை தாமதமாக தொடங்கிய ஏற்பாட்டாளர்களில் ஒருவர், ஒரு சிறிய துண்டில் **" நேரம் போகிறது"** என எழுதி அம்பியிடம் நீட்டினார். உடனே அதனைப்பார்த்த அம்பி, **"நேரம் போகும்தானே...! "** என்றார். மண்டபத்தில் கரகோஷமும் சிரிப்பொலியும் அடங்குவதற்கு சில நிமிடங்களாகியது.

மெல்பனுக்கு வரும் சமயங்களில் அம்பி எமது இல்லத்தில் தங்குவதுதான் வழக்கம். ஒரு தடவை உணவுக்குபின்னர் எடுக்கும் மருந்து மாத்திரைகளை எடுத்துவருவதற்கு மறந்துவிட்டார். நானும் அவரைப்போன்று நீரிழிவு உபாதையில் இருப்பதனால், என்னிடமிருந்த மருந்து மாத்திரைகளை அவருக்கு கொடுத்தேன்.

மீண்டும் ஒரு தடவை அவர் சிட்னியிலிருந்து புறப்பட்டு மெல்பன் வரும் தருணத்தில், " மறக்காமல் உணவுக்குப்பின்னர் எடுக்கும் மருந்து மாத்திரைகளுடன் வாருங்கள் " என்று நினைவுபடுத்தினேன்.

மறுகணம் அவர், **"நான் உணவுக்குப்பின்னர் எடுக்கும் மருந்துகளுடன் வருகின்றேன். நீவிர் உணவுக்கு முன்னர் எடுக்கும் மருந்தை வாங்கி வையும் "** என்றார்.

இதனைப்படிப்பவர்ளுக்கு அந்தப்பதிலின் அர்த்தம் புரியும்.

ஒரு சித்திரைப்புதுவருட தினத்தில் எமது இல்லத்தில் அம்பி தங்கியிருந்தபோது, அவரது மனைவி பாப்புவா நியுகினியிலிருந்து தொலைபேசியில் அழைத்து வாழ்த்து தெரிவிக்கும்போது, "என்னப்பா, இன்றைக்கு நீங்கள் எனக்கு கைவிசேசம் தரவில்லையே...? "என்றதும், அம்பி, "உமது கையே விசேசம்தானே..? "என்றார்.

ஒருநாள் அம்பியுடன் சிட்னி முருகன் ஆலயத்திற்கு சென்றேன். அங்கே அவரைச்சந்தித்த ஒருவர் , "சேர் வணக்கம். என்னைத் தெரிகிறதா..? "எனக்கேட்டார். அம்பியால் அவரை மட்டிட முடியவில்லை. அந்த அன்பர், " சேர் ஞாபகம் இல்லையா..? நான் உங்களிடம் படித்திருக்கின்றேன் "என நினைவுபடுத்தினார்.

உடனே அந்தக்காலம் அம்பிக்கு நினைவுக்கு வந்துவிட்டதுபோலும். என்னைப்பார்த்து அம்பி சொன்னார்,, **"இவரை படிப்பிக்கப்பார்த்தேன்.. "**

இவ்வாறு தான் இருக்கும் இடங்கள்தோறும் கலகலப்பாக பேசும் இயல்புள்ளவர் அம்பி.

1997 ஆம் ஆண்டு எனது இலக்கியப்பிரவேச வெள்ளிவிழாக்காலத்தை ஒரு இலக்கிய நிகழ்வாக சிட்னி இலக்கிய நண்பர் பேராசிரியர் ஆசி. கந்தராஜா அவர்களின் தலைமையில் மெல்பனில் நடத்தியபோது மூத்தவர்கள் எஸ்.பொ, அண்ணாவியார் இளையபத்மநாதன், ஓவியர் (அமரர்) கே.ரி. செல்வத்துரை அய்யா ஆகியோருடன் அம்பியையும் பாராட்டி கௌரவித்தேன்.

அந்த நிகழ்ச்சிக்காக அம்பி மெல்பன் வருகை தந்த சமயமும் எம்முடன் தங்கியிருந்தார். இவ்வாறு அவருடன் நெருக்கமாக உறவாடியமையால்தான் நேரடி நேர்காணல்களின் மூலம் 2003 ஆம் ஆண்டு அம்பி வாழ்வும் பணியும் நூலை என்னால் எழுதமுடிந்தது.

இப்படி ஒரு நூலை நான் எழுதுவேன் என்று அம்பி எதிர்பார்க்கவில்லை. எமது முன்றாவது தமிழ் எழுத்தாளர் விழா கன்பராவில் 2003 ஆம் ஆண்டு நடந்தவேளையில் (அம்பியின் பவளவிழாக்காலத்தில்) வெளியிட்டோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்காலப்பகுதியில் மெல்பனில் யூனியன் கல்லூரி பழைய மணவர் சங்கத்தினரும் அம்பியை பாராட்டி விழா நடத்தினர். அத்துடன் அக்காலப்பகுதியில் வெளியான உதயம் பத்திரிகையின் விழாவிலும் அம்பியின் இலக்கியப்பணியை பாராட்டி விருது வழங்கினோம். சிட்னியிலும் அம்பி பல அமைப்புகளின் பாராட்டு விருதுகளைப்பெற்றவர்.

இவ்வாறு வாழும் காலத்திலேயே பாராட்டி கௌரவிக்கப்பட்ட அம்பி அவர்கள், இலங்கையில் தமிழ் மருத்துவ முன்னோடியாக போற்றப்பட்ட கிறீன் அவர்களுக்காக தபால் முத்திரை வெளியிடுவதற்கும் ஆவனசெய்தவர். அதற்காக கொழும்பிலிருக்கும் அமெரிக்க தூதுவராலயம் அம்பியை அழைத்து பாராட்டுபசாரமும் நடத்தியிருக்கிறது.

ஈழத்தின் கவிதைச்செழுமைக்கும் குழந்தைகள் இலக்கியத்திற்கும் அவுஸ்திரேலியாவில் தமிழ்க்கல்வி வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றியிருக்கும் அம்பி அவர்களுக்காகவும் எதிர்காலத்தில் முத்திரை வெளியிடவேண்டும்.

அம்பி எழுதிய " **ஓடிடும் தமிழா** " கவிதை அர்த்தம் பொதிந்தது. புகலிடத் தமிழர் இல்லங்களில் ஒலிக்கப்படவேண்டியது. பல தடவை மறுபிரசுரம் கண்டுள்ளது.

அம்பியின் பாடல்கள் இசையமைக்கப்பட்டு பாடப்பட்டுள்ளன. அம்பி எழுதிய **வேளம்மா** என்ற பாடலுக்கு அபிநயம் பிடித்து கன்பராவில் சில குழந்தைகள் நடனம் ஆடியுள்ளனர்.

இலங்கை ரூபவாகினி தொலைக்காட்சியிலும் அம்பியுடன் ஒரு நேர்காணல் நிகழ்ச்சியில் பங்கேற்றுள்ளேன். இவ்வாறு கடந்த நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக (1972 – 2019) அம்பியுடன் தொடரும் நட்புறவின் ஒரு எல்லையில் அம்பியின் 90 ஆவது அகவையில் வந்து நிற்பது பெருமிதமானது.

அம்பி தேடிய சொத்து அவரது குடும்பமும் இலக்கிய நண்பர்களும்தான். அந்த சொத்தின் மகிமையை அவரது அருகிருந்து பார்த்து வந்துள்ளேன்.

எங்கள் அன்புக்கோர் அம்பிக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் தங்கக் கவிஞர்

திரு எஸ். திருச்செல்வம்
முதன்மை ஆசிரியர் - தமிழர் தகவல், கனடா

"விதியே விதியே தமிழ்ச் சாதியை
என்செய நினைத்தாய் எனக்குரை யாயோ"
என்ற மகாகவி பாரதியின் பாடல் வரிகளைப் படிக்கும்போதும் கேட்கும்போதும் என் நினைவலையில் மோதுபவர் கவிஞர் அம்பி (இ. அம்பிகைபாகர்) அவர்கள்.

தமிழினத்தின் கடந்த வரலாற்றின் ஊடாக நிகழ்காலத்தைத் தரிசித்து, வருங்காலத்தை நினைத்து எழும் கேள்விகளுக்கு விடைகாணத் துடிக்கும் கவிஞர் அம்பியின் அங்கலாய்ப்பை இவ்வரிகளினூடாகப் பார்க்கலாம்.

புலம்பெயர்ந்த வாழ்க்கையிலும், இனம்சார் புலன்பெயராத ஒருவராக கவிஞர் அம்பி எம்மத்தியில் வாழ்கிறார் (வசிக்கிறார் அல்ல) என்பதையே பாரதியார் வரிகளின் வாயிலாக இவரை அடையாளம் காண்கிறோம்.

எனக்குத் தெரிந்தளவில் எந்தவொரு நிகழ்விலும் உரையாற்ற ஆரம்பிக்கையில் தமது கணீரென்ற குரலால் கவிஞர் இப்பாடல் வரிகளை எடுத்தியம்புவார்.

* * *

கவிஞர் அவர்களுக்கும் எனக்குமிடையிலான நேரடி அறிமுகம் ஆரம்பமாகி ஐம்பதாண்டு ஆகிறது என்பதை இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும்.

1969ல் இலங்கைக் கல்வி அமைச்சின் கீழான பாடவிதான வெளியீட்டுத் திணைக்களத்தில் விஞ்ஞான - கணித பாடநூல் ஆசிரியர்களில் ஒருவராக இவர் பதவியேற்றார். கொழும்பு தினகரன் பத்திரிகையில் நான் பதவியேற்ற ஆண்டும் அதுவே. இதனால் பல தடவை அவரது பணியகம் செல்ல வேண்டிய தேவை இருந்தது. அங்கு சென்ற வேளைகளில் வெறும் ஆசிரியர் கூட்டத்தை நான் பார்க்கவில்லை. பெரும் எழுத்தாளர் வட்டமொன்றையே அங்கு கண்டேன். அறிஞர்கள் க.சி.குலரத்தினம், செ.வேலாயுதபிள்ளை, சு. வேலுப்பிள்ளை, இ. இரத்தினம் போன்ற மூத்த எழுத்தாளர் பட்டாளம் ஒன்றை அங்கு கண்டு வியப்புற்றேன்.

பாடப் புத்தகம் எழுதும் இப்பிரிவு சிலசமயம் இலக்கிய அரங்காகவே காணப்படும். மதிய இடைவேளையில் 'நக்கீரர் தர்க்கம்' இங்கு இடம்பெறுவதுண்டு. இதுபற்றிக் கவிஞர் அம்பி அவர்கள் என்னிடம் கருத்துரைக்கையில், "இங்கு பாடசாலையில் கற்பிப்பது போன்று நெருக்குவாரம் இல்லை. சில வேளைகளில் 'ஐஸ்' அடிக்கிறோம் என்றும் சொல்லலாம். வாசிக்கவும் எழுதவும், விமர்சிக்கவும், கூடிக்கலந்துரையாடவும் அவர்கள் (அரசாங்கம்) சம்பளம் தருகிறார்கள்" என்று அர்த்தமுள்ள நகைச்சுவையாகச் சொன்னது நன்கு ஞாபகத்தில் உள்ளது.

ஓரிரு தடவைகள் வெள்ளவத்தையில் அவரது வீட்டில் சந்தித்தும் உரையாடியுள்ளேன். இப்படியான ஒரு சந்திப்பே தினகரனில் அவர் சம்பந்தமான செவ்விக் கட்டுரையொன்றை எழுத வழிதந்தது.

* * *

பெரும்பாலான எழுத்தாளர்கள் ஆரம்பத்தில் கவிதைகளை எழுதி, பின்னர் சிறுகதை - நாவல் என எழுதிப் பெயர் பெற்றவர்கள். ஆனால் அம்பி அவர்கள் அதற்கு எதிர்மாறானவர். சிறுகதைகளையும் கட்டுரைகளையும் ஆரம்பத்தில் அசுர வேகத்தில் எழுதிய பின்னரே கவிதைப் பணியை ஆரம்பித்தவர். இதனால் கவிஞர் அம்பி என்றே தமது பெயரை இன்றுவரை நிலைநாட்டியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் மட்டுமன்றி இலங்கை முழுவதும் ஒருகாலத்தில் (1981ல் புலம்பெயர்வதற்கு முன்னர்) மேடைக்கவியரங்குகளை தமது சொல்லாடலாலும், சுவையாடலாலும் கலக்கியவர். நாவற்குழியூர் நடராஜன் (இலங்கை வானொலியின் தமிழ் நிகழ்ச்சி அதிகாரியாகவிருந்த கே.எஸ். நடராஜா அவர்கள்) பண்டிதர் சு.வே. (சு. வேலுப்பிள்ளை), ப. தியாகராஜா போன்றோருடன் இவருக்கிருந்த நட்புறவு இலக்கிய அரங்குகளை மேன்மைப்படுத்தியது. இலங்கை வானொலி தமிழ்ச் சேவையில் ஒரு தசாப்தத்துக்கும் மேலாக கோலோச்சியவர் இவர். இவரது உரைகளும் உரையாடல்களும் கவியரங்குகளும் அவ்வேளை பலராலும் விரும்பிக் கேட்கப்பட்டதோடு பத்திரிகைகளிலும் ஆரோக்கியமாக விமர்சிக்கப்பட்டன. வானொலிக் கவியரங்குகளில் ஆஸ்தான கவிஞராகவே அம்பி அவர்கள் மிளிர்ந்த காலமது.

கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் ஆரம்பகால உறுப்பினர்களில் ஒருவராக இருந்தவர் என்பதால் அங்கு இடம்பெறும் பெரும்பாலான அமர்வுகளில் இவரது நகைச்சுவையும் பொருட்சுவையும் நிறைந்த 'கண் சிமிட்டும்' உரைகளைக் கேட்கலாம்,

* * *

1989ல் நான் கனடா வந்தபின்னர் எங்களுக்கிடையேயான முன்னைய உறவு மீண்டும் மலர்ந்தது. கனடாவிலிருந்து என்னை ஆசிரியராகக் கொண்டு வரும் தமிழர் தகவல் சஞ்சிகையில் பல ஆக்கங்களை எழுதியுள்ளார். 1998ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் தமிழர் தகவலின் ஏழாவது ஆண்டுவிழாவில் இலக்கியத் துறைக்கான விருதை நேரடியாகப் பெறுவதற்காக ஆஸ்திரேலியாவிலிருந்து கனடா வந்திருந்தார்.

ரொறன்ரோ நகரசபை அங்கத்தவர் சபா பீடத்தில் நடைபெற்ற இவ்விழாவில் விருதும் தங்கப்பதக்கமும் பெற்ற பின்னர் கவிஞர் அம்பி அவர்கள் வழங்கிய ஏற்புரை, "விதியே விதியே தமிழ்ச் சாதியை..." என்ற வரிகளுடன் ஆரம்பமானது. மிகச்சுருக்கமாக இவரது உரை அமைந்ததாயினும், தமிழரின் எதிர்காலம் பற்றிய அக்கறையின் ஆழத்தை நன்கு புலப்படுத்தியது.

இதன் தொடர்ச்சியாக தம்மால் எழுதப்பெற்று கைப்பிரதியாகவிருந்த 'உலகளாவிய தமிழர்' என்ற கட்டுரையை நூலாக்கவென நான் விரும்பிக் கேட்டபோது அதனை என்னிடம் ஒப்படைத்தார். 136 பக்கங்களைக் கொண்ட இந்நூல் தமிழர் தகவலைப் பிரசுரிக்கும் 'அகிலன் அசோஷியேற்ஸ்' வெளியீடாக 1999 மே மாதத்தில் வெளியானது.

பழைய தலைமுறையினருக்கும் புலம்பெயர்ந்த புதிய தலைமுறையினருக்குமிடையேயான மனப்போக்கை விபரிக்கும் வகையில் நூலில் 'என் முகம்' என்ற பகுதியில் அவர் எழுதிய குறிப்பின் இறுதிவரிகளை இங்கு குறிப்பிடுவது காலத்தின் தேவையாகவுள்ளது:

"என்போன்ற பழைய தலைமுறையினருக்கு, புலம்பெயர்க்கப்பட்ட ஈழத்தமிழரின் பிரச்சனைகள் ஒருவித மனச்சுமையாக உள்ளன என்பதே உண்மை நிலை. அவர்களின் எதிர்காலச் சந்ததியினர் பற்றிய அக்கறை நெஞ்சில் அலைகளாக மோதுகின்றது. எதிர்காலச் சந்ததியினர் தமிழர் என்ற தனித்துவ அடையாளத்துடன் வாழ வேண்டுமென்ற அங்கலாய்ப்பே நெஞ்சை அலசுகின்றது. இதன் வெளிப்பாடே இந்நூல்" என்று தனது மனம் திறந்து இங்கு கூறியுள்ளார்.

* * *

கவிஞர் அம்பி அவர்கள் எங்கள் முதுசொம். அவர் காலத்தில் நாம் வாழ்வது என்பதும், அவரோடு நெருங்கிப் பழகுவது என்பதும் எங்களுக்குப் பெருமை கலந்த மகிழ்ச்சி தருவது.

காலங்களை வென்ற, காலத்தால் அழிக்க முடியாத எங்கள் தங்கக் கவிஞர் அவர்கள் தாம் விரும்பும் காலம்வரை வாழ்ந்து தமிழ்ப்பணியும், இலக்கியப் பணியும் ஆற்றிட இறைவனை இறைஞ்சுவோமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘அம்பியும் தமிழும்’

பேராசிரியர் ஆசி கந்தராஜா

ஈழத்து கவிஞர்களுள் மிக முக்கியமானவராகக் கருதப்படும் அம்பி, சம்புகுண்டம். நான் கரதண்டம். அதாவது இருவரும் அயல் கிராமங்களான நாவற்குழியையும் கைதடியையும் சேர்ந்தவர்கள். சுற்றி வளைத்துப் பார்த்தால் உறவினர்களும்கூட. இருந்தாலும் நாங்கள் சந்தித்துக் கொண்டது 8725 கிலோ மீட்டர்களுக்கு அப்பால், அதுவும் சிட்னியில், 2002ம் ஆண்டு.

கவிஞர் அம்பியின் இயற்பெயர் இராமலிங்கம் அம்பிகைபாகர். இவர் தனது ஆரம்பக் கல்வியை நாவற்குழி, கிறீஸ்தவ மிசன் பாடசாலையிலும் பின்னர் உயர் கல்வியை யாழ்.பரியோவான் கல்லூரியிலும் தொடர்ந்தவர். அறிவியல் மற்றும் கணித ஆசிரியராக தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நீண்ட காலம் பணியாற்றியவர். 1981ல் பாப்புவா நியூகினி நாட்டிற்கு பணிநிமித்தம் சென்றவர் 1992ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்ந்து இப்பொழுது நிரந்தரமாக சிட்னியில், தனது குடும்பத்துடன் வாழ்கிறார்.

பூமிப் பந்தெங்கும் தமிழர்கள் பல்வேறு நிர்ப்பந்த காரணிகளால் புலம் பெயரந்தபோது, அவுஸ்திரேலியாவுக்கும் பலர் குடி புகுந்தார்கள். இவர்களுள் பெரும்பாலானோர் கொழும்பிலுள்ள அவுஸ்திரேலிய ஹகொமிஷன் அதிகாரிகளால் வடிகட்டி அனுப்பப்பட்டவர்கள், ஓரளவு கல்விப் பின்புலம் கொண்டவர்கள். சிலர் ஆப்பிரிக்க ஐரோப்பிய நாடுகளில் திரவியம் தேடிய பின், அவுஸ்திரேலியாவுக்கு குடிபுகுந்தவர்கள். இன்னும் சிலர் படகு மூலம் அகதிகளாக வந்தவர்கள். இந்தவகையில் மாறுபட்ட சூழலில் வாழ்ந்த தமிழர்கள், திடீரென புலம் பெயர்ந்தபோது அவர்களின் மனங்களை வருத்திய விஷயங்கள் பல. அவற்றுள் மிக முக்கியமானது அந்நிய மொழிச்சூழலில் வளரும் தமது பிள்ளைகளின் தமிழ் மொழியறிவும் தமிழக் கலாசாரமுமே.

அவுஸ்திரேலியாவில் சங்கமித்த தமிழ்க் குழந்தைகள் மூன்று வகையினர்.

1. தமிழ்ச் சூழலில் பிறந்து சிலகாலம் தமிழ் கற்றவர்கள்,
2. தமிழ் சூழல் அல்லாத வேறு நாடுகளில் வாழ்ந்த தமிழ்ப் பெற்றோர்களுக்குப் பிறந்தவர்கள்,
3. அவுஸ்திரேலியாவில் வாழும் தமிழ்ப் பெற்றோர்களுக்குப் பிறந்தவர்கள்.

இவ்வாறு வேறுபட்ட வகையிலும் மாறுபட்ட பின்னணியிலும் வாழ்ந்த தமிழ்க் குழந்தைகளை ஒன்று படுத்தி, தமிழ் மொழி கற்க ஆரம்பிப்பவர்களுக்கும் முன்னைய தமிழ் அறிவை விருத்தி செய்ய முனைபவர்களுக்கும் அந்நிய சூழலில் தமிழ் கற்பிப்பது பெரும் சவாலாக அமைந்தது. இதனால் புலம்பெயர் சூழலுக்கு ஏற்றவகையில் பாடத்திட்டமும் பாடநூல்களும் எழுதவேண்டிய தேவை உணரப்பட்டது. இதற்கு முற்றிலும் தகுதியானவராக அப்போது இனம் காணப்பட்டவர் அம்பி அவர்கள். இவர் தனது ஆசிரியப்பணி காலத்திலேயே குழந்தை இலக்கியம் படைத்தவர். இலங்கை கல்வித் திணைக்கழகத் தமிழ் மொழி பாடநூலாக்கக் குழுவில் அங்கம் வகித்தவர். அந்த வகையில் நியூசவுத்வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பின் சார்பில் பாடநூலாக்கம் கருதி 2002ம் ஆண்டு அவரைச் சந்தித்தேன்.

அவுஸ்திரேலியாவில் வாழும் பிள்ளைகள் ஆங்கில மொழிச் சூழலுக்குள் அமிழ்ந்திருக்கின்றார்கள். போகுமிடமெல்லாம் ஆங்கிலம். படிப்பது ஆங்கிலத்தில். வீட்டிலே, தொலைக்காட்சியிலே ஆங்கிலம். தங்கள் சொந்த சமூகத்துப் பிள்ளைகளோடு விழையாடும் போதும் கதைக்கும் போதும் ஆங்கிலம். ஆங்கிலத்தில் பேசுவதும் சிந்திப்பதும் பிள்ளைகளுக்கு வசதியானதாகவும் இயல்பாகவும் இருக்கிறது. கருத்துப் பரிமாற்றத்திற்காக பெற்றோர்கள் பலரும் பிள்ளைகளுடன் ஆங்கிலத்தில் உரையாடும்படியாகிறது. இந்த நிலையில் தமிழ் கற்பித்தல் அவுஸ்திரேலியாவில் வெற்றிகரமாக அமையுமா? என அம்பி அவர்களிடம் கேட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த மனிதனுக்கும் நான் யார் என்ற கேள்வி உளவியல் ரீதியாக மிகவும் முக்கியம் வாய்ந்தது. அடையாளம் தெரியாதவர்களாக எமது பிள்ளைகள் புலம்பெயர் சூழலில் வாழ்வது சஞ்சலமானது. 'எனது' என்ற அடையாளத்தை எங்கள் பிள்ளைகளுக்கு கொடுக்கக்கூடியது தமிழ். இதனால்தான் தமிழ் அறியாது, தமிழ்க் கலாசாரம் அறியாது வாழும் நமது பிள்ளைகள் பல்வேறு வரழ்க்கைச் சிக்கல்களில் மாட்டிக் கொள்ளுகிறார்கள். பெரும்பான்மையாக வாழும் வெள்ளையர்களுடன் நாம் இரண்டறக் கலந்துவிடலாம் என்ற எண்ணம் சாத்தியமானதல்ல, என்றார் அம்பி.

புலம் பெயர் சூழலில் பதின் பருவத்துச் சிறார்களின் உலகம் வேறுபட்டது. அவர்கள் பெரும்பாலும் எமது மொழி, நமது அடையாளம் என்பனவற்றை ஏற்றுக் கொள்வதில்லை. இந்நிலையில் தமிழ், எமது மொழி என்பதற்கு அப்பால் தமிழ் மொழியைக் கற்பதற்கு வேறு ஏதாவது நியாயம் உண்டா? என்ற என் ஐயப்பாட்டை அவர் முன் வைத்தேன்.

தாயகத்தில் நாம் ஆங்கில மொழியைக் கற்றதன் காரணம், அது தொடர்பு மொழியாகவும் தொழிற்பாட்டு மொழியாகவும் இருந்த காரணத்தால். அவுஸ்திரேலியாவில் உள்ள சீன, கொரிய நிறுவனங்கள் பல தங்கள் மொழியையே அங்கு அலுவலக மொழியாக வைத்திருக்கிறார்கள். இதே வேளை வாடிக்கையாளர்களுடன் ஆங்கிலத்தில் பேசிக் கொள்கிறார்கள். பல இனங்கள் வாழும் அவுஸ்திரேலியாவில், இனங்களின் கலாசார இயல்புகளை மதிக்கவும் அவற்றை வெளிப்படுத்தவும் அரசு மானியம் வழங்கி ஊக்கப்படுத்துகிறது. எனவே தமிழர்களாகிய நாங்கள் புலம்பெயர் சூழலில் தமிழ்மொழியின் தேவையை ஏற்படுத்த வேண்டும். அதன் அவசியத்தை உணரச்செய்ய வேண்டும், என விளக்கம் தந்தார்.

அம்பி அவர்கள் பேச்சோடு நிற்பவரல்ல. அடுத்த வாரமே அந்நிய மொழிச் சூழலில் வாழும் தமிழ்க் குழந்தைகளின் அறிவுவிருத்தி, செயல்திறன் விருத்தி, மனப்பாங்கு விருத்தி ஆகியனவற்றைக் கருத்தில் கொண்டு விரிவான பாடவிதானத்தை எழுதித்தந்தார். இதனை அடிப்படையாக வைத்து அவரின் பெரும் பங்களிப்புடன் தமிழ்ப் பாடநூல்களும் பயிற்சி நூல்களும் எழுதப்பட்டன. அவை மிகுந்த வரவேற்பைப் பெற்றன. இந்த முயற்சில் அவருடன் இணைந்து பல ஆண்டுகள் பணியாற்றியதைப் பெரும் வாய்ப்பாகக் கருதுகிறேன்.

கவிஞர் அம்பி அவர்கள் தமிழ் நாட்டில் அண்ணாதுரை முதலமைச்சராகவிருந்த காலப்பகுதியில் அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாட்டினை முன்னிட்டு நடாத்தப்பட்ட கவிதைப் போட்டிகளில் தங்கப் பதக்கம் வென்றவர். ஈழத்தின் தேசிக விநாயகம்பிள்ளையாக, சுபமங்களா இதழால் வர்ணிக்கப்பட்டவர். இலங்கை சாகித்திய விருது உட்பட உலகளாவிய ரீதியில் பல விருதுகள் பெற்றவர். அம்பி பாடல், வேதாளம் சொன்ன கதை, கொஞ்சும் தமிழ் சிறுவர் பாடல்கள், அந்தச் சிரிப்பு, யாதும் ஊரே…! ஒரு யாத்திரை, அம்பி கவிதைகள், மருத்துவத் தமிழ் முன்னோடி, பாலர் பைந்தமிழ், கிறீனின் அடிச்சுவடு ஆகியவை அவரால் எழுதப்பட்ட நூல்களுள் சில.

இவர் தமிழுக்குச் செய்த அரும்பணிகளில் இன்னுமொன்று மருத்துவத் தமிழ் முன்னோடி, டாக்டர் சாமுவேல் கிறீனை தமிழ் உலகுக்கு அறிமுகப்படுத்தியதுடன் கிறீனுக்கு இலங்கை அரசு முத்திரை வெளியிடுவதற்கு ஆக்கபூர்வமாக உழைத்தது.

டாக்டர் கிறீனை நீங்கள் முன்னிலைப் படுத்தியதன் காரணம் என்ன? என அம்பியிடம் பிறிதொரு சந்தர்ப்பத்தில் கேட்டேன்.

சாமுவேல் கிறீன் என்பவர் அமெரிக்க வைத்தியரும் கிறிஸ்தவ மத ஊழியருமாவார். இவர் 1847ஆம் ஆண்டிற்கும் 1872ஆம் ஆண்டிற்கும் இடப்பட்ட காலத்திலே, மேனாட்டு மருத்துவக்கலை, அமெரிக்க மிஷன் உதவியுடன் யாழ்ப்பாணத்திலே தமிழில் வளர்க்கப்படுவதற்கு அச்சாணியாக இருந்தவர் எனச் சொல்லி நிறுத்தியவரிடம், சாமுவேல் கிறீன் ஏன் யாழ்ப்பாணத்தைத் தேர்ந்தெடுத்தார்? எனக்கேட்டு உரையாடலைத் தொடரவைத்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்திலே தமது மிஷனரிச் சேவையை ஸ்திரப்படித்திய அமெரிக்க மிஷன், மருத்துவ சேவையையும் துவங்குவதென தீர்மானித்தது. இதற்காக 1848இலே மானிப்பாயில் ஒரு மருத்துவ நிலையத்தை நிறுவினார்கள். இம்மருத்துவ மனை இன்று மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த மருத்துவமனை என அழைக்கப்படுகின்றது. அங்கு பணியாற்ற வந்தவர்தான், நியூ யோர்க் மருத்துவக் கல்லூரியில் மருத்துவம் படித்த, சாமுவேல் கிறீன். இவர், வைத்தியர்கள் தமது சொந்தக் கிராமங்களிலே சேவையாற்றல் வேண்டும், தமது கிராமங்களிலே சொந்த மொழி பேசி வாழ்ந்து மக்கட்பணியாற்ற வேண்டும், என்ற எண்ணம் கொண்டவர். இதனால் மருத்துவ மனை அருகே மருத்துவக் கல்லூரி ஒன்றை ஆரம்பித்து தமிழில் மருத்துவம் கற்பித்தார்.

ஓஹோ!

தமிழ்மொழி மூலம் 33 வைத்தியர்களைர்களை உருவாக்கியபின்பே, கிறீன் அமெரிக்கா திரும்பினார். அங்கிருந்தும் அவர் பல தமிழ் நூல்களை வெளியிடும் பணியைத் தொடர்ந்தார், என நான் அறிந்திராத பல விஷயங்களைச் சொன்ன கவிஞர் அம்பி, சாமுவேல் கிறீனிடம் 1850களில் தமிழ் மூலம் மருத்துவம் கற்றவர்களின் விபரம் தெரியவில்லை என வருத்தப்பட்டார்.

மனித வாழ்வில் தொண்ணூறு வயது முதுமை என்பது சற்று சிரமமானது. அனாலும் அவர் ஆண்டவனால் ஆசீர்வதிக்கப்பட்ட அதிர்ஸ்டசாலி என்றே சொல்ல வேண்டும். அதற்கு காரணம் அவரது ஒரே மகன் திருக்குமார். தனது தந்தையை இன்றுவரை அவர் தன்னுடன் வைத்து, சகல பணிவிடைகளையும் சிறப்பாகச் செய்து பராமரிக்கின்றார். இக்காலத்தில் இது மிக அரிது. தொடர்ந்தும் அவர் சுகமே வாழ வாழ்த்துக்கள்.

அகவை 90இல் அம்பி

ஓடிடும் தமிழா நில் – நீ
ஒரு கணம் மனதைத் தட்டு
வீடு நின்னூர் நின் சொந்தம்
விளைநிலம் நாடு விட்டாய்
தேடியதெல்லாம் விட்டுத்
திசைபல செல்லும்வேளை
பாடிய தமிழை மட்டும்
பாதையில் விட்டிடாதே!

அம்பியின் வாசகம்…….

கொண்டாடுகிறோம்……..

சௌந்தரி கணேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் நினைவுகளில் அம்பி

பேராசிரியர் எம். ஏ. நுஃமான்

அம்பி தனது தொண்ணூறு வயதை எட்டியதை அவரது நண்பர்கள் கொண்டாடும் இச்சந்தர்ப்பத்தில் நானும் அதில் கலந்துகொள்வது எனக்கு மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது. தொண்ணூறைத் தாண்டினாலும் அம்பி வயதுக்கேற்ற ஆரோக்கியத்துடன் இருக்கிறார் என்று நினைக்கிறேன். சமீபத்தில் அவருடைய பேட்டி ஒன்றை இணையத்தில் கேட்டேன். அம்பியின் கம்பிரமான குரல் கொஞ்சம் தளர்ந்திருந்தாலும், அவருடைய சிந்தனைத் தெளிவும், கூர்மையும், சரளமான மொழி ஆளுமையும் வியப்பூட்டும் வகையில் முதுமையின் கறைபடியாதிருப்பதைக் கேட்டு மகிழ்ந்தேன்.

அம்பியை 1970களின் தொடக்கத்தில் நான் முதலில் சந்தித்தேன் என்று நினைக்கிறேன். அப்போது நான் கொழும்பில் கொள்ளுப்பிட்டியில் இருந்தேன். அம்பி வெள்ளவத்தை மென்னிங் பிளேசில் இருந்ததாக ஞாபகம். நாங்கள் அடிக்கடி இல்லாவிட்டாலும் இடைக்கிடை சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. எனக்கும் அம்பிக்கும் இடையே பதினேழு வயது இடைவெளி உண்டு. ஆயினும், அம்பி இளைஞர்களுடனும் சக தோழனைப்போல் பழகும் இயல்புடையவர். அவருடன் பழகும்போது வயது இடைவெளி எனக்குத் தோன்றியதே இல்லை. அவருடைய கர்வம் அற்ற கனிவும், மனங்கவரும் சிரிப்பும், நகைச்சுவையுடனான உரையாடலும் யாரையும் அவருடன் எளிதில் ஈர்த்துக்கொள்ளும் அவரது இனிய குணாம்சங்கள் எனலாம்.

ஈழத்தின் முக்கியமான கவிஞர்களுள் அம்பியும் ஒருவர். பிசிறலற்ற, சரளமான செய்யுளாற்றல் மிக்கவர் அவர். மஹாகவி, முருகையன், நீலாவணன், சில்லையூர் செல்வராசன் உட்பட அவர் காலத்து ஈழத்துக் கவிஞர்கள் எல்லோரும் செய்யுளையே கவிதை ஊடகமாகப் பயன்படுத்தினர். அவர்கள் வளப்படுத்திய செய்யுளையே அவர்களுக்குப் பின்வந்த எனது தலைமுறையைச் சேர்ந்த கவிஞர்களும் பயன்படுத்தினர். அவர்கள் பயன்படுத்திய செய்யுள் பத்தாம் பசலித்தனமான மரபுவழிச் செய்யுளல்ல. இவர்கள் தம் கவிதையில் வெளிப்படுத்த முயன்ற நவீன சிந்தனைக்கேற்ற நவீனப்படுத்திய செய்யுள் அது. அவ்வகையிலேயே அம்பியும் ஈழத்து நவீன கவிதைப் பாரம்பரியத்தின் முக்கியமான ஒரு ஆளுமையாகிறார்.

நீலாவணன், மஹாகவி, முருகையன் போல் நேரடியாகவோ, மறைமுகமாகவோ அம்பி என்மீது செல்வாக்குச் செலுத்தாவிடினும், அம்பியை எனது முன்னோடிகளுள் ஒருவர் என்று கொண்டாடுவதில் எனக்கு எவ்வித சங்கடமும் இல்லை. அவர்கள் செம்மைப்படுத்திய பாதையிலேயே நானும் என் பயணத்தைத் தொடர்ந்தேன். அம்பி ஈழத்தின் முக்கியமான கவிஞர்களுள் ஒருவர் எனினும் தன் குழந்தைக் கவிதைகளுக்காகவே அவர் அதிகம் புகழப்பட்டிருக்கிறார். அவரது கவிதைகள் நீண்டகாலமாகத் தொகுக்கப்படாதிருந்தமை அதற்கு ஒரு காரணமாகலாம். மிகவும் காலம் தாழ்த்தி தமிழகத்தில் வெளிவந்த அம்பி கவிதைகள் (1994) இலங்கையில் பரவலாகக் கிடைக்கவும் இல்லை. சிறுவர் இலக்கியத்துக்காக அவர் பெற்ற புகழ் நியாயமானதே. 1969ல் வெளிவந்த அம்பி பாடல்கள் ஒரு முக்கியமான தொகுப்பு. அதைத் தொடர்ந்து கொஞ்சும் தமிழ் (1992) பாலர் பைந்தமிழ் ஆகிய நூல்களையும் அவர் வெளியிட்டிருக்கிறார்.

1960களின் இறுதியிலிருந்து 1970கள் வரை கொழும்பை மையமாகக் கொண்டு நவீன தமிழ் நாடக இயக்கம் ஒன்று செயற்படத் தொடங்கியது. சுஹைர் ஹமீட், தாசீசியஸ், நா. சுந்தரலிங்கம், இளைய பத்மநாதன், க. பாலேந்திரா ஆகியோர் இதில் முக்கியமானவர்கள். இவர்கள் புதிய நாடகப் பிரதிகளை வேண்டி நின்றனர். இப்பின்னணியில்தான் மஹாகவி, முருகையன், அம்பி முதலியோர் கவிதை நாடகத்தின்பால் ஈர்க்கப்பட்டனர். மஹாகவியின் கோடை, புதியதொரு வீடு, முற்றிற்று, முருகையனின் கடூழியம், அப்பரும் சுப்பரும் போன்ற நாடகங்கள் இப்பின்னணியில்தான் எழுதப்பட்டன. ஈழத்து நவீன தமிழ் நாடக இயக்கத்தக்கு அம்பியின் பங்களிப்புத்தான் அவரது வேதாளம் சொன்ன கதை (1970). இது தாசீசிஸால் நெறியாள்கை செய்யப்பட்டு கொழும்பில் சிறப்பாக மேடையேற்றப்பட்டது. அவுஸ்திரேலியாவிலும் அவரது நாடகம் ஒன்று மேடையேறியதாக அறிகிறேன்.

அம்பி விஞ்ஞான, கணித ஆசிரியராக பல ஆண்டுகள் பணியாற்றியவர். பாட நூல் உருவாக்கம், பாடவிதான அபிவிருத்திப் பணிகளிலும் ஈடுபட்டவர். இப்பின்னணியிலேயே இவரது அறிவியல் கல்வி,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவியல் தமிழ் தொடர்பான அக்கறையையும் நோக்க வேண்டும். இவ்வகையில் மேலைத்தேய மருத்துவத்தைத் தமிழில் கற்பித்த முன்னோடி சாமுவெல் ஃபிஸ்க் கிறீன் பற்றிய இவரது மீள் கண்டுபிடிப்பு மிகமுக்கியமானது. இவரைப் பற்றி கிறீனின் அடிச்சுவடு என்ற அம்பியின் முதல் நூல் 1967ல் யாழ்ப்பாணத்தில் வெளிவந்தது. தமிழில் கலைச்சொல் உருவாக்கம் பற்றிய கிறீனின் கொள்கையையும் அதில் அவர் விளக்கி இருப்பார். அத்துடன் நின்றுவிடாமல் அந்த ஆய்வைத் தொடர்ந்து *Scientific Tamil Memories: Dr. Samuel Fisk Green* என்ற ஆங்கில நூலை 1998ல் வெளியிட்டார். அறிவியல் தமிழ் தொடர்பான ஆய்வில் அம்பியின் முக்கியமான பங்களிப்பு இது என்பதில் தவறில்லை.

அம்பி தமிழ் உணர்வும் பற்றும் மிக்கவர். ஈழத் தமிழர்கள், தான் உட்பட, நெல்லிக்காய் மூட்டையை அவிழ்த்து விட்டுபோல் உலகெங்கும் சிதற நேர்ந்தமை அவருக்கு மகிழ்ச்சியானதல்ல. புகலிட நாடுகளில் குறிப்பாக இளம் தலைமுறையினரிடத்து தங்கள் தமிழ் அடையாளம் அழிந்துகொண்டிருப்பதை இட்டு அவர் மிகுந்த கவலை அடைந்தார். தான் அவுஸ்திரேலியாவுக்குப் புலம்பெயர்ந்த பின்னர் அங்குள்ள தமிழ்க் குழந்தைகளுக்குத் தமிழைக் கற்பிப்பதில் அவர் மேற்கொண்ட முயற்சிகளும் பங்களிப்பும் இந்தக் கவலையின் வெளிப்பாடுதான். 'வீட்டிலே தமிழைப் பேசும் விதிசெயல் கடமை' என்று அவர் எழுதினார். இது அவரது தமிழ் நெஞ்சின் ஆசை. புலம் பெயர்ந்த பிறமொழிச் சூழல் அவரது ஆசை நிறைவேற இடமளிக்குமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

தழிழுக்குத் தொண்டுசெய்து தொண்ணூறை எட்டியுள்ள அம்பிக்கு விழா எடுத்து, மலர் வெளியிட்டு அவரைக் கௌரவப்படுத்துகின்றோம். அத்தோடு அமையாது அவருடைய நூல்களையெல்லாம் மீள்பதிப்புச் செய்து தமிழ்மக்கள் மத்தியில் அவற்றைப் பரவலாக்குவது அவருக்கு நாம் வழங்கும் நிலையான காணிக்கையாக அமையும். அவுஸ்திரேலியத் தமிழ்ச் சமூகம் இதனைச் செய்யும் என்று நம்புகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பியும் நானும்

தி. திருநந்தகுமார்
ஆசிரியர், ஹோம்புஸ் தமிழ்க் கல்வி நிலையம்

அது 1998ஆம் ஆண்டு. நான் குடும்பத்துடன் நியூசிலாந்தின் ஆக்லாந்து நகரில் வசித்துக்கொண்டிருந்த காலம். மண்ணைப் பிரிந்த துயர் வருத்தியதனால் கடைப்பிடித்த அஞ்ஞாத வாசத்தை முடித்துக்கொண்டு மெல்ல மெல்ல தமிழின் மீது என் கவனம் திரும்பிய காலம் அது. வெண்ணிலவு எனும் சஞ்சிகை ஒன்றை அங்கிருந்து வெளிக்கொணர்ந்தேன். செலவுக்குக் கட்டுபடியாகவில்லை. மூன்று வருடங்களில் மூன்று இதழ்களை மட்டுமே வெளிக்கொணர முடிந்தது. அப்படி வெளிவந்த ஓரிதழின் சில பிரதிகள் ஒரு இலக்கிய இரசிகரின் முயற்சியால் அவுஸ்திரேலியாவின் சிட்னி, மெல்பேர்ண் நகரங்களையும் எட்டிப்பார்த்தது.

கவிஞர் அம்பி ஐயா அவர்கள் அப்போது பப்புவா நியூகினிக்கும் சிட்னிக்கும் இடையில் அடிக்கடி பயணம் மேற்கொள்பவராக இருந்திருக்கவேண்டும். ஒரு திருமண நிகழ்வுக்காக ஆகலாந்து வந்திருந்த அம்பி ஐயா அங்கு என்னை விசாரித்திருக்கிறார். அந்நிகழ்வுக்குச் சென்றிருந்த என் மைத்துனரை அம்பி ஐயாவுக்கு திருமண வீட்டார் அறிமுகம் செய்துவைத்துள்ளனர். எனது மைத்துனர் வீடு வந்ததும் அம்பிகைபாகன் மாஸ்டர் உங்களை விசாரித்தார் என்று சொன்னதும் அவருடன் அடுத்த நாள் தொலைபேசியில் உரையாடினேன். மறுநாள் மாலை என் இல்லத்திற்கு அவரை வரும்படி வலிந்து வேண்டிக்கொண்டேன்.

அம்பி ஐயா என் வீட்டுக்கு வரும்போது எனது அத்தான் ஜனநாயகம், நண்பர் பாபு, இலக்கிய ஆர்வலர் அமரர் திருநாவுக்கரசு மற்றும் சில நண்பர்களை அழைத்திருந்தேன். அந்தச் சந்திப்பு அம்பி ஐயாவின் அனுபவங்களை நாம் கேட்கும் நல்லதோர் இலக்கியச் சந்திப்பாக நடந்தது. அம்பி ஐயா நியூசிலாந்து வருவதாக அறிந்த போது வெண்ணிலவு இதழ் பற்றியும் அதனை வெளியிடுபவர் பற்றியும் விசாரித்து வரும்படி எழுத்தாளர் முருகபூபதி அவர்கள் அம்பியிடம் கேட்டிருந்தாராம். திருமண வைபவத்தில் வெண்ணிலவு சஞ்சிகை பற்றியும் என்னைப் பற்றியும் விசாரித்திருக்கிறார் அம்பி ஐயா. இதை என் வீட்டுக்கு வந்தபோது அம்பி ஐயா குறிப்பிட்டார். இன்று வரை தொடரும் அந்த உறவை எனக்குத் தமிழ் தந்தது.

புத்தாயிரத்தோடு நான் அவுஸ்திரேலியாவுக்குப் குடிபெயர்ந்தேன். சிட்னியில் 2002ஆம் ஆண்டிலிருந்து ஹோம்புஸ் தமிழ்ப் பாடசாலையில் ஆசிரியராக பணியாற்றத் தொடங்கினேன் சிட்னிக்கு வந்த காலத்தில் அம்பி ஐயாவைத் தொடர்புகொள்ள சில தடவைகள் முயன்றிருக்கிறேன். அப்போது ஐயா மீண்டும் பப்புவா நியூகினிக்குச் சென்றிருக்கவேண்டும். அல்லது உலகம் சுற்றப் போயிருக்கவேண்டும். அதனால் அவரின் தொடர்பு கிடைக்கவில்லை.

2003ஆம் ஆண்டில் ஒரு நாள் ஐயப்பன் ஆலய நிர்வாகத்தில் அப்போதிருந்த நண்பர் வனதேவா ஐயப்பன் கோவில் நிதி சேகரிப்பு நிகழ்ச்சி ஒன்றிற்காக பட்டி மண்டபம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார். பேராசிரியர் பொன் பூலோகசிங்கம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற அப்பட்டிமண்டபத்தில் அமரர் வேந்தனார் இளங்கோவும் நானும் ஒவ்வோர் அணியில் பேசினோம். அந்த விழா நிகழ்ச்சிகள், பட்டிமண்டபத்தில் பேசுவோர் போன்ற விடயங்கள் இன்பத்தமிழ் வானொலியில் விளம்பரமாக ஒலிபரப்பாகியது. அந்தப் பட்டிமண்டபத்துக்கென லிட்கம் உக்ரேனியன் மண்டபத்திற்கு நான் சென்ற சில நிமிடங்களில் அம்பி ஐயாவும் அங்கு வந்துவிட்டார். வானொலி அறிவித்தலில் எனது பெயரைக் கேட்டதாகவும் என்னைச் சந்திக்க விரும்பியதால் அங்கு வந்ததாகவும் அம்பி ஐயா கூறியதைக் கேட்டதும் என்னை மறந்து போனேன். இரண்டாவது தடவையாகவும் அம்பி ஐயா என்னைத் தேடி வந்தமை எனக்கு இன்ப அதிர்ச்சியாக இருந்தது.

அந்த வருடம் என்னையும் நண்பர் குலசிங்கத்தையும் ஹோம்புஸ் தமிழ்ப் பள்ளியில் சந்திக்க வந்திருந்தார் அம்பி ஐயா. அப்போது அவர் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பின் பாடநூல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுவின் பிரதம ஆலோசகராக இருந்தார். என்னைப் பாடநூல் குழுவில் தன்னோடு இணைந்து செயற்படும்படி அழைத்தார். மேலும் அமரர் இளங்கோவிடம் சொல்லி என்னையும் பாடத்திட்டச் செயற்பாடுகளில் பங்குபற்ற அழைத்தார். அம்பி ஐயா அன்று என்னை ஆட்கொண்டு என் பாதையை வகுத்திருந்தார் என்றே கூறவேண்டு. அன்றிலிருந்து பாடநூல் செயற்பாடுகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்தேன்.

வேலைப்பளு, ஏனைய சுமைகள் என நான் அம்பி ஐயாவுடன் பல தடவைகள் நீண்டகாலம் தொடர்புகொள்ளாது இருந்திருக்கிறேன். அப்போதெல்லாம் தொலைபேசியில் தொடர்புகொண்டு நலம் விசாரிப்பார் அம்பி ஐயா. பேரசிரியர் கந்தராஜா, நண்பர் குலசிங்கம் ஆகியோர் பற்றி என்னோடு பேசும்போது விசாரிப்பார். நான் அவரைத் தொடர்புகொள்ளும்போதெல்லாம் "வணக்கம் ஐயா" என்று அவரை விழிப்பேன். "வணங்கினேன், சொல்லுங்கள்" என்பார்.

பத்து பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் பல தடவைகள் அம்பி ஐயாவைத் தொடர்பு கொள்ள முயற்சித்தேன். கடைசிவரை தொடர்பு கிடைக்கவில்லை. ஒரு நாள் என் வீட்டுக்கு ஒரு அழைப்பு வந்தது. கரகரத்த குரல். எதுவும் விளங்கவில்லை. சில நிமிட நேரத்தில் மீண்டும் அழைப்பு வந்தது. மறுமுனையில் அம்பி ஐயாவின் அருமைப் புதல்வர் திருக்குமார் பேசினார். " அப்பாவுக்கு இதயத்தில் சத்திரசிகிச்சை செய்து இப்போது மருத்துவமனையில் இருக்கிறார் என்றார் அவர். அன்று நானும் மனைவியும் விழுந்தடித்துக்கொண்டு அன்று பிற்பகல் சிட்னி நகருக்கு அண்மையிலுள்ள றோயல் பிரின்ஸ் அல்பிரட் மருத்துவமனைக்கு விரைந்தோம். ஐயா, கட்டிலில் சாய்ந்தபடி இருந்தார். அவரைச் சுற்றிலும் மருத்துவ உபகரணங்களும் குழாய்களுமாக இருந்தது.

தொண்டைக்குழியூடு குழாய் வைத்திருந்தனராம். அம்பி ஐயா வழக்கம்போல மகிழ்ச்சியோடு எதுவித பதற்றமுமின்றி இருந்தார். மெதுவாகப் பேச்சுக்கொடுத்தேன். அவர் குரல் கரகர என்றிருந்தது. இன்று வரை அந்தக் கரகர குரலிலேயே பேசுகிறார். ஐயாவுக்கு இரத்தக்குழாயில் ஏற்பட்ட அடைப்புக்காக கோகிராவில் உள்ள சென். ஜோர்ஜ் மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சை நடைபெற்றிருக்கிறது. அறுவைச் சிகிச்சைக்குப் பிந்திய மருத்துவக் கவனிப்பு அவ்வளவு திருப்திகரமாக இருக்கவில்லையாம். ஐயாவின் நிலை மோசமாகிக்கொண்டிருக்கையில் ஐயாவை அதி தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றியுள்ளனர். உயிர்காப்புச் சாதனங்களுடன் ஐயாவை தீவிர சிகைச்சைப் பிரிவில் வைத்துள்ளனர். மருத்துவ நிபுணரின் ஆலோசனையின்படி ஐயாவை நகரிலுள்ள பிரின்ஸ் அல்பிரட் மருத்துவமனைக்கு மாற்ற விரும்பிய போதிலும், அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் உள்ளவர்களை வேறு இடத்துக்கு மாற்ற மறுத்துவிட்டனர். அம்பி ஐயாவின் மகன் அந்த மருத்துவமனையில் தகவல் தொழில்நுட்பப் பிரிவில் நீண்டகாலம் கடமையாற்றியவர். ஐயாவின் மூத்த மகள் பப்புவா நியூகினியில் மருத்துவ சிகிச்சை நிபுணர். இருவரும் முயன்று இரு வைத்தியசாலைகளின் நிர்வாகத்துடனும், சிகிச்சை நிபுணர்களுடனும் பேசி ஐயாவை இடம்மாற்றும் ஏற்பாட்டைச் செய்தனர். இதற்கிடையில் ஒரு கட்டத்தில் ஐயாவின் உயிர்காப்புச் சாதனத்தைக் கழற்றிவிட முன்னைய மருத்துவமனை தீர்மானித்துவிட்டது. அதனைச் செய்வதற்கிடையில் அம்பி ஐயாவின் பிள்ளைகள் ஏற்பாடு செய்துவிட்டனர். புதிய மருத்துவமனையில் சிகிச்சை நிபுணர்களை அழைப்பித்து மருத்துவம் செய்வித்திருக்கின்றனர் பிள்ளைகள். அங்கு வந்த புதிதில் தான் அம்பி ஐயா என்னை அழைத்திருக்கிறார். இந்தச் செய்தியை அம்பி ஐயா சொல்லித் தெரிந்துகொண்டேன்.

அம்பி ஐயா 1974இல் 15 வாரகால புலமைப் பரிசில் பெற்று குடித்தொகைக் கல்வி (Population Studies) பெறுவதற்காக அமெரிக்காவின் கனெக்ரிக்கட் மாநிலப் பல்கலைக்கழகத்திற்குச் சென்றார். அங்கு மக் ஓடர் என்ற விரிவுரையாளரின் நட்புக் கிடைத்தது. இருவரும் கல்வி நிகழ்ச்சித் திட்டத்திற்கு அப்பால் பலதும் பத்தும் பேசிவந்தனர். அப்போது மருத்துவர் சாமுவேல் கிறீன் அவர்கள் பற்றிய பேச்சு வந்தது. அதன் தொடர்ச்சியாக அங்குள்ள உள்ளூர் வாரப்பத்திரிகை ஒன்றின் நிருபருடன் ஐயாவுக்கு தொடர்பை ஏற்படுத்திக் கொடுத்தார் மக் ஓடர். அந்த அம்மையார் ஐயாவை தனது இல்லத்துக்கு அழைத்து சாமுவேல் கிறீன் பற்றிய செய்திகளை ஐயா சொல்ல ஒலிப்பதிவு செய்திருந்தார். அதனை அடிப்படையாக வைத்து சாமுவேல் கிறீன் பற்றி ஒரு கட்டுரை அந்த உள்ளூர் வாரப்பத்திரிகையில் வந்திருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்பின் ஒரு நாள் அம்பி ஐயா வகுப்பில் இருந்தபோது ஒரு தொலைபேசி அழைப்பு வந்ததாம். மறுமுனையில் இருந்தவர் "I am Thomas Green, grand son of Dr Samuel Fisk Green' என்று அறிமுகச் செய்திருக்கிறார். அம்பி ஐயாவின் உள்ளம் துள்ளிக்குதித்திருக்கும். உங்களை நான் வந்து சந்திக்க விரும்புகிறேன் என ஐயா சொன்னதும், " இல்லை, நீங்கள் வரவேண்டாம், இலங்கையில் இருந்து நீங்கள் இங்கு வந்துள்ளீர்கள். உங்களை நாங்கள் வந்து பார்ப்பதுதான் சரியாக இருக்கும்" அவர் கூறி வந்து ஐயாவைச் சந்தித்ததோடு அவரை தம் இல்லத்துக்கும் அழைத்துச் சென்றிருக்கிறார். அந்த இல்லத்தில் மருத்துவர் சாமுவெல் கிறீன் இலங்கையில் இருந்து தன்நாடு திரும்புகையில் கொண்டுசென்ற அத்தனை பொருட்களையும் நூல்களையும் ஒரு அறையில் பத்திரப்படுத்தை வைத்திருக்கிறார் பேரன் தொமஸ் கிறீன். ஏன் இந்தப் பொருட்களை நீங்கள் பாதுகாத்து வருகிறீர்கள் என ஐயா கேட்க, அதைத் தான் நானும் இதுநாள் வரை கேட்டுக்கொண்டிருக்கிறேன் என்றாராம் அவர் மனைவி. தொடர்ந்து, இப்போது தான் அதன் காரணத்தை நான் உணர்ந்துகொண்டேன். உங்கள் வருகைக்காகத் தான் நாங்கள் காத்திருந்தது போல் ஆகிவிட்டது என்று தொமஸ் கிறீனின் மனைவி கூறியிருந்தமையை ஐயா அடிக்கடி சொல்லி நெகிழ்ந்துபோவார்.

அம்பி ஐயா பல்வேறு ஆளுமைகள் கொண்ட ஒருவர். அவரைக் குழந்தைக் கவிஞராகப் பார்ப்பவர்களே அதிகம். அவர் எழுதிய பாடநூல்களை சிலரே அறிந்திருக்கின்றனர். அதிலும் அவரின் புலமையை, அவரின் கல்விச் சிந்தனையை, மொழிக்கல்வி ஞானத்தை ஒரு சிலரே அறிந்திருக்கின்றனர் என்பது தான் உண்மை. குழந்தைகளுக்கு வேண்டிய மொழி ஆற்றலை எந்த வகையில் எந்த நிலையில் கொடுக்கவேண்டும் என்பதை அவரின் தமிழ் ஒன்று முதல் தமிழ் நான்கு வரையான பாடநூல்களைக் கரிசனையோடு காய்தல் உவத்தல் இன்றி அணுகியவர்களுக்குத் தெரியும். இப்போதெல்லாம் சில மேதாவிகள் அம்பி ஐயா எழுதிய பாடங்களைத் திருத்தவேண்டும் என்று புறப்படுகிறார்கள். பாடநூல் தொடர்பாக அம்பி ஐயா அவர்கள் அடிக்கடி சொல்லும் வாக்கியம் ஒன்றுண்டு. A lesson is not written. It is REWRITEN என்பார். பாடநூல் திரும்ப திரும்ப மீள எழுதப்படவேண்டும் என்பதில் அம்பி ஐயா என்றும் நம்பிக்கை கொண்டிருந்தார். ஆயினும் அது மூலப்பிரதி உயிர்ப்புடன் இருக்கவேண்டும் என்பது அடிப்படையன்றோ. இன்னும் சிலரோ தாம் எழுதியதில் ஒரு வரியை மாற்றுவதானாலும் தமது அனுமதி பெறவேண்டும் என்று வலியுறுத்தும் இக்காலத்தில் அம்பி ஐயாவின் இப்போக்கு அவரின் பணிவுள்ளத்தைக் காட்டுகிறது.

அம்பி ஐயாவின் இலக்கியக் கல்விப் பணிகளைப் பாராட்டி அவரது 75ஆவது அகவையில் மிகப்பெரும் விழா ஒன்றை இலக்கியப் பிதாமகர் அமரர் எஸ்.போ அவர்கள் சிட்னியில் ஹோம்புஷ் ஆண்கள் உயர்தரப் பாடசாலையில் ஏற்பாடு செய்திருந்தார். அங்கு பல நூல்களும் வெளியிடப்பட்டன. அதில் அம்பி ஐயாவின் " அந்தச் சிரிப்பு" எனும் கவிதை நூலும் வெளியிடப்பட்டது.

அந்த விழாவுக்கு ஒரு வாரத்திற்கு முன்னதாக அமரர் எஸ்.போ அவர்கள் என்னை தொலைபேசியில் அழைத்து அம்பி ஐயாவின் 75ஆவது பிறந்தநாள் விழாவில் அம்பி ஐயா பற்றிச் பேசவேண்டும் என்று கேட்டிருந்தார். அந்த விழாவில் எனக்குப் பேசக்கிடைத்தது என் வாழ்வில் முக்கிய தருணமாக இன்னமும் கருதுகிறேன். இன்று அம்பி ஐயாவுக்கு அகவை 90 என்பது எத்துணை மகிழ்ச்சியான தருணம். இது எத்தனை பேருக்கு கிடைக்கும். நல்லாரைக் காண்பதுவும் நன்றே. நல்லாருடன் இணங்கி இருப்பதுவும் நன்றே. நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்றே. அம்பி ஐயாவின் வாழ்த்து எம்மை வாழவைக்கும். அம்பி ஐயா பற்றி எல்லோரும் பேசுகிறோம். எல்லாவற்றையும் பேச முனைகிறோம். தமிழ் எழுத்துலகிற்கு அவரின் பங்களிப்பை முழுமையாக ஆய்வு செய்ய முனையும் ஒருமாணவனால் மட்டுமே அவர் தமிழுக்களித்த அர்ப்பணிப்புடன் கூடிய இலக்கியச் செல்வங்களின் ஆழ அகலத்தை வெளிக்கொணர முடியும். அப்படி ஒரு மாணவனைக் காணக் காத்திருப்போரில் நானும் ஒருவன்.

வாழி அம்பி ஐயா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துக்கள் !

சின்ன வயசில்...
திரிந்த களைப்பில் ஏதும்
தின்னும் விருப்பு எழவே செல்கின்றேன்.

என் ஆச்சி
என்றும்போல் அங்கே
எடுத்து மரக்கொத்தால்
அன்றும் அளக்கின்றாள் குத்தரிசி -

சென்று அடுத்தோர்
மூலை அருகினிலே
மூடிக்கிடந்த பனை
ஓலைப் பழம்பெட்டி ஒன்றுள்ளே...

கோலியவன்
ஓர்கை பிடி அரிசி
எடுத்து இட்டாள் பின்மீதி
சீர்செய்து உணவுக்கு உலையில் இட்டாள்!.

தேராமல்...

ஏன் ஆச்சி அஃதென்றேன்
என்னை விழித்து அன்பாய்

'மேனே கேள்...நாளும் ஒருபிடியை-
பானையிலே
போடாமல் எம்மை
ஒறுத்துப் பிடித்து வைத்து

நாடிவரும் ஏழை எளியோர்க்கு-
கோடாமல்
கிள்ளிக் கொடுத்தல்தான்
தானமாமடா!

....உள்ளதனால்
அள்ளிக் கொடுத்தல் அல்ல அஃது"
என்றாள்.

வள்ளல் அவள்!

தன்னை ஒறுத்து என்றும்
தான உணர்வு ஓங்கும்
வன்மை அனனையின் வளம்!

- அம்பி கவிதை

அன்புடன்
ஆசி கந்தராஜா குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித நேய இலக்கியவாதி கவிஞர் அம்பி

மாத்தளை சோமு

கவிஞர் அம்பி அவர்களை முதன்முதலில் சந்தித்தது சிட்னியில்தான். சிட்னியின் தென்பகுதியில் ALLAWAH என்ற இடத்தில் குடியிருந்தபோது, அதன் பக்கத்தில் இருந்த HURSTVILLE என்ற இடத்தில் கவிஞர் அம்பி இருந்தார். அப்போது அடிக்கடி அவரைச் சந்திக்க முடிந்தது. அப்போது ஈழத்து போர், இலக்கியம், புலம் பெயர்ந்த தமிழர்களின் எதிர்கால சந்ததியரின் தாய் மொழி குறித்தும் நிறைய பேசினோம். எப்போதும் மனிதர்களை காயப்படுத்தும் வார்த்தைகளை அவர் பேசியதில்லை.தன் கருத்துக்களுக்கு மாறுபட்ட கருத்துடையவருக்கு எதிராக வார்த்தைகளை காட்டியதில்லை.ஒவ்வொருவருக்கும் ஜனநாயக உரிமை உண்டு என்று நினைத்தவர். தமிழர் புலம் பெயர்ந்த நாடுகளில் அடுத்த தலைமுறையோ தமிழை விலகி விடுமோ என்ற அச்சம் எப்போதும்அவருக்கு இருந்தது. அந்த அச்சத்தை அவர் தம் கவிதைகளில் அற்புதமாய் வெளிப்படுத்தியவர்.

கவிஞர் அம்பி கவிஞருக்கு மேலாக ஒரு நல்ல சிந்தனைவாதி, மானுட நேயர். எனது அனுபவத்தில் சில இலக்கியவாதிகளிடம் மானுட நேயத்தைக் காண முடியாமல்இருந்தது ஆனல், கவிஞர் அம்பி அவர்களில் மாறுபட்டவர்.;மனித நேயம் குறித்து எழுதுவதோடு அதனை வாழ்வில் கடைப்பிடித்தவர்.

'கொஞ்சு தமிழ்' என்ற நூலில் குழந்தைகளுக்கான கவிதைகள் கொஞ்சுகின்றன. அந்த நூலுக்குக் கண்ணோட்டம் எழுதிய க. சச்சிதானந்தன் 'கவிதைகளில் அமைத்த மொழி பிள்ளைப் பருவத்தில் ஏழு வயதுள்ள சிறாரின்சொற்க் களஞ்சியத்தையும், மொழி அமைப்பையும் கொண்டது வியக்கத்தக்கதாகும். அடி தோறும் கருத்து முற்றுவது பிள்ளைகளின் இயல்புக்கு மிகப் பொருத்தமானது' என்று குறிப்பிட்டது முக்கியமானதாகும்.

சிறுகதைகள் மூலம் எழுத்துலகில் கால் வைத்த அம்பி, கவிதைகளை எழுதத் தொடங்கியதால் ஈழத்து இலக்கிய உலகம் சுஜாதா போன்ற விஞ்ஞானச் சிறுகதை எழுதும் ஒருவரை அடைய முடியவில்லை.

.தமிழ் பேசும் நல்லுலகமெல்லாம் விஞ்ஞானச் சொற்கள் ஒரே விதமாக இருத்தல் வேண்டும் என்ற கோரிக்கையை 1959&ஆம் ஆண்டிலேயே முன்வைத்த இவர், இலங்கை வானொலிக் கல்வி ஒலிபரப்பிலும், கிராம சஞ்சிகைகளிலும் விஞ்ஞான நிகழ்ச்சிகளைப் பல ஆண்டுகளாகத் தமிழிலே திறம்பட நடத்தியவர். என்று இரசிகமணி கனக செந்திநாதன் கூறியிருப்பது நூற்றுக்கு நூறு சரியானது.

1981ஆம் ஆண்டு முதலாவது, பப்புவா நியூகினி நாட்டின் தொலைக்கல்விக் கல்லூரியில் கதை விஞ்ஞானப் பாட அதிகாரியாகப் பணிபுரிந்தார். பிறகு இலங்கை இனப்பிரச்சனையின் காரணமாக அவுஸ்திரேலியாவிற்குப் புலம் பெயர்ந்தார். புலம் பெயர்ந்து ஒதுங்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் அம்பி. பல நூல்களைத் தமிழுக்குத் தந்தார். அவற்றில் புலம் பெயர்ந்த தமிழர்களின் வரலாற்று ஆவணமாக இருப்பது "உலகளாவிய தமிழர்" எனும் நூல். அது கனடா, றொறான்ரோ எஸ்.தி. அகிலன் நினைவாக வெளியிடப்பட்டது. அந்நூலே இனி வரப்போகும் புலம் பெயர்ந்த தமிழர் வரலாற்று நூல்களுக்கு அடித்தளமாகும்.அவருடைய இலக்கியப் படைப்புகள் அவரைத் தலைசிறந்த இலக்கியவாதியாக ஈழத்திலும், புலம்பெயர் தமிழர் மத்தியிலும் அடையாளம் காட்டியுள்ளன.அவரின் படைப்புகள் யாவுமேபட்டப்படிப்பிற்கு உரியனவாகும் .

சிட்னியில் நடந்த நூல் வெளியீடுகளுக்கும், இலக்கிய விழாவிற்கும் சக்கர நாற்காலியில் இருந்தபோதும் வந்தார். அவரை மனம் கோணாது அழைத்து வரும் மகன் திரு பாராட்டுக்குரியவர். 'தமிழ் ஓசை' சிலப்பதிகார விழாவில் தமிழ்நாட்டின் மூத்த தமிழ் அறிஞர் சிலம்பொலி செல்லப்பனால் கவிஞர் அம்பி பாராட்டப்பட்டதை நினைத்துப் பார்க்கிறேன். அது சிட்னியில் வெளிவரும் தமிழ் இதழின் பாராட்டு. அது மட்டும் போதாது, இலங்கைப் பல்கலைக்கழகங்களும், புலம் பெயர்ந்த தமிழ் அமைப்புகளும்அவரைப் போற்ற வேண்டும். அவரின் படைப்புகளைப் பரவும் வகை செய்தல் வேண்டும். அதுதான் 90 வயதை எட்டிப்பிடிக்கும் கவிஞர் அம்பியை வாழ்த்துவதற்கு ஒப்பாகும்.

அளப்பரிய தமிழ்ப் பணியாற்றி அவுஸ்திரேலியத் திருநாட்டில்
அருந் தமிழை வாழவைத்த பெருந்தகை கவிஞர் அம்பி அவர்கட்கு
எம் இனிய 90வது அகவை வாழ்த்துகள்!

பாதி உலகினைச் சுற்றி வந்து
பண்டைய உறவுகள் தேடு நாளில்
ஆதி வேர் சந்ததி கண்டறிய
ஆதாரம் தாய்மொழி பாலர்களே!

எந்த நாடு செற்று வாழ்ந்த போதும்
எந்தச் சூழல் மொழி கற்ற போதும்
சொந்தம் என்று சேரப் பாலம் எங்கள்
சுந்தரத் தேன்தமிழ் பாலர்களே!

ஓடிடுந் தமிழா நில் நீ
ஒருகணம் மனதைத் தட்டு
வீடுநின் னூருன் சொந்தம்
விளைநிலம் நாடு விட்டாய்

தேடிய தெல்லாம் விட்டுத்
திசைபல செல்லும் வேளை
பாடிய தமிழை மட்டும்
பாதையில் விட்டி டாதே!

- கவிஞர் அம்பி

அவுஸ்திரேலியாவில் கவிஞர் அம்பியின் தமிழ்ப் பணி அளப்பரியது. அந்நிய மொழிச் சூழலில் வாழும் தமிழ்க் குழந்தைகளின் அறிவு விருத்தி, செயல்திறன் விருத்தி, மனப்பாங்கு விருத்தி ஆகியனவற்றைக் கருத்திற் கொண்டு விரிவான பாடவிதானத்தை எழுதித்தந்தார். இதனை அடிப்படையாக வைத்து அவரின் பெரும் பங்களிப்புடன் தமிழ்ப் பாடநூல்களும் பயிற்சி நூல்களும் எழுதப்பட்டன.

நியூ சவுத் வேலஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பின் தமிழ்ப் பாடநூல்களையும் பயிற்சி நூல்களையும் உருவாக்கியதில் கவிஞர் அம்பியின் பெரும் பங்களிப்பை நன்றியோடு நினைவுகூரும்,

நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பல்லாண்டு பல்லாண்டு பலநூறு கதை சொல்லி
பசியாற வழிதேடினோம்.
நல்வாழ்வில் நலியாத நயமான கதை சொல்லி
நமர் வாழ வழி கூறினோம்.
வல்லானாம் யாழ்பாடி வளரும் யாழ் இசையாலே
வாழ்கின்ற புகழ் எய்தியே
எல்லோரும் மகிழ் வெய்த எந்நாளும்
யாழ் சொல்லும் கதை சொல்வமே!"

'யாழ்ப்பாணம்' கதையை 'யாழ்பாடி'
என்ற கவிதை நாடகத்தாலும்,
அதை கூத்து வடிவிலும் அரங்கேற
வழி அமைத்தவரே!

அகவை 90 காணும்
தாங்கள் இன்னும் பல்லாண்டு பல்லாண்டு
சுகமாக, நிறைவாக வாழ வாழ்த்துகின்றோம்.

திரு கருணாகரன் நடராஜா குடும்பம்

ஓடிடும் தமிழா நில், நீ ஒரு கணம் மனதைத்தட்டு
வீடுநின்னூருள் சொந்தம், விளைநிலம் நாடு விட்டாய்
தேடியதெல்லாம் விட்டுத்திசைபல செல்லும் வேளை
பாடிய தமிழை மட்டும் பாதையில் விட்டிடாதே

கவிஞர் அம்பி கவிதையில் இருந்து

மூத்த கவிஞர்
அவுஸ்ரேலியாவில் தமிழ் பாட புத்தகத்திற்கு உழைத்தவர்
அகவை 90 காணும் கவிஞர் அம்பி அவர்களை பல்லாண்டு வாழ வாழ்த்து கிறோம்

தமிழ்முரசு அவுஸ்ரேலியா

www.tamilmurasuaustralia.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகவை 90 காணும் கவிஞர் அம்பி
கவிஞர் செ. பாஸ்கரன்

கொஞ்சு தமிழ் நிதமெடுத்து
கொஞ்சி விளையாடும்
விஞ்சு தமிழ் வித்தகனார்
வியக்கவைத்த கவி தந்து
எங்கள் மனங்களிலே
இடம் பிடித்த அம்பி ஐயா
தன்பேனா முனையினிலே
தமிழ் உலகை ஒன்றிணைத்தார்
புன்முறுவல் தவளவிட்டு
புவியோரை அரவணைத்தார்
நல்ல பெரும் கவிஞர்
நாடெல்லாம் போற்றுகின்ற
வெள்ளிமுடிப் பாவாணர்
சிறுவர்க்கு இலக்கியத்தை
செப்பிவிட வேண்டுமென
அம்பி கவிதை என்று
அழகான கவிதந்தார்
சாதனைகள் செய்பவரை
போற்றுகின்ற பண்பாளன்
மருத்துவத்தின் முன்னோடி
சாமுவேல் கிரீனுக்கு
ஆய்வு நூலொன்றை
அழகாக எழுதி வைத்தார்
இலங்கை அரசாலே
முத்திரையும் பதிக்கவைத்தார்
புலம் பெயர்ந்தோர் வாழ்வுதனை
சித்தரிக்கும் ஓர்பாவில்
சாதனைகள் செய்த பலர்
கூனிக், குறுகி, நடை தளர்ந்து
வேற்றுலக மாந்தர்கள் போல்
வெந்து படும் துயரை
"அந்தரஉலகமென்று"
அழகு தமிழ் குறும் பாவில்
அற்புதமாய் சொல்லிவைத்தார்
சொற்சிலம்பமிட்டு
நாடகங்கள் ,கவிவரிகள்
அரிச்சுவடி,
வேதாளம் சொன்ன கதை
எத்தனை எழுதி வைத்தார்
விழி தூக்கிப் பார்க்கின்ற
விந்தைகள் போல் தெரிகிறது
உன்பெருமை சாற்றுதற்கு
என்னால் முடியாது
குழந்தைகளை கவிதைகளால்
கவர்ந்தெடுத்த பெருங் கவி நீ
புலம் பெயர்ந்த தமிழர்க்கு
பாடநூல் தந்தவன் நீ
"ஓடிடும் தமிழனே
ஒருகணம் நில்லடா
பேசடா தமிழினை
வீட்டிலே" - என்று நீ
வீசினாய் கணைகளை
கவியெனும் கல்லினால்
எழுந்தனர் தமிழர் குழந்தைகளோடு
விரைந்தனர் அவர்கள்
தமிழாலயம் நோக்கி
பரந்தது உலகெலாம்
அழகிய தமிழ் மணம்
பழமரம் பழுத்தால்
பறவைகள் கூடும்
கவிஞர் அம்பியைச் சுற்றி
அறிஞர்கள் கூடுவர்
பப்புவா நியூகினி
பாடிய கவிஞன்
பறந்தே வந்தான்
பெருங்கடல் தாண்டி
சிட்னி மண்ணில்
தமிழ்மரம் நாட்டினான்
தமிழைப் பேசியே
செழுமையை ஊட்டினான்
மனைவி, மக்கள்,
மகள் வழிப் பேரர்
தமிழால் இணைந்தவர்
தரணியை போற்றியோர்
உற்றார், உறவினர்
உயரிய நண்பர்கள்
சுற்றம் சூழ அழகிய வாழ்வு
அகவை தொண்ணூறை
தமிழாய், கவியாய்,
அம்பி மாஸ்டராய்
அம்பி ஐயாவாய்,
அம்பி தாத்தாவாய்
அழகுற வாழ்ந்த ஆழிக் கடலே
வெள்ளைத் தேசத்தில்
விரிந்து கிடந்து
தமிழில் கவியை
பாடிடும் குயிலே
இன்னும் பற்பல
ஆண்டுகள் வாழ
பாடிப் பணிகிறேன்
வாழி பல்லாண்டுகள்

நட்புடன்
கவிஞர் செ. பாஸ்கரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பி ஐயா பல்லாண்டு வாழ்க

குலசிங்கம் சண்முகம்
சிட்னி

அது 2017ஆம் ஆண்டு பத்தாம் மாதம். பப்புவா நியூகினியில் செய்துகொண்டிருந்த வேலையில் இருந்து விலகி, சிட்னிக்கு திரும்ப இருந்த காலம். அந்தநாட்டின் தலைநகர் போர்ட் மோஸ்லியிலிருந்து ஒரு தொலைபேசி அழைப்பு. இதுவரை அறிந்திராத புதிய இலக்கமாக இருந்தமையால் யார் பேசுகிறீர்கள் என்று கேட்டேன். " நான் சுப்பிரமணி பேசுகிறேன்" " உங்களை எனக்குத் தெரியாதே, யார் சுப்பிரமணி?" என்னை மேலும் சோதிக்க விரும்பாமல், "நான் அம்பி" என்றார். ஐயோ, ஐயா, நீங்கள் இங்கே எப்படி? என்று பேசத் தொடங்கினேன். "சிட்னிக்குப் போகும் வழியில் இங்கே ஒருதரம் வந்து போம்" என்று கேட்டுக்கொண்டார். இருபது வருடங்களுக்கு முன் அம்பி ஐயாவைச் சந்தித்த அதே வீட்டில் மீண்டும் அவரைக் கண்டேன்

அம்பி ஐயாவையும் அவரது குடும்பத்தினரையும் 1996இல் முதன்முதலாக பப்புவா நியூகினி என்ற நாட்டில் சந்தித்தேன். அம்பி ஐயாவின் மகள் வைத்திய கலாநிதி உமா அவர்கள் தற்போது குடும்பத்துடன் இந்த வீட்டில் வசிக்கிறார். கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இருந்து அங்கு சென்றபோதே, பேராசிரியர் மௌனகுரு அவர்களும், எனது குருவான பேராசிரியர் சித்திரலேகா மௌனகுரு அம்மையாரும், "அம்பி எங்கள் நெருங்கிய நண்பர். அவர் பப்புவா நியூகினி நாட்டின் கல்வித் திணைக்களத்தில் ஆலோசரகராகப் பணி புரிந்து வருகிறார். முடிந்தால் அவரைச் சந்தித்து நாங்கள் சுகம் கேட்டதாகச் சொல்லுங்கள்" என்றனர்.

அந்த நாட்டுக்குச் சென்றதும், அம்பி அவர்களை எப்படிச் சந்திக்கலாம் என்று எண்ணிக்கொண்டிருந்தேன். அங்கு பணிபுரியும் தமிழர்களின் குடும்பங்கள் வார இறுதியில் கூட்டுப்பிரார்த்தனை நிகழ்ச்சிக்காகக் கூடுயிருந்தனர். பிரார்த்தனை முடிந்த பின் ஒருவர் பேசினார் முன்வரிசையில் இருந்து கடைசி வரிசையில் உள்ளவர்கள் அத்தனை பேரையும் கவர்ந்திழுக்கும் கச்சிதமான பேச்சு – கலகலப்பாக, கதை சொல்லும் பாங்கில் இரசிக்கும் வண்ணம் பேசினார். பேச்சு முடிந்ததும் அவரை நெருங்கிச் சென்று பாராட்டிக் கைகொடுத்தேன். என்னை அறிமுகப்படுத்தினேன். அவர், தான் அம்பி என்றார். ஐயா, நீங்கள் தான் அந்த அம்பி? என்று தொடர்ந்து அவருடன் மௌனகுரு சித்திரலேகா தம்பதியரின் செய்தியைச் சொல்லி பேசிக்கொண்டிருந்தேன்.

என்னுடன் புதிதாக அந்த நாட்டிற்கு வந்தவர்களை தன் வீட்டிற்கு அழைத்து நல்ல விருந்து படைத்து உபசரிப்பார். நாங்கள் போனபோது கூட, தட்டச்சில் ஏதோ அடித்துக்கொண்டிருந்தது எனக்கு இன்னமும் ஞாபகமாக உள்ளது 1999இல் என் குடுப்பத்துடன் நான் பப்புவா நியூகினியில் இருந்து சிட்னிக்குக் வந்துவிட்டேன். 2000 ஆண்டில் அமரர் வேந்தனார் இளங்கோவிற்கு அம்பி ஐயா என்னை சிபார்சு செய்ததாக அறிந்தேன். "குலத்தையும் தமிழ்க் கல்வி நிலையத்தில் தமிழ் கற்பிக்கச் சொல்லிப்பாருங்கோ" என்று அவர் கூறியதாகக் கேள்விப்பட்டேன்.

2012-13ஆம் ஆண்டுகளில் அம்பி ஐயா அவர்கள் வசிக்கும் ஹேஸ்றவில் Hurstville இல் அமைந்திருக்கும் அவுஸ்திரேலிய இறைவரித் திணைக்களத்தில் நூலகராகத் தொழில் புரியும் வாய்ப்புக் கிடைத்தது. வேலை முடிய அவரது வீட்டுக்குச் சென்று பலதும் பற்றி இருவரும் உரையாடுவோம். ஐயாவுடன் பழகிய நாட்களில் அவரை ஓர் அரிய நண்பனாக, கவிஞராக, ஆலோசகராக, தமிழறிஞராகக் கண்டிருக்கிறேன். நண்பர் திருநந்தகுமார், பேராசிரியர் ஆ.சி.கந்தராஜா ஆகியோர் அம்பி ஐயாவுடன் எனக்கு இருந்த நட்பினையும் தொடர்பினையும் பேண உதவியவர்கள்.

உமா, தயா, திரு ஆகியோர், மனித நேயத்தையும் அன்பையும், பண்பையும் இயல்பாகவே கொண்டிருக்கும் அம்பி ஐயாவின் அற்புதமான பிள்ளைகள். அம்பி ஐயாவின் மனைவி, அவரது பேரப்பிள்ளைகள் எமது நன்றிக்கும் வாழ்த்துக்கும் என்றும் உரியவர்கள்.

அம்பி ஐயா அவர்கள் பல்லாண்டு வாழ்க என அவரின் தொண்ணூறு வயதில் வாழ்த்துகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

'அன்னவர்க்கே சரண் நாங்களே'

சிங்கக் கவிஞர் அம்பி சீர்நிறைந்து வாழ்கவென்போம்!

பொங்கும் கவிச்சுவையைப் புதிதாக்கி ஆற்றலினால்
எங்கும் விரித்தீழம் ஏற்றமுறச் செய்த மகன்
தங்கும் தமிழ் மரபின் தரம்மறிந்த பேரறிஞன்
மங்காப் புகழ் கொண்ட மாசில்லா மாகவிஞன்

திங்களின் குளிர்ச்சியைத் தித்திக்கத் தேன்கலந்து
பங்கம் உறாமல் பருகுகின்ற அமுதாக்கி
சங்கினால் ஊட்டும் தமிழ்க்கவிதை சுரந்திட்ட
சிங்கக் கவிஞர்அம்பி சீர்நிறைந்து வாழ்கவென்போம்!

அன்புடன்,
-அவுஸ்திரேலியக் கம்பன் கழகத்தினர்

வாரந்தோறும் நிகழும் கம்பன் வகுப்புகள்:

- சிறுவர்க்கான வகுப்பு: வெள்ளி மாலை 7:30 மணி முதல் – 8:30 மணி வரை.
- இளைஞர்க்கான வகுப்பு: ஞாயிறு காலை 7:30 மணி முதல் – 9:00 மணி வரை.

(வகுப்புகள் தொண்டு ரீதியானவை – இணைய விரும்புவர்கள் தொடர்பு கொள்க 0432 796 424)

அவுஸ்திரேலியக் கம்பன் கழகம் – நடைபெறவிருக்கின்ற நிகழ்வுகள் (2019):

- **06.05.2019** 'வெல்லும் சொல்' திறனாளர் தேர்வுப் பேச்சுப் போட்டி
- **04.08.2019** இசை வேள்வி 2019– பஹாய் மண்டபம், சில்வர் வாட்டர்
- **12 -13.10.2019** கம்பன் விழா ரெட்கம் மண்டபம், வென்ற்வேர்த்வில்
  (காலை 9.30 மணி முதல் மற்றும் மாலை 5.00 மணி முதல்)
- **14 -16.10.2019** ஞான வேள்வி 2019 (மாலை 7:00 மணி)
  இலக்கியப் பேருரை நிகழ்வு, ரெட்கம் மண்டபம், வென்ற்வேர்த்வில்.

"கம்பன் புகழ்பாடிக் கன்னித்தமிழ் வளர்ப்போம்"

அவுஸ்திரேலியக் கம்பன் கழகம்
Kamban Kazhagam Australia

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் மருத்துவ முன்னோடி கிறீன் பற்றிய கவிஞர் அம்பியின் எழுத்தும் ஓர் அவுஸ்திரேலியத் தமிழ் இளைஞியின் பார்வையும்

திருமதி நிஷேவிதா அஷ்வின் பாலசுப்பிரமணியன்

அம்பி ஐயாவிற்கு தொண்ணூறாவது பிறந்த நாள் விழா கொண்டாடப் போகிறார்கள் என்று அறிந்ததும் அவருடைய புத்தகங்களை எல்லாம் தேடிப் படிக்க ஆரம்பித்தேன். அவற்றுள் என்னை மிகவும் கவர்ந்தது மருத்துவ முன்னோடி டாக்டர் சாமுவல் கிறீன் பற்றி அவர் எழுதிய நூல். இந்தப் புத்தகத்தை ஆங்கிலத்திலும் தமிழிலும் மிகவும் அழகாக எழுதியிருக்கின்றார். இரண்டு புத்தகங்களையும் வாசித்து மகிழ்ந்தேன். இந்த புத்தகங்களைப் படித்ததும், எனக்கு ஏற்பட்ட வியப்பிற்கும் ஆச்சரியத்திற்கும் அளவே இல்லை.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்ற பாரதியின் வாக்கை உண்மைப்படுத்துவது போல ஒரு அமெரிக்கர் தமிழ் மொழியைக் கற்று, தமிழர்களோடு வாழ்ந்து, தமிழிலே தமிழர்களுக்கு ஒரு புதிய துறையைக் கற்பித்து, தமிழிலே எண்ணற்ற அறிவியல் விஞ்ஞான நூல்களை மொழிபெயர்த்து, தமிழிலே அகராதிகளை உருவாக்கி, தமிழிலே வரலாறு படைத்த கதை தான் இது.

1880 களில் இலங்கை ஆங்கிலேயரின் குடியேற்ற நாடாக இருந்த காலத்தில் கிறிஸ்தவ மதத்தையும் வைத்தியத்தையும் போதிப்பதற்காகப் பல அமெரிக்க மிஷன் ஊழியர்கள் இலங்கைக்கு வந்தார்கள். அவர்களில் ஒருவராக வந்தவர் தான் டாக்டர் கிறீன். தன்னலம் கருதாது சேவையாற்றிய ஒரு உன்னதமான மனிதர். இதிலே ஆச்சரியம் என்னவென்றால், தான் எந்த மக்களுக்குச் சேவை செய்ய வந்தாரோ அந்த மக்களின் மொழியைக் கற்ற பின்னர்தான் அந்த மண்ணில் காலடி எடுத்து வைத்தார். அவர்களுடைய மொழியைப் பேசுவதன் மூலம் அவர்களை நன்கு புரிந்துகொண்டு உணர்வு பூர்வமாகச் சேவை ஆற்றலாம் என்றெண்ணினார்.

இரண்டல்ல மூன்றல்ல இருபது ஆண்டுகள் தமிழ் மக்களுடன், மருத்துவராகச் சேவையாற்றி வாழ்ந்தது மட்டும் அன்றி மருத்துவத்தைத் தமிழ் மாணவர்களுக்குக் கற்பித்தார். அதிலும் அவர் செய்த வியப்பிற்குரிய விடயம் என்னவென்றால், மேனாட்டு வைத்தியத்தைத் தமிழர்களுக்குத் தமிழிலே கற்றுக் கொடுக்கின்ற ஒரு துணிச்சலான காரியத்தை ஆரம்பித்து அதை நடை முறைப்படுத்திக் காட்டியதுதான். தனது தமிழ் மொழிப் புலமையைத் தொடர்ந்து வளர்த்துக் கொண்டு முறையான பாடத்திட்டங்களை வகுத்தார். பல மருத்துவ விஞ்ஞானப் புத்தகங்களை எல்லாம் ஆங்கிலத்தில் இருந்து தமிழில் மொழி பெயர்த்ததோடு, தான் ஆங்கிலத்தில் பயிற்றுவித்த மாணவர்களை அவர்கள் கற்ற விடயங்களைத் தமிழிலே மொழிபெயர்க்குமாறு ஊக்குவித்தார். இதைத்தான் பாரதி பாடினான் *"பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்"* என்று. அதை நனவாக்கிக் காட்டினார் டாக்டர் கிறீன் அவர்கள்.

இவ்வாறு அவர் பல நூல்களை மொழிபெயர்க்கும்போது அவருக்கு ஒரு பெரிய சவால் ஏற்பட்டது. பலமருத்துவச் சொற்களுக்கு இணையான கலைச்சொற்கள் தமிழில் இருக்கவில்லை.

தளர்ந்து விடவில்லை டாக்டர் கிறீன். நீங்கள் சொன்னால் நம்ப மாட்டீர்கள் டாக்டர் கிறீன் அவர்கள் தமிழில் விஞ்ஞானக்கலைச் சொற்களைத் தானே உருவாக்கினார். வைத்தியக் கல்விக்குத் தேவையான கலைச்சொல் அகராதி ஒன்றும் ஆங்கிலத் தமிழ் அகராதி ஒன்றும் தயாரித்தார். அப்படி உருவாக்கிய கலைச் சொற்கள் எல்லாத் தமிழ் மக்களுக்கும் பொதுவானதாக இருக்க வேண்டும் என்று பலருடன் தொடர்பு கொண்டு அதை நிரூபணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தார். இவ்வாறு மிகக் கவனமாக எமது சமூகத்தின் நன்மை கருதி டாக்டர் கிறீன் செய்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்களை பல சிரமங்களுக்கு மத்தியில் தேடித் தொகுத்து எங்கள் தமிழ் உலகத்திற்காகத் தந்திருக்கிறார் அம்பி ஐயா அவர்கள்.

இந்தப் புத்தகத்தைப் படித்து முடித்தபின் என்னுள் பலவகையான உணர்வுகள் எழுந்தன. வியப்பு, கவலை, ஆச்சரியம், நாங்கள் தமிழர்களாக என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்ற தலை குனிவு, நம் மொழிக்கும் நம் தாய் மண்ணிற்கும் ஏதாவது செய்ய வேண்டும் என்ற எழுச்சி, இப்படிப் பல உணர்வுகள் மேலோங்கின. இந்நூலில் பல இடங்களில் அம்பி ஐயா சொல்லும் செய்திகள் எம்மைத் தட்டி எழுப்புகின்றன.

முக்கியமாக, ஒரு அந்நியராகிய கிறீன் அவர்கள் எங்கள் மொழி மீது எவ்வளவு நம்பிக்கை வைத்திருந்தார், அந்த நம்பிக்கையையும், தமிழ்ச் சமூகத்தின் மேல் இருந்த பற்றையும் புலம் பெயர்ந்த தமிழர்கள் ஆகிய நாங்கள் எங்கள் மனதில் ஆழப் பதிய வைப்பது முக்கியம் என்று இந்த புத்தகம் எடுத்துக் காட்டியது.

புலம் பெயர்ந்த தமிழர்களாகிய நாங்கள் இன்னும் எவ்வளவோ செய்ய வேண்டும் என்ற ஒரு தூண்டுதலையும் இந்த புத்தகம் எனக்குத் தந்தது. எங்கள் வரலாற்றைப் பற்றி அறியவேண்டும், இவரைப் போன்று தமிழிற்குத் தொண்டு செய்தோரைப் பற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டும், அடுத்த தலைமுறையினரிற்கும் இதை எடுத்துச் செல்ல வேண்டும் என்ற ஊக்கத்தையும் இந்த புத்தகம் எனக்குத் தந்தது.

மேலும் இந்தப் புத்தகத்தில் நான் மிகவும் ரசித்தது, அம்பி ஐயா அவர்கள் ஒவ்வொரு அதிகாரத்திலும் ஒரு பொருத்தமான திருக்குறளை எடுத்து, அதை கிறீன் அவர்கள் செய்த தொண்டிற்கு தொடர்பு படுத்தி எழுதியிருப்பது தான். எமது பொய்யா மொழிப் புலவர் சொன்னது போல், கிறீன் அவர்கள் எவ்வாறு ஓர் உயர்ந்த முறையில் வாழ்ந்திருக்கிறார் என்று அம்பி ஐயா அவர்கள் எடுத்துக் காட்டியிருக்கின்றார். இத்தகைய உயர்ந்த பண்புகள் கொண்ட கிறீனை, தமிழ் உலகம் என்றென்றும் நன்றியோடு நினைத்துப் பார்க்க வேண்டும். அதை விட, கிறீனைப் பற்றிய தகவல்களைத் தேடி ஆராய்ந்து எழுதிய அம்பி ஐயா அவர்கள் அதற்கும் மேலாகப் பாராட்டப்பட வேண்டியவர். இந்த நூலின் மூலம் அம்பி ஐயா அவர்கள் தமிழிற்கும் தமிழர்களுக்கும் செய்த பெரும் பணியைப் பாராட்டுவதற்கு எனக்கு வார்த்தைகளே இல்லை, வயதும் இல்லை, வணங்கத்தான் முடியும். அம்பி ஐயாவின் பாதகமலங்களுக்கு எனது வணக்கத்தைச் சமர்ப்பிக்கிறேன்.

இந்த விழாவை ஒழுங்குபடுத்தியவர்களுக்கும் நான் கடமைப்பட்டு இருக்கின்றேன். இந்த விழாவை வைக்கவில்லை என்றால் எனக்கு கிறீன் அவர்களைப் பற்றித் தெரியாமலே போயிருக்கும். இதற்கு முன், பாராட்டு விழாக்களின் முக்கியத்துவத்தை நான் முழுதாக அறியவில்லை. அது தமிழர்களின் மிகச் சிறந்த ஒரு பண்பாடு. சமுதாயத்திற்கு சேவை செய்தோரை இனம் கண்டு, அவர்கள் வாழும் காலத்திலிலேயே அவர்களிற்கு நன்றி சொல்லி கௌரவிப்பது எங்கள் கலாசாரத்தில் ஒரு முக்கிய அம்சமாகும். அந்த வகையில் அம்பி ஐயாவிற்கு விழா எடுக்கின்ற ஒழுங்கமைப்பாளர்கள் மிகவும் பாராட்டிற்குரியவர்கள். இந்தப் பாராட்டு விழாவில் வெளியிடப்படுகின்ற விழா மலரில் என் கட்டுரையும் அமையப்பெறுகின்றது என்பதில் மட்டற்ற மகிழ்ச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பி ’90

வெல்க!

ஆழிகள் அலைகள் தாண்டி
அருந் தமிழ் வாழ்க என்றும்
வாழ்க நம் கலைகள் என்றும்
வளம் பல பெறுக என்றும்
ஆளும் நன்நிலைக்கெஞ் சொத்தை
அகமுவந் தெடுத்துச் சென்று
தோளிலே சுமக்கும் சேவை
சொல்லரும் பணியே அம்மா!

தமிழ் மொழிப் பற்றால் நெஞ்சம்
தழைத்துயிர் துரமும் பெற்றோர்
அமிழ்தெனும் இலக்கியப்பெண்
அணைப்பினால் ஆர்வம் பெற்றோர்
தமதுளம் மலரப் பாரினில்
தமிழ்பணி வளர்க என்றும்
அமைதியாய்ச் சேவை செய்க
அரும்பணி தொடர்ந்து வெல்க!

பழைமையை ஆய்ந்து கற்றப்
பரப்பினைப் பசுமை செய்து
வளமெலாம் ஆய்ந்த பின்னர்
வருநிலைக் கேற்ப எங்கள்
அழகுறு தமிழும் பண்பும்
அணிவகுத் தோங்கி வாழக்
கழகமொன்றமைத்துப் பல்நாள்
கணித்தமிழ் பணிகள் வெல்க!

எத்தொழில் செய்தால் என்ன
எம்மொழி கற்றால் என்ன
எத்திசை சென்று வாழ்வை
இயக்க நீர் முயன்றால் என்ன
அத்திசை எல்லாம் எங்கள்
அருந்தமிழ் வளரப் பாதை
நித்தியம் அமைத்து வாழ்க
நின்றுநும் பணிகள் வெல்க!

- அம்பி கவிதைகள்
மித்ரா வெளியீடு, 1994
பக்: 51 – 52

‘ஈழத்துத் தேசிக விநாயகம்பிள்ளை’
கவிஞர் அம்பியின்
சமூகப் பங்களிப்பை வாழ்த்தி வணங்குகிறோம்

உயர்திணை
சிந்தனைகளின் சங்கமம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் அம்பி

எஸ். விஸ்வநாதன்
சிரேஷ்ட ஊடகவியலாளர்
இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபன தமிழ் நிகழ்ச்சிகள் முன்னாள் பணிப்பாளர்

இலங்கையில் 1960ம் 70ம் மற்றும் 80ம் ஆண்டுகளின் தொடக்கங்களில் கல்வித்துறையிலும் தமிழ் ஊடகத்துறையிலும் மிகவும் பிரசித்தி பெற்ற பெயர்களுள் ஒன்று கவிஞர் அம்பி என்ற பெயராகும். தமிழ் மொழியில் மட்டும் அல்லாமல் ஆங்கிலத்திலும் பணியாற்றக்கூடிய இவரது புலமை பலராலும் போற்றப்பட்டதாகும். இவரது கவித்துமான பல படைப்புக்களை இன்றைய காலகட்டத்தில் உள்ள உலகெங்கும் வாழும் தமிழரின் இளம் தலைமுறையினரும் கற்று அறிவூட்டம் பெற்று பயனடைந்து வருவதை நாம் கண்கூடாகக் கண்டு பெருமைப்படுகின்றோம். அம்பிப் பாடல் என்ற நூல் தொடக்கம் இன்னும் பல எண்ணிக்கையில் குழந்கைளுக்கான மற்றும் சிறுவர்களுக்கான படைப்புக்களை இவர் உருவாக்கித் தந்துள்ளார். கல்வி அமைச்சின் கல்விப் பாடத்திட்ட திணைக்களத்தில் இவர் பணியாற்றிய காலப்பகுதியில் முறைசார் கல்விக்கு இவர் வழங்கிய பங்களிப்பு அளப்பரியதாகும். இவரது இலக்கியம் சார்ந்த படைப்புக்கள் ஏராளமானவை. இலங்கையின் பிரதான பத்திரிகைகள் மற்றும் சஞ்சிகைகளில் இவை தொடர்ச்சியாக வெளிவந்துள்ளன. விஞ்ஞானத்துறையிலும் இவரது ஆக்கங்கள் பல வெளிவந்துள்ளன. குறிப்பாக இவர் இலங்கை வானொலியின் தமிழ்ச்சேவையில் வாரந்தோறும் நடத்திவந்த அகல்விளக்கு என்ற விஞ்ஞான சஞ்சிகை நிகழ்ச்சியானது மிகவும் பயன்மிக்கதாகவும் பிரபல்யமாகவும் விளங்கியதை வானொலி நேயர்கள் மறந்திருக்க மாட்டார்கள். இராமலிங்கம் அம்பிகைபாகன் என்ற இயற் பெயர் கொண்ட கவிஞர் அம்பியின் பல்துறை ஆற்றல் பலரையும் வியக்க வைத்தது. ஒரு விஞ்ஞான, கணிதபாட ஆசிரியராக, கவியரங்கங்களில் கவிபாடும் புலவராக, நாடக மேடைகளில் நாடக ஆசானாக, கலையரங்கங்களில் ஆடல் பாடல் நிகழ்ச்சிகளை உருவாக்கித்தரும் பாடலாசிரியராக, பிரதி எழுத்தாளராக, வானொலி மற்றும் தொலைக்காட்சிகளில் ஒரு தலைசிறந்த ஊடகவியலாளராக, பத்திரிகையாளராக பல பரிமாணங்களில் கவிஞர் அம்பியைக் கண்டு நாம் வியந்துள்ளோம். உண்மை, திறமை, நேர்மை, கடும் உழைப்பு, அர்ப்பணிப்பு இவற்றுக்கெல்லாம் உதாரணமாத் திகழ்பவர் கவிஞர் அம்பி. எக்காலத்திலும் தனது தனிப்பட்ட நலன் கருதியோ அல்லது பொருளீட்டும் நோக்கத்துடனோ அவர் செயற்பட்டது கிடையாது. புதியவர்கள் பலரை அவர் கலைத்துறையிலும் ஊடகத்துறையிலும் வாய்ப்புக்கள் பல வழங்கி அறிமுகப்படுத்தியுள்ளார். இறைவன் அவருக்கு சகல செல்வங்களையும் வழங்கியிருப்பதைக் கண்டு நாம் பூரிப்படைகிறோம். 1980ம் ஆண்டுகளின் ஆரம்ப காலத்தில் அவர் புலம் பெயர்ந்து, தற்போது அவுஸ்திரேலியாவில் வசித்து வருகிறார். அங்கும் அவரது கலை இலக்கியப் பணி தொடர்ந்தது. சமீபத்தில் அவர் தனது 90வது அகவையைப் பூர்த்தி செய்து விழாக்கண்டுள்ளார். இன்னும் பல்லாண்டுகள் அவரது சேவையானது தமிழ் கூறும் நல்லுலகிற்குக் கிடைத்திட எல்லாம் வல்ல இறைவன் அவருக்கு நல்லாரோக்கியம், நீண்ட ஆயுளை நல்கிட வேண்டும் என நான் பிரார்த்திக்கின்றேன்.

வணக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்போக்குப் படைப்பாளிகள் (1959 அல்லது 1960 இல் எடுக்கப்பட்ட புகைப்படம்)
(இருப்பவர்கள் இ-வ) 1. வி. ஏ. கந்தசாமி 2. டானியல் 3. முருகையன் 4. கனக செந்தில்நாதன்
5. இளங்கீரன் 6. செ. கணேசலிங்கன்

(நிற்பவர்கள் இ-வ) 1. டொமினிக் ஜீவா 2. பசுபதி (யாழ்ப்பாணக் கவிராயர்) 3. மாணிக்கவாசகர்
4. நீர்வை பொன்னையன் 5. அம்பி 6. தம்பிராஜா 7. நாவேந்தன்

Loving Memories...

Ambi with family members (1968) after receiving the Gold Medal in Madras

Ambi with Amma (1968) After receiving Gold Medal from MGR at the International Tamil Poetry Award in Madras

Ambi at a Union College function in Tellipalai

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Ambi with sisters and a brother

Ambi with brothers

Ambi with the family

President Chandrika Kumaratunga presenting Ambi with the Sahithya Award for children's literature in Colombo, 1995

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Ambi receives Tamil Mani award from the State Minister of Education, Ms R Pulendran. Another State Minister D.P Thevaraj is next to her. Colombo 1998

Jayanthy Vinothan receiving a copy of 'Scientific Tamil Pioneer - Dr Samuel Fisk Green Colombo 1998

Mauritius Prime Minister Anerood Jugnauth greets Ambi during the 7th World Tamil Conference 1989

Ambi with Mauritius Minister of Education Mr Armoogum Parasuramen in Mauritius 1989

Ambi with Mauritian Tamil Teachers

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Ambi with then PNG Prime Minister, Sir Julius Chan, at the book launch of 'Ambi's Lingering Memories' in Port Moresby, Papua New Guinea, 1993

Ambi with the chief guest, Phan Thi Kim Phuc, referred to as the Napalm Girl informally, Toronto 1998

Ambi decorated with the Tamil Scholar C.W. Thamotharampillai Memorial Award, Toronto 1998

Ambi at the Tamils' Information Awards Ceremony in Toronto, Canada, 1998

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Ambi, with Prof A.S Kantharajah, being honoured in Melbourne, 1997

Ambi presiding over the Poet's forum in Sydney, 1992

Felicitated at Homebush Tamil School function, 2001

Ambi and wife with the grandson of Dr Samuel Fisk Green, 1974

Ambi paying his respects to Dr Green, 1974

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

At his 75th birthday celebration 2004

With Sri Lankan artist A. Ragunathan from France, 2011

Ambi with Annavilyaar Ilaya Pathmanathan Sydney 2005

At a book release by Kavingar C. Paskaran 2016

Speaking at Thamilar Thakaval Award Ceremony - 1998

At Union College Old Students' Association function, 2018

With writer Kavaloor Rajadurai, 2007

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணாந்து பார்க்கிறேன்...

செந்தமிழாலே கவிபாடும் புலவரே
பாவுக்கும் நாவுக்கும் உயிர்தந்த அன்பரே
புலம்பெயர்ந்து நிலையுயர்ந்த நம் தமிழரே

பிரகாசம் வீசும் கலங்கரை வெளிச்சம் நீர்
வீரியம் பேசும் வியத்தகு வித்தகர் நீர்
அன்புள்ள இதயத்தின் சொந்த உருவம் நீர்
பண்புள்ள இனத்தின் புது அடையாளம் நீர்

கற்றவர் அவையில் நின்று ஜெயித்தவரே
வற்றாத நதியென வாழ்ந்து செழித்தவரே
நீர் தெள்ளிய தேனிலும் இனிமையானவர்
ஒரு நித்தியக் கருணையின் அரும் பொக்கிஷம்

கம்பனின் காவியம் கண்டெடுத்த உருவமே
கடவுளைப் போன்ற கலையின் வடிவமே
உமது வாய்சொற்கள் வளைந்தாடும்வேளை
தமிழ்த்தாயின் மகனை கண்ணெதிரில் கண்டோம்

காலத்தை இரையாக்கி அறிவை உரமாக்கி
கனத்த சங்கதியை கச்சிதமாய் தருபவரே
உமது புன்னகை சிந்தும் எழில்மயம் கண்டு
எமது கண்ணாடி உள்ளங்கள் மகிழக் கண்டோம்

குற்றம் பொறுக்கும் குண மாமலையே
நற்றமிழ் வாழ நலன் காக்கும் நல்லவரே
உமது உடைபடாத உறவுகளின் நீட்சியில்
வழிகாட்டும் வல்லமைகள் மிளிரக் கண்டோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளர்ச்சியற்ற உமது விடா முயற்சியும்
பயிற்சி பெற்ற உமது மன வளர்ச்சியும்
பழக்கத்தில் தொலையாத உமது சிந்தனையும்
எமது வாழ்க்கைத் தேடலின் வழிகாட்டிகள்

நினைவுகள் தாலாட்டும் விளையாட்டுத் தோழரே
தமிழ் தேடும் போதெல்லாம் நீர் தென்பட்டீர்
தமிழ் வாடும் போதெல்லாம் தண்ணீர் ஊற்றினீர்
உம் நேசத்தின் பாரம் கடுகளவும் குறையவில்லை

நாளுக்கு நாள் புதுநாள் எடுத்து – நாற்றிசையும்
எண்ணியதைப் பிடிக்க எட்டியெட்டிச் செல்பவரே
பச்சைப் பனிப்புல்லும் வெண்பஞ்சு மேகமும்
நீர் போகும் இடமெங்கும் பாதை அமைக்கட்டும்

சிகரம் தொட்ட சித்திரச் செம்மலே – உம்மால்
வறண்ட வயல்கள் பெரும் விளை நிலமாகின
காலியான மனங்கள் காத்தாடிபோல் பறந்தன
நாளைய தலைமுறை உம்மைப்போல் வளரட்டும்

உச்சத்து வான்வெளியில் ஊஞ்சல் கட்டி மகிழ்ந்தவரே
தாலாட்டும் தாய்மடியும் வார்த்தைக்குள் தந்தவரே
நீர் எதைச் சொன்னாலும் எம் இதயம் சுகமாகும்
கரைகடந்து பொங்கட்டும் உமது அன்பு வெள்ளம்

எங்கள் வெண்கல விளக்கே என்றும் வீழாத நட்சத்திரமே
பற்றாக்குறை உலகில் தமிழை முத்தமிட வந்தவர் நீர்
ஓர் தத்துவப் பிணைப்பில் உம்மை வாழ்த்துகிறோம்
எம்மை விட்டு விலகாது என்றும் எங்கள் தமிழாவீர்

நன்றியுடன்
சௌந்தரி கணேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இடம்பெயரும் நாளில் இதயகனம ஏறி
இனநினைவு தடுமாறி னும்
நடையுடைகள் மாறி நமதுணவு மாறி
நமதுபுலம் தினம்மாறி னும்
விடோமிதென வாழும் விரி உலகிற் பேணும்
விரதம் எழுந் தெமர்நெஞ்சிலே
தொடருவது யாது தமிழரடை யாளம்
சுழனுலகில் அதுவாகுமே!"

- அம்பி கவிதை

அன்புடன்
ரஞ்சகுமார் குடும்பத்தினர்

அகிலமே வாழ்க

- அம்பி கவிதைகள்

ஒன்றென்றால் ஒன்றாய் ஒன்றும்
இன்றென்றால் இன்றாய் என்றும்
நன்றென்றால் நன்றாய் நன்றே
அன்றென்றால் அன்றே ஆகி
அன்றொன்றாய் இன்றும் ஒன்றாய்
அன்றின்றென் றொன்றும் இன்றி
என்றென்றும் ஒன்றே யான
ஒருவன்பொற் பாதம் போற்றி

ஒருவன் பொற்பாதம் போற்றி
ஒண்டமிழ் மறைநூல் பற்றி
வருமுணர் வினிலே நற்றாள்
வாலறி வாளன் சால்பு
திரிபிலா தொளிரக் கண்டும்
திருவுளங் கனியக் கண்டும்
அரியவாழ் வெடுத்த மாந்தர்
அகிலமே வாழ்க மாதோ!



அன்புடன்
கானா பிரபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் அம்பி அவர்கள் யாத்த, யூனியன் கல்லூரிக் கீதம்

நாகரட்ணம் சுகிர்தன்
தலைவர், யூனியன் கல்லூரி பழைய மாணவர் சங்கம், சிட்னி.

கவிஞர் அம்பி என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப்படும் இராமலிங்கம் அம்பிகைபாகர் அவர்களின் மரகதவிழா மலருக்கு, வாழ்த்துரை எழுத வாய்ப்புக் கிடைத்ததை எண்ணி, நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். அம்பி அவர்கள் பதினெட்டு ஆண்டுகள் யாழ்-தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் விஞ்ஞான கணித ஆசானாகப் பெரும் பணியாற்றியவர். இக் காலத்திலேதான் அவர் எமது கல்லூரியின் தேவை கருதி, கல்லூரிக் கீதத்தை திறம்பட இயற்றி எமது கல்லூரிக்கு பெருமை சேர்த்தார். செந்தமிழில் இவர் யாத்த, பொருள் பொதிந்த கல்லூரிக் கீதம் இன்றும் பலராலும் விதந்து பேசப்படுகிறது. அம்பி அவர்களின் கல்லூரிக் கீதத்துக்கு திறம்பட இசையமைத்த பெருமை, எங்கள் ஆசிரியர் உயர்திரு தொம்மைக்குட்டி அவர்களைச் சாரும்.

அம்பியின் கல்லூரிக் கீதத்தை இன்றுவரை பல்லாயிரக் கணக்கான மாணாக்கர்கள் தினமும் பாடசாலை நாட்களில் பாடி உயிர் கொடுத்துக் கொண்டு இருக்கின்றார்கள். அது மட்டுமன்றி உலகமெங்கும் பரந்து வாழும் யூனியன் கல்லூரி பழைய மாணவர்களும் தங்களது வருடாந்த நிகழ்வுகளில் இவரது யூனியன் கல்லூரிக் கீதத்தைப் பாடி மென்மேலும் சிறப்பையும் பெருமையையும் தேடித் தருகிறார்கள். கவிஞர் அம்பி அவர்கள் புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் இன்றுவரை யூனியன் கல்லூரியுடன் ஏதோ ஒரு வகையில் தொடர்புடனேயே இருந்து வருகிறார். அந்தவகையில் யூனியன் கல்லூரி பழையமாணவர் சங்க, சிட்னி கிளை ஏற்பாடு செய்த வருடாந்த இராப் போசன நிகழ்வொன்றில் பிரதம விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தார். அதன் பின்னர் சிட்னியில் நடைபெற்ற யூனியன் கல்லூரியின் 200 ஆண்டுகள் நிறைவு விழாவின் போது, சக்கர நாட்காலியில் வருகை தந்து, விழா நிறைவு பெறும்வரை இருந்து அந்த நிகழ்வை சிறப்படையச் செய்தமை இன்றும் எமது மனங்களில் அழியாத சித்திரமாக அமர்ந்திருக்கிறது. கவிதை, நாடகம், சிறுகதை, கட்டுரை, விமர்சனம், ஆய்வு என பல நூல்களை எழுதியிருக்கும் கவிஞர் அம்பி ஐயா அவர்கள், தமிழ் மொழி வளர தொடர்ந்து தொண்டாற்றி உலகளாவிய ரீதியில் எண்ணற்ற பல உயர் விருதுகளையும் பதக்கங்களையும் பெற்றுக் கொண்டவர். எமது கல்லூரிக் கீதத்தில் வரும் 'வாழ்வுக் கிலக்கியமாய் வளர்ச்சிக் கிலக்கணமாய்...' என்ற அவரது கவிதை வரிகள் போன்று இன்றும் வாழ்வாங்கு வாழ்பவர். அவரது சேவை தொடர்ந்தும் தமிழுக்குப் பல்லாண்டு காலம் கிடைக்க வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனை வணங்கி, யூனியன் கல்லூரி பழைய மாணவர் சங்கம் சிட்னி சார்பாக வாழ்த்துகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அன்புப் பாலர் வாருங்கள்
அம்பிப் பாடல் பாருங்கள்"

என்று இலகு தமிழில் கொஞ்சும் மொழியில் குழந்தைகளை அரவணைத்த கவிஞர் அம்பி எமது ஆசிரியர்களுக்கும் பல ஆண்டுகளாகப் பட்டறைகள் நடாத்தி பயனுற வழிகாட்டியவர். தொண்ணூறாவது அகவையில் கவிஞர் அம்பி அவர்களுக்கு சிட்னி வாழ் தமிழர்கள் நடாத்தும் பாராட்டு விழாவில் நாமும் அன்புடன் வாழ்த்தி மகிழ்கிறோம்.

- தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

"எத்திசை சென்றவர் ஏனும் - என்றும்
என்னவர் என்னவர் அன்றோ?
புத்தம் புதியதோர் வாழ்வு - நாளை
பூத்துக் குலுங்குதல் வேண்டும்."

- அம்பி கவிதை

அன்புடன்
உஷா ஜவகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Honour where Honour is due

V.Gunaratnam

Retd. Deputy principal, Union College

எனது நண்பனும் சக ஆசிரியருமாகிய கவிஞன் அம்பியின் 90ஆவது அகவையை நினைவுகூர்ந்து கௌரவிக்கும் வைபவத்தில் கலந்து கொள்ள இயலாமைக்கு பெரிதும் வருந்துகிறேன்.

வாழ்க்கை வாழ்வதற்கே. எப்படி வாழ்ந்தோம் என்பதல்ல. எதனைச் சாதித்தோம் என்பதே வேண்டற்பாலது. அம்பி அவர்கள் தனது நீண்ட வாழ்வில் கல்விக்காற்றிய சேவை எண்ணில் அடங்கா. கவிஞரின் அறிவு ஆற்றல் இவற்றைக் கருத்தில் கொள்ளும்போது 'கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றதெல்லாம் எற்றே இவர்க்கு நாம்' என்ற குறள் மனதில் எழுகின்றது. பத்துவயது பால்யம். இருபதுவயது வாலிபம். முப்பதுவயது மூர்க்கம். நாற்பதுவயது நாட்டம். ஐம்பதுவயது அயதி. அறுபதுவயது ஆட்டம். எழுபதுவயது ஓட்டம். இதற்கு மேலான ஒவ்வொரு வயதும் ஆண்டவன் அளிக்கும் அன்பளிப்பு என்றே கருதவேண்டும். பரிசுத்த வேதம் கூறுகிறது "உன் ஆயுசு நாட்கள் எழுபதுவருடம். பலத்தின் மிகுதியால் எண்பதுவருடம் வாழ்ந்தாலும் அவற்றின் மேன்மையானவை வருத்தமும் சஞ்சலமுமே" அம்பி அவர்கள் தம் நீண்ட வாழ்நாளில் வருத்தம் அடைந்திருக்கலாம். ஆனால் அவர் சஞ்சலம் அடையவில்லை. மனைவி பிள்ளைகள் அவரைக் கண்ணும் கருத்துமாய் பாதுகாத்துள்ளார்கள். அவரும் கண்ணியம்மிக்க கணவராகவும் பாசமுள்ள தந்தையுமாக வாழ்ந்து வருகின்றார் என்பது வெளிப்படை.

பிரபல எழுத்தாளனான அம்பியின் ஆக்கங்கள் பல. அவற்றில் இரண்டைக் குறிப்பிடுகிறேன். மானிப்பாய் ஆஸ்பத்திரியின் ஸ்தாபகர் Dr.Samuel Fisk Green அவர்களின் அரும்பணிகள். இதை தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதி வெளியிட்டார். அத்துடன் அமெரிக்கா சென்று Dr.Green அவர்களின் சமாதியைத்தரிசித்து அஞ்சலியும் செலுத்தி வந்தார். எவ்வளவு பாராட்டத் தக்க விஷயம். யூனியன் கல்லூரிக் கீதத்தை ஆக்கிய பெருமை அவரையே சாரும். அந்தக்கீதத்தின் பின்வரும் அடிகள் என் இதயத்தில் ஆழமாகப்பதிந்தன.

"வாழ்வுக்கிலக்கியமாய் வளர்ச்சிக்கிலக்கணமாய் ஆழ்கடலுக்குயிரை அர்ப்பணித்திங்குயிர்த்தே சூழிருள் கொய்தேயன்று சுடரொளி ஏற்றவந்த ஊழியர் உள்ளமென உயர்ந்திலங்குமாலயங்கள்" கவிஞர் அம்பியை அரை நூற்றாண்டுக்கு மேலாக அறிவேன். அவர் தந்தையாரின் இறுதிச்சடங்கில் முழுமையாகப் பங்குபற்றும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. எங்கள் இருவரின் வாழ்க்கையில் ஏற்பட்ட சுவாரஸ்யமான ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிட விரும்புகிறேன்.

61ஆண்டுகளுக்கு முன்பு புதுமணத்தம்பதிகளாக நானும் எனது மனைவியும் கவிஞர் அம்பிவீட்டுக்கு விருந்தாளராகச் சென்றோம். தவறுதலாக அடுத்த வீட்டுக்கு சென்றுவிட்டோம். அங்கே ஒரு மனநலம் குறைந்த அம்மையார் வந்தார். எங்களிருவரையும் ஊடுருவிப்பார்த்தார். நிலமையை உணர்ந்து இரண்டடி பின்வாங்கினோம். அவ கூறினா "நீங்கள் யாராக இருந்தாலும்சரி கோப்பியைக் குடியுங்கள்" நாங்கள் சீக்கிரமாக விலகி அம்பி வீட்டுக்குச் சென்றோம். அம்பி சொன்னார் நல்லகாலம் உங்களுக்கு. மேலும் ஐந்து நிமிடங்கள் அங்கு நின்றிருப்பீர்களானால் நிலமை விபரீதமாக முடிந்திருக்கும். தெய்வாதீனமாகத் தப்பிவிட்டீர்கள். இது எங்கள் வாழ்க்கையில் மறக்கமுடியாத சம்பவம்.

கவிஞர் அம்பி சக்கர நாற்காலியில் இருந்தாலும் பல்லாண்டு வாழ்ந்து தமது கலைப்பணியைத் தொடர வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

என்றும் என் நல்லாசிகள் அவரோடிருப்பதாக.

"Lives of Great men all remind us we can make our life sublime
Still departing leave behind us, Footprints on the sands of time"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LAWYER DR CHANDRIKA SUBRAMANIYAN (#0534196)

MA MPHIL PHD LLB (SYD) LLM (QLD) Dip LP
Adv Dip in Business & Training

SOLICITOR & BARRISTER Supreme Court of
NSW & High Court & NOTARY

Chairperson-SydWest Multicultural Services
& Advisory Member-Justice Multicultural Council
(02)9631 1155 / 0433099000

SUCCESS
LAWYERS AND BARRISTERS

WENT WORTHVILLE

MIGRATION PROPERTY FAMILY BUSINESS
CRIMINAL COURT WORK
FOR ALL YOUR LEGAL WORK

O:15 Station Street Wentworthville 2145
M: PO Box 232 Wentworthville 2145
P:(02) 9631 1155 l F :(02) 9631 1183 l M : 0433 099 000
E: successlaw@tpg.com.aul W: www.successlawyers.com.au

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் அம்பிக்கோர் கவி

அம்பிகைபா கன்நீயும் அகவைதொண் ணூறடைந்தாய்!
ஆயிரம்பிறைக் குமேற்கண்டாய்! அகத்தினழகு உன்முகத்தைச்
செம்பரிதிபோற் காலவைத்துச் சீர்செய்த பெற்றியென்னே!
தும்பிமுகத் தானருளத் தூமணியே வாழி!வாழி!!

பெருமையுடன் வாழ்ந்துயர்ந்து பேறெனவே நன்மக்கள்
பெற்றெடுத்தாய்! பெயர்பூத்துப் பிறங்கவைத்தாய்! உன்னரிய
அருமைதெரிந்(து) அன்பர்கள் ஆற்றும்விழா நனிசிறக்க
அந்திவண்ணன் அருட்கமலம் அருள்பில்க வாழ்த்துகிறேன்!

தஞ்சமெனக் கெஞ்சிநின்று தவிப்புடனே புலம்பெயர்ந்த
பிஞ்சுமழ லையர்க்கென்றே பெரிதுவந்து பொன்மனத்தோய்
'கொஞ்சும்மொழி' தமிழ்தந்தாய்! குவலயத்தில் தடம்பதித்தாய்!
விஞ்சுபுகழ் பெற்றதமிழ் வித்தகா ஊழி வாழியவே!

என்றும் மாறா அன்புடன்
'சிவஞானச் சுடர்' – பல்வைத்திய கலாநிதி இளமுருகனார் பாரதி
சிட்னி - அவுஸ்திரேலியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகவை தொண்ணூறு காணும்
எங்கள் **அம்பி ஐயா**வின்
அளப்பரிய சேவைகளை வாழ்த்தி வணங்கி
மேலும் பல்லாண்டு சுகத்துடனும் பலத்துடனும்
வாழ்கவென இறைவனை வேண்டுகின்றோம்.

என்றும் உங்கள் அன்பின் ஒலிபர் ஞானம் மற்றும்
சிறிரங்கன் குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்பியின் படைப்புகளில் 'OZ தமிழ்' அடையாளங்கள்

யசோதா பத்மநாதன்

1980களில் அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்ந்தவர் அம்பி.

'கட்டவிழுந்த எலுமிச்சை மூடை போல் ஈழத்தமிழினம் உலகில் பரவிச் சிதறி விட்டது. அவ்வாறு சிதறி விட்ட எமது சமூகத்தின் வாழ்க்கைக் கோலங்களை பதின்னான்காண்டுகள் புலம்பெயர்வாழ்வால் நேருக்கு நேர் கண்டறிந்த 'திரவநிலைச் சரிதம்' என் கவிதைகள்' எனத் தன் கவிதைகளைக் குறிப்பிடும் கவிஞர் அம்பி (அம்பி கவிதைகள், என்னுரை, பக் 18 - 19 மித்ரா வெளியீடு, 1994) ஈழத்தின் 'தேசிகவிநாயகம்பிள்ளை' எனப் போற்றப்படுபவர்.

இவ்வருடம் தன் 90வது அகவையைக் கொண்டாடும் அம்பி அவர்கள், அவுஸ்திரேலியத் தமிழ் சமூகத்தின் சொத்தெனில் மிகையில்லை. அவரை சிட்னி தமிழ் சமூகம் கொண்டாடும் இந்நாளில் அவர் புலம்பெயர்ந்த நம்முடய அடையாள மாற்றங்கள் குறித்துத் தன் கவிதைகளில் குறித்து வைத்துள்ள விடயங்களைத் தனியாக நோக்குதல் பொருத்தமுடயதாகும்.

குழந்தை ஒன்றைக் காண்கிறார் கவிஞர். அக்குழந்தை தன் தாய்மொழி விட்டு வந்த நாட்டு மொழியைப் பேசுவதை கேட்க நேரிடுகிறது. அது இயல்பே எனினும் தமிழ் குழந்தையின் நாவில் தமிழ் வரவில்லையே என கவிதாநெஞ்சு பதறுகிறது. அது சுயந்திரிபடையும் ஒன்றாகத் தெரிகிறது. அவர் கவிதையில் அது இவ்வாறாக உருப்பெறுகிறது.

என்னருகாற் சென்ற பிள்ளை - ஆமாம்
எங்கள் தமிழ்குல கிள்ளை
தன் அருந் தாய் முகம் பார்த்து -
மம்மி
ஷால்வீகோ நவ் என நின்றாள்!

சின்னவள் சொல்லலைத் தட்டி – என்
சிந்தை உயிர்க்கின்ற வேளை
அன்னைஅப் பால் முகம்பார்த்து -
டாலிங்
ஆஸ்க்டடி என்று முன் சென்றாள்!

சென்றனள் அம்மணி முன்னே - சின்னன்
சேர்ந்து நடந்தது பின்னே
நின்றதக் காட்சி என் நெஞ்சில் - சுற்றி
நித்தம் சுழல்வதும் என்னே!

ஆங்கிலம் மட்டுமா இல்லை - மொழி
ஆறல்ல நூறையும் கற்போம்
நாங்களும் நாங்களாய் வாழ - தமிழ்
நாவில் வளர வேண்டாமோ?

..................எனத் தொடர்கிறது அக்கவிதை. (- சூழலும் சுயமும் பக்.137, யாதும் ஊரே ஒரு யாத்திரை, மித்ரா வெளியீடு, 2002) மாற்றங்கள் இயல்பே எனினும் மொழிவழி வரும் 'சுயத்தை' அது இழந்து விடுதல் கூடாது என்பது கவிஞரின் வாதம். இதனால் போலும், இந்தத் தமிழ் அடையாளம் குறித்து தீவிரமாகச் சிந்தித்த அம்பி தன் கவிதை வழியாகக் குழந்தைகளை நேரடியாகச் சென்றடைகிறார்.

மேலும் அம்பியின் கவிதைகள் அடையாளச் சிக்கல்களின் பல பரிநாமங்களைத் தொட்டுக் காட்டுகிறது. பாரம்பரிய அளவுகோல்களின் மாறுபாடு, பெரியோரைப் பெயர் சொல்லி அழைத்தல், கட்டுப்பாடற்ற பாலியல், (Dating), உணவுருசி மாறுபாடு, முதியோர் தனிமை, ஆடை மாற்றம், ஆர்வ வேறுபாடுகள், தீர்மானம் எடுக்கும் உரிமை மீதான அத்துமீறல்கள் என அவை பல்வேறு தளங்களில் பலவாறாகப் பரினமிக்கின்றன. இவைகளை அவர் அடையாளம் காணுகின்ற போதும், எமது அடையாளம் தமிழ்; அதனை ஊட்டிவிட மறக்காதே என்ற உரிமைக் கோஷம் அதன் அடிநாதமாக எங்கும் எதிரொலிக்கக் காணலாம்.

குழந்தைகளை உன்னிப்பாகக் கவனித்து

***நானுக்கு**

நாலு சிறுசுகள் முன்
நம் தமிழில் பேச எண்ணிக்
கோலக் கிளிகள் முகம் பார்த்து -
பாலரிடம்
யாருக்கு வேண்டும்
இது என்றார் கையினிலே
ஓர் அப்பிள் தூக்கி உறுபாட்டன்.
பேரர், இஸ்
நானுக்கு நானுக்கு
நானுக்குத் தா என்று
தான் சிந்தி னான் தன் தமிழ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***ஏமாற்றம்**
பிஆர் கிடைத்துப்
பெரும் ஆர்வம் பொங்கி வர
ஆறுமுகத்தார் அருமையென
வாய் ஊறும்
பாணிப்பனாட்டும்
பனங்கட்டிக் குட்டானும்
பேணிக் கொணர்ந்தார் தம் பேரருக்கு -
வாணி என்று
நாடி அவர் கொஞ்ச
நப் என்றாள் வாயில் அதைப்
போடுகையில் யக் என்றாள் பெண்!

***ஒரு சொற்கேளீர்**
முப்பது வெள்ளைப் பிள்ளைகளிடையே
மூன்று தமிழ் பிள்ளை
அப்புதுச் சூழலை ஆய்ந்ததில் இணங்கல்
அவர்களின் முதல் தொல்லை
செப்பிடு மொழியும் செயல்படு முறையும்
தேர்ந்திடல் ஒரு தொல்லை
முப்பது வெள்ளைப் பிள்ளையை வெல்லென
மூத்தவர் பெருந் தொல்லை.

***லெற் மீ டிசைட்**
இன்று குளிர்நாள்
எது நல்ல புள்ஓவர்
என்று ஆய்ந்த பத்து வயதினளை
சென்று அணைந்து
அன்னை தனது அன்பால்
ஆஷா... இதைப் போடேன்
என்று சொன்ன சொல்லைச் சகியாமல்-
சின்னவளோ
லீவ்மீ எலோன் மம்மி...
லெற்மீ டிசைட்... என்றாள்
சற்றே மயங்கினாள் தாய்!

***மம்மி, மற**
கல்யாணம் பேசி
கனடாவால் வந்தவர் முன்
நில்கழுத்தை நீட்டென்றால் நீதியோ-
இல்லை மம்மி
டேற்பண்ணல்... வாழ்வில்
டிபக்ரோக்கள்... ஏதறிவாய்?
ஏற்கும் நிலையில் இல்லை என் மனசு -
ஈற்றினிலே
எம்மனதுக்கேற்ற
எவனும் வரும் வரையும்
மம்மி அதைநீ மற!

(- அம்பி கவிதைகள், மித்ரா வெளியீடு 1994)

இவ்வாறாக குழந்தைகளிடம் காணும் மாறுதல்களைத் தெளிவாக அடையாளம் காட்டும் அம்பி விடலைப் பிள்ளைகளிடம் காணப்படும் மாறுதல்களை, 'மாறிவரும் கோலங்கள்' என்ற தலைப்பில் உதயம் பத்திரிகையில் மாவை நித்தியானந்தன் இயற்றிய இக் கவிதையைத் தன், 'யாதும் ஊரே ஒரு யாத்திரை' என்ற நூலில் கோடிட்டுக் காட்டி சமூக இயல்பை மேலும் ஒரு அடையாள இழப்பை நம் கண்முன்னே கொண்டுவந்து நிறுத்துகிறார்.

'காதிலே ஒரு கடுக்கண் பூட்டினான்
கழுத்திலே கருங் கல்லினை மாட்டினான்
பாதி மயிரில் சிவப்புத் தீட்டினான்
மீதியை அடியோடு வெட்டினான்
கோதியே ஒரு குடுமியும் கட்டினான்'

இளம் பெண்களின் கோலத்தை மாவை நித்தி காட்டும் ஆற்றைப் பின் வரும் இந்தக் கவிதையால் அம்பி சுட்டுகிறார்

'விழிகளில் ஒரு மந்திரம் ஏற்றினாள்
இளைஞரில் விசைப் பம்பரம் சுற்றினாள்
ஆடையில் பல வண்ணம் இயற்றினாள்
கோடையில் அதில் சிக்கனம் காட்டினாள்
வாலிபர் அவள் காலடி போற்றிட
நாளும் புது நட்பினைத் தோற்றினாள்.'

மேலும் அதில் அவர் குறிப்பிடும் போது,

'வந்தவர்களின் வரட்டு வாழ்க்கையும்
தந்தை காட்டிய போலி வாழ்க்கையும்
பிள்ளை மனங்களைப் பிய்த்தெறிந்தன
பள்ளிகள் புதுப்பாதை திறந்தன
வீட்டிலே பண் பாடு மறந்ததால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டிலே அதைத் தேடல் ஆயினர்'

என்பதையும் அதில் குறிப்பிடத் தவறவில்லை.

'ஒரு சொற் கேளீர்' என்ற தலைப்பில் அம்பி, சிட்னியில் 1992ல் நடந்த 5வது உலகத்தமிழ் பண்பாட்டு மாநாட்டு கவியரங்கிற்கு தலைமை தாங்கிய போது, பாடிய இப்பாடல் படித்தவர்கள் மற்றும் வளர்ந்தவர்களாகிய தமிழர்கள் வந்த நாட்டின் வசதிகளுக்கேற்ப தம் அடையாளங்களை இழந்து புது அடையாளங்களைப் பெற்றுக் கொள்வதையும் அடுத்த சந்ததி தமிழை மறப்பதையும் இவ்வாறு சுட்டுகிறார்.

சித்தங்கேணிச் சின்னத்துரையர்
சிட்னிக்கு வருகிறார்
சத்தியஞ்செய்து குடும்பத் துடனவர்
தமிழ்மண் துறக்கிறார்
எத்தனை இன்னல் எவரெவர் தலைமை
எல்லாம் வெறுத்ததனால்
புத்திஜீவிதான் எனும்மன உணர்வில்
புலம்பெயர்ந்தோடுகிறார்!
புலம்பெயர்ந்தோடிய துரையர் விரைவில்
டொறையென வாழுகிறார்
நலன்வரும் டொறையெனும் பெயரால் எனவே
நாளும் தேறுகிறார்!
பலவிடர் தொடரப் பழகிய தமிழைப்
பாலரும் வெறுக்கின்றார்
கலகலவெனத் தமிழ் பேசிய சிறுவர்
கணித்தமிழ் மறக்கின்றார்

மேலும் மொழிக் குழப்பங்களை சொல்லும் கீழ் வரும் கவிதை தமிழ் பொருளை அங்கதச் சுவையோடு பதிவு செய்கிறது.

குடே

அங்கை கொழும்பில்
அடிச்சு மழைபெய்ய
எங்கள் தெருவெல்லாம் எத்தனை பேர் -
தங்களது
தோளில் குடைகள்
சுமந்து குடே என்று
வாழநினைத்து வலம்வருவர் -
இங்கோ
நடைபாதையோரம்
நடக்கும் கிழமும்
குடே என்பது என்ன கொடை!

கூடவே மகாகவியில் குறும்பாவின் விகடமும் எள்ளலும் சாயலும் சேர்ந்து வரும் எளிய கவி வடிவில் புதிய நாட்டில் நம்மவர் இயல்புகளைப் பின்வருமாறு கூறிச் செல்கிறார் அம்பி.

எட்டி நட

டோல் எடுத்த தெம்பில்
டொறையர் மகளுடனே
லாகிங்கம் என்று நடந்து வர
பால்வெறியில்
கட்டிப் பிடித்துத் தம்
காதல் சுவைத்த படி
நட்ட நடுவழியில் நின்றவரை-
கிட்டியதும்
பட்டப்பகல்வெயிலில்...
பண்பில்லாச் சாதியிது!..
எட்டிநட என்றார் எரிந்து!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டகவாழ்வும் பண்பாட்டுச் சிக்கலும் கலந்து நிற்கும் இக்கவிதை வேறொரு விதமாக இரண்டகவாழ்வின் உளவியலை சொல்கிறது. (யாதும் ஊரே ஒரு யாத்திரை,).

தாயகத்தில் தாம் சுவைத்து மகிழ்ந்த தாய்நாட்டுத் தின்பண்டங்கள், உணவுகள் இங்கு கிடைக்காத போது அதனைச் சுவைத்து மகிழ்ந்த நாக்கு அதற்கு ஏங்கி நிற்றல் இயல்பு தானே! இன்று போல 80களில் அவைகள் கிடைப்பதற்கான சாத்தியங்கள் மிக அரிதாக இருந்த வேளை தாய்லாந்தில் இருந்து வந்த பழவர்க்கங்களைச் சுவைத்த கவிஞர் தாய்லாந்தைப் போற்றுகிறார் (அம்பி கவிதைகள்,) அதனைச் சொல்லும் போது, 'கற்பகத்தை' அழைத்து உன் நுங்கை குடித்தேன் கள்ளைக் குடித்தேன் ஆனால் தகரத்தில் அடைத்து உலகுக்கு அனுப்பும் மார்க்கம் அறிந்திலனே என்று சுய பச்சாதாபத்தில் மூழ்கி,

'.......வளம்தேர்ந்த நுட்ப மதியோர்
தகரத்து அடைத்து அனுப்ப
சுவைத்தேன் மகிழ்ந்தேன்
தாய்லாந்தைப் போற்றடி
என் கற்பகமே'

என்கிறார். இந்தச் சுவை மாறுபாடுள்ள இரண்டுலகை பரம்பரை இடைவெளி நாட்டு இடைவெளி எல்லாம் எப்படி ருசிகளில் மாறுபாடுகளை ஏற்படுத்தி விடுகிறது என்பதை பாணிப்பனாட்டும் பனங்கட்டிக் குட்டானும் கூட ஒரு கவிதையில் சொல்லி நின்றது நினைவூட்டற்பாலது.

'வெள்ளை மக்களின் சமுத்திரத்தில் இரு
புள்ளி போலவே வந்து விழுந்த பின்
திக்கினை அறியாது வாடியே
முக்குழித்த பிள்ளைகள் இருவரும்
மூன்றுமாதம் கடக்க முன்னரே
இந்த நாடு சொந்தமென்றனர்
மக்டொனாட்ல்ஸும் நின்ஜா Turtle ம்
பற்பலவாய் கவர்ச்சிப் பொருட்களும்
சொர்க்கவாயிலைத் திறந்து காட்டின
சுக்குநூறாய் போனது சொந்த ஊர் '

என்ற மெல்போர்ன் கவிஞர் மாவை. நித்தியும் ருசிமாறுபாட்டை குறித்து வைப்பதை அம்பி எடுத்துக் காட்ட மறக்கவில்லை.

மேலும், அவர் இந்த அடையாள இழப்புகளையும் மாற்றங்களையும் சிக்கல்களையும் உலகத் தமிழ் கவிஞர்களின் கவிதைக் கோலங்களுாடாகவும் எடுத்துக் காட்டி இது நமக்கு மட்டும் சொந்தமான ஒன்றல்ல என்று சொல்வதும் அவதானிக்கத் தக்கது. உதாரணமாக கனடாவில் இரு உபகாரச் சம்பளம் பெற்றுக் கொள்வதற்காக விவாகரத்துச் செய்து கொள்ளும் தம்பதியையும் நியூசிலாந்து நாட்டில்

'கார்குழலைக் கத்தரித்த காரிகையைக் காணும் – இரு
காதுகுத்தி தோடு வைத்த காளையரைக் காணும்
பூவாடை காணாத பூவையரின் கூந்தல் - அதில்
புதியபல வண்ணத்தில் பூச்சுக்களைக் காணும்
..............' என நியூசிலாந்து ஹமில்டன் கவிஞர் ஜெயசிங்கம் 'வெண்ணிலவு'

சஞ்சிகைக்கு எழுதிய பாடலைக் காட்டி ஆறுதல் கொள்கிறார்.

அவ்வாறே பெரியோரைக் கணம் பண்ணாத இளையோரைக் காணுமிடத்தும், அவர்களைப் பெயர் சொல்லி இளையோர் அழைத்தலைக் காணுமிடத்தும் மனம் நொந்து போகிறார் கவிஞர். (யாதும் ஊரே: ஒரு யாத்திரை, பக் 143 - 145)

இரண்டுலகம் என்ற குறுங்காவியப் பாவிலே ஒரு வயோதிபத் தந்தைக்கும் வேலைக்குச் செல்லும் மகளினதும் உரையாடலாக இப்பாடல் இவ்வாறு பதிவாகிறது.

'............ஏழுமணியாகிறதே
எட்டுக்கு வேலையப்பா
நீளப் பயணமினி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிற்பதற்கோ வேளையில்லை

கோப்பியதில் சீனியிதில்
குளிர்பால் பிறிட்ஜிலென்
மூப்பிளமை எண்ணாதோர்
மூச்சிலெல்லாம் சொல்லி நின்றாள் '

என்று சொல்கிறவர் தன் கடந்தகால தாயக வாழ்வையும் எடுத்துக் காட்டத் தவறவில்லை. அதைச் சொல்லும் போது,

'காலைக் கடுங் கோப்பியுடன்
கட்டிலிலே வீற்றிருந்து
சோலைக் குயிலிசையில்
சொப்பனங்கள் கண்டவன் நான்'

என்கிறார்.

மேலும், பாதையிலே காணும் நம்மவரோடு கதைபேசி அவர் வீட்டுக்கு விருந்தாளியாகப் போகுமிவரிடம் மற்றவர் தன் கதையை இவ்வாறாகச் சொல்ல அம்பி அதை இவ்வாறாகக் காட்சிப்படுத்துகிறார்.

'.......
நாலுமுழ வேட்டியுடன் றோட்டில் - நான்
நடமாட வழியில்லை வாழ்விந்தக் கூட்டில்!
காலையில் 'வோர்க்குக்குப்' போகில் - நீ
களிசானை மாட்டென்ற விதியிந்த வீட்டில் '

எனச் சொல்கிறார். இவ்வாறு சொன்னவரை தாயகத்தில் பார்த்த நினைவுகள் கவிஞருக்கு இவ்வாறு நீள்கின்றன.

'நீறு திகழ் நெற்றியிலே நிறைவு தரும் பொட்டும்
திமிர் தோளில் எறிசால்வை விழுகின்ற செட்டும்
மாறுகரை கதர்வேட்டி மனங் கொள்ளும் கட்டும்
மரபொன்று தனதென்று வாழ்ந்தவரைக் கண்டேன்'

என அவர் சால்பை உரைக்கின்றார். பின் அவர் சமைத்த உணவை இங்கிதமாய் உண்ணும் போதில் இறந்த மனைவியும் தனிமையும் பேச்சில் வந்து போக பேரப்பிள்ளையின் பேச்சு இடையிலே வருகிறது.

'இங்கு நான் என்ன செய்வேன்
இனியஎன் பேரன் என்று
சங்கரை அணைத்துப் பேசல்
சங்கடம் தமிழைக் கற்க
எங்குமே அனுப்பார் கேட்டால்
சங்கரிஸ் நொட் கீன் என்பார்
சங்கரா.. என்றவாறே
தம்மிலை மடித்தார் மாஸ்ரர்' என்று முடிக்கிறார்.

மேலும் அன்னிய தேசத்து வாழ்வையும் நம்மவர் வாழ்வையும் சொல்லும் இக் குறுங்காவியப்பாடல் முதியவர்களின் தனிமையின் வெறுமையை இப்படிச் சொல்கிறது

'பிள்ளையை நம்பி நான் இங்கு வந்தேன் அது
பேசவும் நேரமிலாத நிலை
உள்ளந் திறந்தெதுவும் சொல்லுதற்குமவள்
உற்றவள் என்றுறவில்லாத நிலை'

என்று சமூக நிலையைச் சித்தரிக்கிறார். (அம்பி கவிதைகள்)

அம்பிகைபாகர் என்ற இயற்பெயர் கொண்ட அம்பி டாக்டர் கிறீன் என்ற அமெரிக்க வைத்தியரையும் அவரது சால்பையும் இலங்கைத் தமிழ் வரலாற்றுக்கு அறியத் தந்தவர் மாத்திரமல்ல ஈழ அவுஸ்திரேலியத் தமிழ் குழந்தைகளையும் தமிழையும் மழைபோன்ற குளிர்ச்சியான தன் கவிதைகளால் பதிவு செய்ததோடு நம் OZ தமிழ் அடையாளத் தார்ப்பரியங்களையும் தன் படைப்புகளூடே பதிந்து அவுஸ்திரேலியத் தமிழ் சமூகத்தின் ஆரம்பகால வரலாற்றுக்கும் பங்களிப்புச் செய்தவராவார்.

அவருக்கு எங்கள் பிறந்த நாள் நல்வாழ்த்துக்கள்.

20.3.2019.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகவை தொண்ணூறில் எங்கள் அம்பி

*"இனிய இவ்வுலகில் இரவும் பகலும்
தொடர்வதும் இயற்கை விதி - ஆம்
மனிதனின் வாழ்விலே இன்பமும் துன்பமும்
தொடர்வதும் இயற்கை விதி"*

கவிஞர் அம்பி

இலங்கை வடபுலத்தில் நாவற்குழியில் பிறந்து, நாடெங்கும் தமிழ்ப்பணியாற்றி, ஈற்றில் கங்காரு தேசமதில் புகலிடம்பெற்று தரணியெங்கும் தன் பணி தொடர்ந்து அயராது உழைத்த எங்கள் மூத்த படைப்பாளி , எமது சங்கத்தின் மூத்த உறுப்பினர் கவிஞர் அம்பியின் தொன்னூறு அகவை விழாவுக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

***" தேடியதெல்லாம் விட்டுத்திசைபல செல்லும் வேளை
பாடிய தமிழை மட்டும் பாதையில் விட்டிடாதே! "***

இந்த அறைகூவலை ஒலித்துவரும் எங்கள் அம்பியை வாழ்த்தி மகிழ்கின்றோம்

அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச்சங்கம்

Australian Tamil Literary & Arts Society (Inc)

atlas25012016@gmail.com www.atlasonline.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MY AMAPPA

Ashvini Samji

In 1950 my Amappa commenced his career as a teacher of mathematics at Union College Tellipalai, Sri Lanka. Eighteen years later he joined the educational publication department as a writer of mathematics books. Soon after he was transferred to the curriculum development centre of the education department.

My Amappa did what any parent would do. In 1981 he took a leap of faith and left Sri Lanka, with his three young children and beloved wife, to a relatively unknown island country - Papua New Guinea. The family's departure was during a time of political upheaval in Sri Lanka. However, his sole purpose of leaving Sri Lanka was to find a new home to provide education opportunities for his children. Papua New Guinea was a paradise that afforded his family stability and opportunities. My Amappa and his family immersed themselves in a foreign culture and acclimated immediately.

Fast forward a few decades later, my Amappa had contributed greatly to the Papua New Guinean College of Distance Education and published a famous poetry book, *Lingering Memories*, that greatly celebrated the culture and history of Papua New Guinea – a country that had given his family so much. In 1992 my amappa had to leave Papua New Guinea due to his age and working requirements. My amappa adores Papua New Guinea. As like in his poem *'Adieu!'* from his book *Lingering Memories* he describes Papua New Guinea*:*

[...]

Like a candle flame

in my deep heart,

you'll kindle my thoughts

when we are apart!

[...]

Simultaneously, my amappa never ceased to contribute to the wider literary world through Tamil education texts that served to sharing the story of the great scientific pioneer, Dr Samuel Fisk Green. It makes me immensely proud to know that my Amappa, over numerous years has had a huge impact on nourishing and cultivating the Tamillian culture through his writing and contributions.

Personally, I did not grow up in the most conventional way. I was raised by my mama in a small flat in the southern Sydney suburb of Hurstville. My maternal grandparents took on a significant role in my upbringing too.

I think I was about 9 years old sitting with my Amappa in our Hurstville flat, watching on as he carefully cleaned his old brown wooden pipe. The nostalgic smell of tobacco would waft through the living room as I started to flick through some of his books stacked by his side. I remember looking at all the funny curly fonts and wondered what they meant. I asked Amappa:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"Are you ashamed that I can't write or speak Tamil?"

Amappa looked at me and said words to the effect of:

"It's not your fault. This seems to be an issue with most Australian born Tamil children who are not taught their mother tongue from a young age. It will be a sad time when generations may lose their mother tongue."

It was only during my early years I attained an understanding of Amappa's role in the Tamil writing community, locally and internationally. He wasn't just my Amapppa that walked me to my primary school, tutored me, listened to my stories and taught me to cook. I realised Amappa is one of the greatest and well accomplished Tamil writers of this century.

Over 20 years on from this realisation and at the ripe age of 90, my Amappa has continued to accomplish so much more for the young Tamil generations and the cultural literary community at large.

As quoted by Marcus Garvey "A people without the knowledge of their past history, origin and culture is like a tree without roots."

Happy 90th Birthday Amappa! Today we celebrate your many achievements and the amazing legacy you have cultivated over decades.

இந்த ஆண்டு (2019) அகவை தொண்ணூறு காண்கிற

கவிஞர் அம்பி ஐயா அவர்களை வாழ்த்துகிறோம்.

கல்லூரி கீதம்

இராகம்: ஆனந்தபைரவி தாளம்: ஆதி

வாழ்த்தி வணங்கி மகிழ்வோம் - உவந்துதலை
தாழ்த்திப் பணிந்து தொழுவோம் - யூனியன் தாயை - வாழ்

தெல்லி மணி நகர்க்கோர் திலகமெனத் திகழ்ந்தே
செல்வம் கொழிக்கும் கலை கோயிற் பணிபுரிந்து - வாழ்

ஆதி பகவன் வழி அறிவு சுடர் விரித்தே
நீதி நெறியில் நெஞ்ச நிறைவுக் கருளளித்து
சாதி சமய இன சமரச ஞான மொளிர்
சோதி சுடரி லீசன் சுருதிப் பொருளுணர்ந்து - வாழ்

வாழ்வுக் கிலக்கியமாய் வளர்சிக் கிலக்கணமாய்
ஆழ்கட லுக்குயிரை அர்ப்பணித் திங்குயிர்த்தே
சூழிருள் கொய்தேயன்று சுடரொளி எற்ற வந்த
ஊழியருள்ளமென உயர்ந்ததன்னை வாழ்கவென்று - வாழ்

அன்பின் வழியறிந்தும் அறனின் திறமுணர்ந்தும்
பண்பின் பயனறிந்தும் பாலித் தளித்து நின்றே
இன்ப நினைவலைகள் இதயத் தொலிக்க வென்று
நண்புக் கினிய தாயை நாடி யணைந்து நின்றே - வாழ்

இயற்றியவர்: கவிஞர் அம்பி

யூனியன் கல்லூரி பழைய மாணவர் சங்கம் சிட்னி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூனியன் கல்லூரியில் அம்பி அவர்களின் அடிச்சுவடுகள்

Dr. S. Gnanarajan
பழைய மாணவன், யூனியன் கல்லூரி தெல்லிப்பழை.

உயர்திரு அம்பிகைபாகர் அவர்கள் யூனியன் கல்லூரியில் ஆசிரியராக இருந்தபொழுது நான் அங்கு கல்வி கற்றிருந்தேன். அந்த நேரத்தில் அவரின் துனைவியாரும் ஆசிரியையாக கடமையாற்றி எனக்கு பொது விஞ்ஞானம் படிப்பித்தார். அப்போது அம்பிகைபாகர் அவர்கள் உயர் வகுப்பு மாணவர்களுக்குப் படிப்பித்தார், ஆனால் நான் உயர் வகுப்புகளில் படித்தபோது அவர் யூனியன் கல்லூரியில் இருந்து மாற்றலாகி வேறு பாடசாலைக்கு போய்விட்டார். அதனால் அவரிடம் படிக்கும் அரிய வாய்ப்பு எனக்கு கிட்டவில்லை. அந்தக்காலத்தில் அம்பி ஐயா அவர்கள் மாணவர்களின் நன்மதிப்பைப் பெற்ற ஆசிரியராக திகழ்ந்தார். எனது பெற்றோர் ஆசிரியர்களாக இருந்தபடியால் அவர்கள் அம்பி அவர்களை நன்கு அறிந்திருந்தார்கள். அவருடைய கவித்திறமையைப் பற்றி முதன்முதலில் ஈழநாடு பத்திரிகையில் "தமிழ் நாட்டில் அம்பிக்கும் பரிசு" என்ற தலைப்பு செய்தி மூலம் அறிந்து கொண்டேன். நான் உயர் வகுப்புகளில் படித்தபோது எமது கல்லூரி கீதம் அம்பிகைபாகர் அவர்களால் எழுதப்பட்டதாக அறிந்து கொண்டேன். அப்பாடலில் அவர் எழுதிய வரிகளில்,

"வாழ்வுக் கிலக்கியமாய் வளர்ச்சிக் கிலக்கணமாய்
ஆழ்கட லுக்குயிரை அர்ப்பணித் திங்குயிர்த்தே
சூழிருள் கொய்தேயன்று சுடரொளி ஏற்ற வந்த "

என்ற வரிகளின் ஆழமான அர்த்தம், உயிரைப் பணயம் வைத்து அங்கு வந்து கல்லூரியை ஸ்தாபித்த அமெரிக்கன் மிஷனரிமாரைப் பற்றியதென்பதை பல ஆண்டுகளின் பின்பு அறிந்து கொண்டேன்.

அம்பிகைபாகர் அவர்களை சந்திக்கும் சந்தர்ப்பம் அவருடைய "Scientific Tamil Pioneer, Dr Samuel Fisk Green" புத்தக வெளியீட்டில் கிடைத்தது. இந்தப் புத்தகம் அவர் 1967 இல் எழுதிய “கிரீனின் அடிச்சுவடு” என்ற தமிழ் புத்தகத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பு. 1960ம் ஆண்டிலிருந்து யூனியன் கல்லூரி அதிபர் I.P. Thurairatnam அவர்களின் வழி நடத்துதலிலும் யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் K. S. Selliah அவர்களின் உதவியுடனும் ஆராய்ச்சி செய்து எழுதியதாக குறிப்பிட்டுள்ளார். அப்புத்தக வெளியீட்டில் அவர் ஆற்றிய உரையில் அவர் கூறியவை Dr. Green பற்றி மேலும் அறிய வேண்டும் என்ற ஆவலை எனக்குக் கொடுத்தது. அம்பி அவர்கள் அமெரிக்காவில் இருந்தபொழுது Dr. Green இன் கல்லறையைப் பற்றி கேள்விப்பட்டு அதை சென்று பார்வையிட்ட பொழுது அதில் எழுதப்பட்டிருந்த “Samuel Fisk Green, 1822-1884, Medical Evangelist to Tamils, Jesus my all” என்ற வாசகங்கள் அவர் மனதைத் தொட்டதாகக் கூறினார். அம்பி அவர்கள் தனது புத்தகத்தின் தொடர்ச்சியாக, திரு ஆறுமுகம் என்பவர் “Nineteenth century American Medical Missionaries in Jaffna, Ceylon” என்ற புத்தகத்தை எழுதுவதாகக் கூறியிருந்தார். அப்புத்தகத்தையும் பின்பு வாசிக்கும் சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது.

அம்பி அவர்கள் தனது புத்தகத்தின் முன்னுரையில் Dr. Green ஐப் பற்றி எழுதிய வரிகள் அம்பி ஐயா அவர்களுக்கும் பொருந்தும்:

“Lives of great men all remind us
We can make our life sublime
And departing leave behind us
Footprints in the sands of time…”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நினைவலைகளில் அம்பி ஐயா"

- நடராசா கருணாகரன்

அகவை 90 காணும் 'அம்பி மாஸ்டர்' என்று அனைவராலும் அன்பாக அழைக்கப்படும் திரு அம்பிகைபாகன் அவர்களுக்கு அவுஸ்திரேலிய சிட்னி மாநகரில் ஒரு விழா எடுக்கப்படுகின்றது.

ஈழத் தமிழர்கள் எல்லாம் பெருமை கொள்ளக்கூடிய ஒரு பெரியாருக்கு வாழும் போதே விழா எடுப்பது மிகவும் பொருத்தமானது. அதனைச் சாத்தியமாக்கியவர்களுக்கு முதலில் பாராட்டும் நன்றியும் சொல்ல வேண்டும்.

அம்பி மாஸ்டர் அவர்கள் நான் பிறந்த மண்ணான ஈழத்தின் தென்மராட்சிக்குச் சொந்தக்காராக இருந்தாலும் - அவரை சிட்னிக்கு வந்த பின்னர் தான் அறிமுகமும், தொடர்புகளும் கிடைத்தன. அவர் எனது தந்தையாரின் மிக நெருக்கமான நண்பர் என்பதும் இங்கு வந்த பின் தான் அறிந்து கொண்டேன்.

நான் ஹோம்புஷ் தமிழ்ப் பாடசாலை நிர்வாக அலுவல்களோடு இணைந்திருந்த காலங்களில் தமிழ் பாடத்திட்டங்களை வகுப்பதிலும் வழிகாட்டி நூல்கள் தயாரிப்பதிலும் அம்பி மாஸ்டரின் பங்களிப்புகள் பற்றி அதிகம் அறியும் வாய்ப்புக்கள் கிடைத்திருந்தன.

அவுஸ்திரேலிய மண்ணிலே 'எழுத்தாளர் விழா' என்று ஒரு தனித்துவமான விழாவை திரு முருகபூபதி அவர்களும் அவரது நண்பர்களும் இணைந்து ஒவ்வொரு வருடமும் வெற்றிகரமாக நடாத்துவார்கள். அந்த விழாவின் ஆரம்ப காலங்களில் கவியரங்கு ஒன்றை ஒடியல் கூழுடன் இரண்டாவது நாளில் நடாத்துவார்கள். அம்பி மாஸ்டர் தலைமையில் நடக்கும் அந்த கவிதா நிகழ்ச்சியில் கூழின் ருசியுடன் இன்னுமொரு படி மேல் போய் அனைத்தும் மிகப் பிரமாதமாக இருக்கும். அவற்றில் கலந்து கொண்ட நினைவுகள் இன்றும் சுவையாக உள்ளது.

அம்பி மாஸ்டர் அவர்களை 'சிகரம்' தமிழ் தொலைக்காட்சிக்காக ஒரு நேர்காணல் செய்யும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததை வாழ்க்கையில் ஒரு பாக்கியமாகவே கருதுகிறேன். அவரைப் பற்றிய பல செய்திகளை நான் மட்டுமல்ல பல தொலைக்காட்சி நேயர்களும் அறிந்து பிரமித்துப் போயிருந்தார்கள். அவரது பங்களிப்புக்கள அவ்வளது காததிரமானவையாக பலருக்கும் தெரிய இது ஒரு நல்ல வாய்ப்பாகவும் அமைந்திருந்தது. இவற்றைக்கருததிற் கொண்டும் அம்பி மாஸ்டரின் கவிதைத் திறன்களின் ஆற்றலைப் புரிந்து கொண்டு அவருக்கு கௌரவமாக ஒரு விருதைக் கொடுக்க எண்ணி 'கவியரசு' என்ற பட்டத்தை கன்பராவில் நடைபெற்ற எழுத்தாளர் விழாவிலே சிகரம் நிறுவனததினர் வழங்கியிருந்தார்கள்.

அதனையும்விட அவரால் எழுதப்பட்ட 'யாழ்பாடி' என்ற கவிதை நாடகத்தை அண்ணாவியார் இளைய பத்மநாதன் (பத்தண்ணா) அவர்கள் கூத்துவடிவிலே அரங்காற்றி மெல்பேர்ண், சிட்னி, கன்பரா, பிரிஸ்பேன் போன்ற இடங்களில் மேடையேற்றினார்கள். அதில் நானும் பங்குபற்றி முக்கிய பாத்திரத்தில் நடிக்கக் கிடைத்ததும் ஒரு பெரும் பாக்கியமாகவே கருகின்றேன்.

ஈழத்தின் இன்னுமொரு முதுபெரும் கலைஞரான திரு. இரகுநாதன் அவர்கள் பாரிஸ் மாநகரில் இருந்து சிட்னிக்கு திரைப்படம் ஒன்று எடுக்க வந்த சமயத்தில் - அவருடைய நண்பரான அம்பி மாஸ்டரின் வீட்டிற்கு சென்றதும், அவரின் குடும்பததினருடன் பழகியதும் இன்னுமொரு மறக்கமுடியாத நினைவுகளாகவுள்ளன.

அம்பி மாஸ்டர் அவர்கள் எவரையும் வசீகரிக்கத்தக்கவராக பழகுவார். யாரையும் நோகடிக்கத் தக்க வார்த்தைகளை ஒருபோதும் பாவிக்க மாட்டார். தனது கவிதைத் திறனை எந்த இடங்களிலும் மிகவும் லாவகமாக வெளிப்படுத்தி அனைவரையும் கவர்ந்திடுவார். அவரோடு பழகக்கிடைத்த நாட்களும் அவர் வாழும் காலததில் நாமும் வாழ்கின்றோம் என்ற பெருமையும் என்றும் இனியவை. அவை தொடர - அவர் இன்னும் பல ஆண்டுகள் நீடுளி சுகத்துடனும், பலத்துடனும் வாழ இறையாசி வேண்டி நிற்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடகங்களுடன் இணைந்து நின்ற பெரியார் அம்பி

எஸ். எம் வரதராஜன்
ஒளிபரப்பாளர் ,ஊடகவியலாளர்
நியூசீலாந்து

ஒலி ஒளிபரப்புத் துறையினரின் மதிப்புமிக்க கவிஞரும் தமிழறிஞருமான அம்பி மாஸ்டரை சிட்னியில் சந்தித்தேன்.

தொலைபேசியில் ' நான் வரதராஜன் அம்பி மாஸ்டரைச் சந்திக்க வேண்டும்' என்றேன்.
மறுமுனையில் நின்ற பெண்மணி ' கொஞ்சம் பொறுங்கள்' என்றார்.
'ஹலோ"
' சேர் நான் வரதராஜன்'
' எங்கு நிற்கிறீர்' (இது மட்டும் தெளிவாகக் கேட்டது).
' சிட்னியில் தான் .. '
' (ஏதோ சொல்கிறார்) '
நானும் கதைக்கிறேன். அவரும் பேசுகிறார்.

சிலருக்குத் தொலைபேசி எடுத்தால் வீட்டிலுள்ள குழந்தைகள் தான் முதலில் பேசுவது வழக்கம். வீடுக்காரரும் பிள்ளைகளிடம் தொலைபேசியை விட்டுவிட்டு இருப்பதுண்டு.

'அம்மாவிடம் போனைக் கொடுங்கள்.. அப்பாவிடம் கொடுங்கள்..' என்றாலும் பிள்ளைகள் தமது மொழியில் எதையோ சொல்லிக் கொண்டிருப்பர்.

கடைசியில் நாமாகவே தொலைபேசியைத் துண்டிப்பதுவே தவிர்க்க முடியாத நல்ல முடிவாக அமைவதுண்டு.

அம்பி மாஸ்டர் மறுமுனையில் குழந்தைபோலானார். எனினும் நான் துண்டிக்காமல் பேச.. அவர் அப் பெண்மணியிடம் தொலைபேசியை க் கொடுத்து எனக்குதவ நான் உடன் வருவதாக அந்தப் பெண்ணிடம் சொன்னேன்.

'வரச் சொல்கிறார்' என்றார்.

நானும் எனது சிட்னி.. ஊர் (கரவெட்டி) நண்பருமான பாபுவும் போனோம். பாபு சிட்னியில் ஒரு தமிழ்ச்செயற்பாட்டாளர். சமூகச் செயற்பாடுகளில் ஆர்வம் மிக்கவர். இச் சந்திப்பிற்கு உதவிய அவருக்கு என் நன்றி.

அம்பி மாஸ்டர் தான் எனது (நான் தயாரித்த) முதல் சிறுவர் நிகழ்ச்சியான 'கதை மலரில்' சிறுவர்களுக்கு கதை சொன்னவர். நான் அதனைத் தயாரிக்கும்போது எனது பதவி தயாரிப்பு உதவியாளர். எனக்கு அம்பி மாஸ்டரை நேரடியாக அறிமுகம் செய்தவர் எனது தயாரிப்பாளரான சிவசுப்பிரமணியம்.அவர் இப்போது கனடாவிலிருக்கிறார்.

ஆனால் அம்பி மாஸ்டர் எனது நல்ல நண்பரானார்; குடும்ப நண்பரானார்.

பப்புவா நியூகினியில் கல்வி ஆலோசகராக இருந்த காலத்தில் விடுமுறைக்கு வரும்பொழுது பல நிகழ்ச்சிகளை செய்ய உதவுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் நிகழ்ச்சிப் பிரிவில் பாரதியார் நினைவாக 'கலையரங்கத்திற்காக' ஒரு மெல்லிசை நிகழ்ச்சியை நான் தயாரித்திருந்தேன். ஈழத்தின் மூத்த இசையமைப்பாளர் எஸ். கணேஷ்ராஜ் இசையில் அமைந்து உள்நாட்டுப் பிரபல பாடகர்கள் பாடிய அந் நிகழ்ச்சியில் அம்பி மாஸ்டரை அதனைக் கவிதை நடையில் தொகுக்க்கேட்டேன்.

பாரதி மொழி நடையில் வேண்டுமோ அம்பி யின் மொழி நடையில் வேண்டுமோ என உடனும் கேட்டார்.

நான் அம்பியின் நடையில் என்று உடனும் சொல்ல.. 'அம்பியின் கவிதை நடையில் பாரதியின் மொழி நடையில் தருகிறேன்' என்றார்.

அம்பி மாஸ்டரிடம் நானும் பாபுவும் போனபோது அவர் தமது அறை வாசலில் வைத்தே என்னை அடையாளம் கண்டுவிட்டார்.

'மூன்று வரதராஜனை நான் நினைத்தேன். ஒருவன் வரமாட்டான். மற்றவர் வரதர் அவரும் வரமாட்டார்.' இவன்- பையனாகத்தான்' இருக்கவேண்டும்' - என நினைத்தேன்' என்று மிகுந்த மகிழ்ச்சியுடன் சொன்னார். அவரை அணைத்து தலையில் முத்தமிட்டபடியே சில நிமிடங்கள்.. இருவருக்கும் கண்கள் கலங்கின. அம்பி மாஸ்டர் அழுவதை அன்றுதான் கண்டேன்.
அது சாதாரண கண்ணீரல்ல ; பல மைல்களுக்கப்பாலிருந்து தம்மைத் தேடி வந்தான் ஒருவன் என்ற மகிழ்ச்சி அவருக்கு சிறு நெல்லிக்கனியாக இருந்திருக்கும் என்ற பெருமகிழ்ச்சி எனக்கு.
பத்துவருடம் படுக்கையில் இருக்கிறேன். வந்துவிட்டாய். ..நியூசீலாந்தில் என்று கேள்விப்பட்டேன். வந்தால் வருவாய், என்னைப் பார்ப்பாய் ..என்று இருந்தேண்டா. " என்கிறார் அணைத்தபடி.

சில வினாடிகள் நிமிடங்களாக அமைதியில் இருந்தோம்.

அம்பி மாஸ்டரின் கதை நிகழ்ச்சிகளை செய்தது மட்டுமல்ல , அவரை வைத்து கலையரங்கம் நிகழ்ச்சிக்கு பாரதியார் நினைவு இசை நிகழ்ச்சி ஒன்றை நான் நெறிப்படுத்தினேன். ஈழத்தின் பிரபல மெல்லிசைப்பாடகர்களாக அன்று திகழ்ந்த மகிந்தகுமார் , இசையமைப்பாளரும் பாடகருமான எஸ் கணேசராஜ் , ரோகினி பரமானந்தம் ,அருட்செல்வி அமிர்தானந்தர் , ஆகியோ பாரதியின் பாடல்களை பாட அவற்றுக்கு கணேஷ்ராஜைக் கொண்டு இசையமைத்து இதனைத் யாரித்தேன், இவற்றை அம்பிமாஸ்டரைக் கொண்டு வித்தியாசமானது தொகுக்க எனது விருப்பத்தைத் தெரிவித்தேன்.

"எப்படித்தொகுப்பது ; கவிதை நடையிலா, வசன நடையிலா , அம்பியின் மொழி நடையினிலா, அல்லது பாரதியின் மொழி நடையினிலா ? " என்று கேட்டார் அம்பி.

"சேர் , நீங்கள் தமிழ் தெரிந்தவர், பாரதியைத் தெரிந்தவர், பாரதியின் மொழி நடை தெரிந்தவர் , பாரதியின் கவிதை நடை தெரிந்தவர் .அதனால் தானே உங்களிடம் கேட்டேன் " என்றேன்.

ரூபவாஹினி யில் நான் பணியாற்றிய காலத்தில் அவர் விடுமுறைக்கு வரும் காலத்தில் என்னை அழைத்துக்கொண்டு "வா எங்காவது குந்தியிருப்போம்" என்று அழைத்துச்செல்வார்.

அப்போது அவர் பாரதி பற்றி அடிக்கடி சொல்வார். பாரதி தமிழை எப்படி எப்படி காலம் மாற மாற அதனுடன் தானும் மாறி நேசித்தான் என்பதை தமிழ் மொழிச் சீர் திருத்தம் பற்றிய கதை வந்தபோது அம்பி மாஸ்டர் சொன்னது எனக்கு எனது தமிழ் மொழி பற்றிய சிந்தனையில் ஒரு பதிவாகப் பதிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பாரதி பற்றி ஒரு நிகழ்ச்சி அழகியற் கல்வியாகச் செய் "என்று அவர் நான் கல்வி நிகழ்ச்சிப் பிரிவில் பணியாற்றிய காலத்தில் சொல்லியுள்ளார். "வேண்டுமென்றால் நான் பிரதி எழுதித் தருவேன் ; உரை, கவிதை, பாட்டு ,நடனம் என எல்லாம் வரும் வகையில் பிள்ளைகளுக்குச் செய்யலாம் " என்பார்.

ஆனால் பாரதியாரின் பாடல்களை வைத்து ஒரு கலையரங்கம் நிகழ்ச்சியைத் தயாரிக்க நான் ரூபவாஹினியின் தமிழ்ப்பிரிவுக்கு வந்த பின்னரே முடிந்தது. அதுவே அந்த இசை நிகழ்ச்சியாகும்.

அம்பி மாஸ்டர் ஒவ்வொரு பாடலையும் பாரதியின் கவிநடையிலேயே தொகுத்தார்.நல்லதோர் வீணை, சுட்டும் விழிச்சுடர், மங்கியதோர் நிலவினிலே, மழைப்பாட்டு என்பவை அவை. ஒவ்வொரு பாடலின் முதுகை மோனை படிமங்களை ஏற்ப அம்பி மாஸ்டரின் ஒவ்வொரு பாடற் தொகுப்பும் அழகாய் அமைந்ததை இந்த நிகழ்ச்சியைப் பார்த்த தான்தோன்றிக் கவிராயரும் பல்கலை வேந்தனுமாகிய அமரர் சில்லையூர் செல்வராசன் " அம்பி ஒருவருக்குத்தான் அதனை அப்படித் தொகுக்க முடியும் ' ஏனெனில் அவர் ஆசிரியருமல்லவா" என்று பாராட்டினார்.

நிகழ்சசித் தொகுப்பாளர் வெறும் தொகுப்பாளராக மட்டுமல்ல ஒரு தகவல் வழங்கும் ஆசிரியர் போலவும் இருத்தல் வேண்டும் என்று ஒளிபரப்பியலில் சொல்லப்படுவதுண்டு. அம்பி மாஸ்டர் அந்தக் கடமையை தமது கல்வி சார் நிகழ்ச்சிகளில் மட்டுமன்றி முறை சாரா கல்வி நிகழ்ச்சிகளிலும் பொதுவான சுவைஞருக்கான நிகழ்ச்சிகளிலும் தம் நிலை மாறாமல் தக்கதாய்ச்செய்தார். இது அவருக்குரிய சிறப்பியல்பு.

அவருடைய அவர் எழுதிய Scientific Tamil Pioneer Dr. Samuel Fisk Green
என்ற நூலின் வெளியீட்டுவிழாவையும் அதனுடன் சேர்ந்த அவரது நேர்காணலையும் இணைந்த தொகுப்பு ஒன்றை நான் தயாரித்திருந்தேன். அவர் அதனை மனதில் நீக்கமற வைத்திருந்தார். அந்த நூலாக்கத்தில் அவர் மிகுந்த ஈடுபாடு காட்டியதை அவருடன் பழகியவர்கள் அறிவார்கள்.

நான் பாபுவுடன் அவரது அறையினுள் புகுந்தவுடன் அவரை அணைத்து முத்தமிட எனது கண்களும் அவரது கண்களும் ஒன்றாய்க்கலந்து கண்ணீர் மல்கின. அப்படியே ஒரு படத்தை பாபு எடுத்தார்.

அவரது உரையாடல் அந்த கிரீனின் புத்தகம் பற்றிய நிகழ்ச்சியிலேயே தொடங்கியது. "அந்த நிகழ்ச்சியின் ஒளிப்பதிவு நாடா இப்போ எடுக்கலாமோ தெரியாது என்ன? என்று சொல்லிய படியே பாபுவிடம் அந்த நிகழ்ச்சியைப்பற்றி பெருமிதமாகச் சொன்னார். கி ரீன் கூட இ ப்படி மகிழ்ந்திருப்பாரோ தெரியாது.".என்று பாபு விடம் சொன்னேன்.

"அந்தப் புத்தகம் அதுதான் " என தம்மருகில் வைத்திருந்த அவர் எழுதிய அந்த நூலைக் காட்டினார்.
"அதையும் ஒரு படம் எடு ங்கோ"
தமது விருதுகள் பல அடுக்கிவைத்திருந்த கண்ணாடித் தாங்கியைக் காட்டி "அதையும் ஒரு படம் எடு " என்றார்.

என்னைக் கண்டதும் எனது தொழில் தொடர்பான விடயமாக அவற்றைப் பாவிப்பேன் என்ற உற்சாகம் அவரிடம் இருந்தது என்பேன். ஏனெனில் " சேர் , நீங்கள் தான் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி யின் கல்லூரிக் கீதத்தை இயற்றியதாக நேற்றுத்தான் கேள்விப்பட்டேன் ' என்று நான் சொல்ல, உடனே தமக்கு அருகிலிருந்த மற்றொரு ரு சிறிய மேசையில் புத்தகங்களுக்கிடையிலிருந்த பெரிய புத்தகம் ஒன்றை வெளியே எடுக்கும்படி சொன்னார். அது தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் மலர் ஆகும். அதில் ஒரு பக்க இலக்கத்தை மறக்காமல் சொல்லி அதனைத் திறக்கச் சொன்னார். அதில் அவர் எழுதிய கல்லூரிக் கீதம் இருந்தது.

"இதையும் படம் எடு"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் புத்தகம் , அந்தப் பக்கம் என்பவற்றை எடுத்தேன், எங்கு போடு என்று எல்லாம் அவர் சொல்லவில்லை. பிள்ளை எங்காவது போடுவான் .எதற்கோ பாவிப்பான் என்ற நம்பிக்கை அவரிடத்தில் இருந்தது.

அவரை, அவரது மகிழ்ச்சியுடன் ஆச்சரியத்தை ஏற்படுத்தவேண்டும் என்றெண்ணி அவருடைய நண்பரான , குடும்ப நண்பரான விஸ்வநாதனுக்கு அழைப்பெடுத்து "விஸ்வநாதனுடன் பேசுங் கள் என்று அலைபேசியைக் கொடுத்தேன். இருவருக்கும் மகிழ்ச்சி. இவர் கதைப்பவற்றை நான் விஸ் வாவுக்கு "கதை பெயர்ப்புச் "செய்தேன் . " நான் பத்து வருடம் படுக்கை" என்று விஸ்வநாதனுக்கு சொல் என்றார். விஸ்வநாதன் தனது மறக்க முடியாத அனுபவங்களை ஒவ்வொன்றாக அம்பி மாஸ்டருக்கு நன்றியுடன் பகிர்ந்தார். "இன்று நாம் ஊடகங்களில் தமிழை வளர்ப்பதற்கு கா ரணமானவர்களில் முக்கியமானவர் அம்பி மாஸ்டர் வரதா. அவரைப்போல பெருமையில்லாத பெரிய மனிதர்களைக் காண்பது இன்று அரிது .அவருடைய தமிழும் அன்பும் பண்பும் இன்றும் எங்களை வழிநடத்துகின்றன என்று அவருக்குச் சொல்லுங்கள்..இன்று அவருடன் உரையாடக் கிடைத்தமை மிக்க மகிழ்ச்சி " என்று விஸ்வநாதன் சொல்ல அம்பி மாஸ்டர் புன்னகைத்தபடி கேட்டுக்கொண்டிருந்தார். அம்பி மாஸ்டரை சந்தித்ததுடன் அவரை சில கணங்கள் இப்படி மகிழ்வித்தது எனக்கு மிகுந்த நிறைவைத்த தந்தது. இந்த வகையில் அவரைச் சந்திக்க எனக்கு உதவிய நண்பர் பாபுவுக்கு நான் இக்கணத்தில் நன்றி சொல்தல் வேண்டும்.

அம்பி மாஸ்டர் எழுதிய நூல்களில் யாதும் ஊரே : யாத்திரை என்ற நூலின் சில அத்தியாயங்கள் புலம்பெயர் தமிழ் மாணவரின் நூல்களில் சேர்க்கப்படவேண்டும் .புறத்திலிருந்து எழுதப்பட்ட அவரது பார்வையும் அனுபவமும் தமிழில் இவர்களது பாட நூல்களில் சேர்க்கப்படுவதுடன் அந்த நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தல் காலத்தின் தேவையாகும்.

எளிய நடையில் ஈழத்தமிழரின் அரசியல் சமூக வரலாற்றுப் பின்னணியை அவர் தமிழில் எழுதியுள்ளார். அவர் வாழும் காலத்திலேயே அதனை ஆங்கில மொழியில் மொழிபெயர்த்து அவரிகொண்டே மேற்பார்வை செய்வது அவர்க்குச் செய்யும் மிகச் சிறந்த நன்றிப்பணியாக அமையும் என்பது எனது பணிவான கருத்தாகும்.

அவரது படைப்புக்கள் பின்வருவன :-

கிறீனின் அடிச்சுவடு (யாழ்ப்பாணம், 1967)
*அம்பி பாடல் (சிறுவர் பாடல்கள், சுண்ணாகம், 1969)
*வேதாளம் சொன்ன கதை (மேடை நாடகம், கொழும்பு, 1970)
*கொஞ்சும் தமிழ் (சிறுவர் பாடல்கள், கொழும்பு, 1992)
*அந்தச் சிரிப்பு
*யாதும் ஊரே; ஒரு யாத்திரை
*அம்பி கவிதைகள் (சென்னை, 1994)
*மருத்துவத் தமிழ் முன்னோடி (சென்னை, 1995)
*Ambi’s Lingering Memories (Poetry, பப்புவா நியூ கினி, 1993, 1996)
*Scientific Tamil Pioneer Dr Samuel Fisk Green (கொழும்பு, 1998)
*உலகளாவிய தமிழர் 1999
*A String of Pearls
*பாலர் பைந்தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றில் பாலர் பைந்தமிழ் ,கொஞ்சும் தமிழ் ,அம்பி பாடல் போன்றவற்றை சக்தி எப் எம் வானொலியில் ஒலி பரப்பான "அரும்புகள்" சிறுவர் நிகழ்ச்சியில் சிறுவர் அறிவிப்பாளராக எனது மகன் பங்குபற்றியவேளை எனது மனைவியார் பயன்படுத்தி அவனுக்குப் பழக்கிவிடுவார்.

பூனையில்லா வீட்டில் எலியொன்றின் கூத்தினை அவர் எழுதியிருந்தார். அப்படி ஒவ்வொரு பாடல்களும் சிறு சம்பவங்களைக் கொண்டவையாக இயல்பான சொற்களுடன் எழுதப்பட்டிருந்தன. ஒலி ஒளி ஊடகங்களுக்கு ஏற்ற பாடல்களாக அவை அமைந்திருந்தன.

எளிமையான சொற்கள் கொண்ட குழங்தைகளுக்கேற்ற பாடல்களாக அவை அவரால் எழுதப்பட்டதை எனக்கு அப்போதுதான் உணர முடிந்தது. ரூபவாஹினி ,இலங்கை வானொலி முதல் சக்தி வரை ஒளிபரப்பு ஊடகங்களுடன் அம்பி மாஸ்டர் இணைந்து நின்றார்.

அம்பி மாஸ்டருக்கு எனது சார்பிலும் எனது குடும்பத்தின் சார்பிலும் வாழ்த்துகள் . உரித்தாகுக,

எஸ். எம் வரதராஜன்
முன்னாள் சக்தி ரீ வீ முகாமையாளர்
ஐ ரி என் தமிழ் நிகழ்ச்சி அதிகாரி

அவுஸ்திரேலியத் திருநாட்டில் தமிழ் வாழத் தகைசெய்த
ஈழத்தின் மூத்த படைப்பாளி **கவிஞர் அம்பி** அவர்கட்கு

எம் இனிய 90 வது அகவை வாழ்த்துகள்!

சாட்சியாய் அமையுஞ் சொந்தச் செந்தமிழ் மொழியே - முன்னோர்
ஈட்டிய செல்வம் எங்கள் இனவழிச் சீட்டாம்
எந்த நாட்டிலே வாழ்ந்தபோதும் நடைமுறைவாழ்வில் என்றும்
வீட்டிலே தமிழைப்பேணும் விதிசெயல் கடமை ஐயா
வீட்டிலே தமிழைப்பேசும் விதிசெயல் கடமை ஆமாம்
பாட்டனாய் வந்துபேரன் பரம்பரை திரிதல் கண்டே
ஈட்டிய செல்வம் போச்சே, இனவழி போச்சே என்று
வாட்டு நெஞ்சுணர்வை வெல்ல வழி பிறிதொன்றுமில்லை.

நியூ சவுத் வோல்ஸ் தமிழ்ப் பாடசாலை மாணவர்களிற்கான பாடநூல் உருவாக்கத்தில்
நீங்கள் செய்த அரும் தமிழ்ப் பணியை நன்றியோடு நினைவுகூரும்,

வென்றவேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொஞ்சும் தமிழ் தந்து நெஞ்சம் கவர்ந்த கவிஞர்

ப்ரணிதா பாலசுப்பிரமணியன்

குழந்தை மனம் என்பது ஒரு தனி உலகம். மகிழ்ச்சி சிறகடித்து பறக்கும் அந்த உலகில் குழந்தைகளின் மனதை நன்குபுரிந்து கொண்டவர்கள் மட்டுமே குழந்தையோடு குழந்தையாக மாறி சிறுவர் இலக்கியத்தைப் படைக்க முடியும். இந்த அரிய கலையில் கைதேர்ந்தவர்தான் அம்பி ஐயா அவர்கள். அவருடைய சிறந்த இலக்கியப் படைப்புகளில் " கொஞ்சும் தமிழ் " என்ற புத்தகம் குழந்தைகளை விஞ்சும் தமிழ். புலம்பெர்ந்தத் தமிழ் குழந்தைகளுக்காக எழுதப்பட்ட இந்த நூல், குழந்தை கவிதைகளுக்கு அவசியமான பல அம்சங்களைக் கொண்டு மிளிர்கின்றது.

குழந்தைகளின் உளவியலை நன்கு புரிந்தவர்கள், குழந்தைகளுக்கு விருப்பமான விடயங்களையே கருப் பொருளாக வைத்து கவிதையை இயற்றுவார்கள். அம்பி ஐயா போன்ற சிறப்பான எழுத்தாளர்கள், இதைத் தாண்டி இன்னுமொரு படி மேலே சென்று, குழந்தைகளின் சுற்றாடல்,
சமூக சூழ்நிலை என்பனபற்றியும் ஆலோசித்து, குழந்தைகளுக்கு பல சுவாரஸ்யமான கவிதைகளை உருவாக்குவார்கள். இவ்வாறு, அவுஸ்திரேலிய சமுதாயத்தில் வாழும் புலம்பெர்ந்த தமிழ் குழந்தைகளுக்கேற்ப, மிருகங்கள், பறவைகள், கொண்டாட்டங்கள், மனதைக்கவரும் பொருட்கள் ஆகிய அனைத்து விடையங்களைப் பற்றிய கவிதைகளையும் ஐயாவின் “கொஞ்சும் தமிழ்” நூலில் காணலாம். குறிப்பாகப் பார்த்தால், அவுஸ்திரேலியாவிற்குத் தனிச் சிறப்பைத் தருகின்ற கங்காரூ மற்றும் குவாலா மிருகங்களில் இருந்து, குழந்தை மனதுக்குப் பிடித்த வண்ணத்திப் பூச்சி, பந்து, ஊஞ்சல், ஓடம், கடற்கரை, வானவில், நாய், பூனை, அணில், சீட்டு, பொங்கல், அம்மா, மாம்பழம் போன்ற விடையங்கள் வரை பல இனிமையான தலைப்புகளில் எழுதியிருக்கின்றார்.

மேலும் இன்னுமொரு உன்னதமான விஷயம் என்னவென்றால்
புலம்பெயர்ந்து வாழும் குழந்தைகளுக்கு " கற்பகதரு" “மாட்டுவண்டி”, “பொங்கல்” என்ற பாடல்களின் மூலம் தாய் நாட்டு உணர்வையும் ஊட்டுகிறார் அம்பி ஐயா. அத்துடன்
"நான் யார்?", "எவர் தெரியுமா?", "நாளை என்ன" போன்ற தலைப்புகளில் வரும் பாடல்கள் சிறுவர்களின் சிந்தனைத் திறனை வளர்க்கும் பாடல்களாக அமைந்திருக்கின்றன. உதாரணமாக,

“எட்டு மெல்லிய
கால்கள் ஊன்றி
எங்கும் தாவிச் செல்பவர்
பட்டு நூலின்
வலையைப் பின்னி
வெட்ட வெளியில் விரிப்பவர்

வலையில் விழுந்த
பூச்சி வகையை
வரிந்து கட்டி வைப்பவர்
கவலை இன்றிப்
பசிக்கும் வேளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டைப் பிரித்துத் தின்பவர்

எவர் தெரியுமா?
அவர் பெயர் தெரியுமா?"

இவ்வாறான பாடல்கள் சிறுவர்களை சிந்திக்க வைப்பதுடன் அவர்களுடைய ஈடுபாட்டையும் அறிவையும் வளர்க்கின்றது.

இதிலே உள்ள சவால் என்னவென்றால், பெரியவர்களுக்கு கற்பனையில் பாடிவிடலாம் ஆனால் சிறுவர்களுக்குப் பாடல் இயற்றும் போது இலகுவாக இருப்பதுடன் உண்மையாகவும் பாட வேண்டும். உதாரணமாக ஆமையைப்பற்றி பாடினால் அதன் ஓடு கடினமாக இருக்கும், மெதுவாகச் செல்லும், தொட்டால் தலையை உள்ளயே இழுத்துக் கொள்ளும் என்ற அதன் இயல்புகள் மாறாமல் எழுத வேண்டும். இவை குழந்தைகளின் உள்ளத்தில் பசுமரத்தாணிபோல் பதிந்துவிடும். அதிலும் வெற்றி கண்டிருக்கிறார் அம்பி ஐயா அவர்கள்.

மேலும் குழந்தைக் கவிதைகளை இயற்றும் போது, அதை எளிமையான மொழியுடனும், இனிமையான ஓசை நயத்துடனும் உருவாக்குவது ஒருமுக்கிய அம்சமாகும். ஓசை நயம் என்பது இயல்பாகவே குழந்தைகளுக்கு பிடித்த விஷயம். இவ்வாறு குழந்தைகளின் மொழி வளர்ச்சிக்கேட்ப, இலகுவான சொற்களை பயன்படுத்தி, கவிதையின் கரு பொருளை அழகான முறையில் வெளிக்காட்ட ஓசை நயத்தைப் பயன்படுத்தியவர் தான் அம்பி ஐயா அவர்கள். உதாரணத்துக்கு 'சிட்டு' என்கிற கவிதை, நான்கு நான்கு அடிகளாக எதுகை மோனையுடன் அமைந்திருக்கிறது. உதாரணமாக,

"சின்னச் சின்னக் குஞ்சு
சிட்டுக் குருவிக்கு குஞ்சு
என்னை என்னை பார்க்கும்
ஏதோ சொல்லித் தாவும்"

இதைப் போன்று ஐயாவின் அனைத்து கவிதைகளும் அமைந்திருப்பதால், குழந்தைகளுக்கு அதை மனப் பாடம் செய்ய மிகவும் இலகுவாக இருக்கின்றது. எதுகை மோனை, ஒரே ஓசை இருக்கும் சொற்களை ஞாபகத்தில் வைக்க உதவுகின்றது. இதன் மூலம், குழந்தைகளின் சொல் வளம் வளர்கின்றது.மேலும் கவிதைகளில் இலகுவான மெட்டுக்களுடன் வருகின்ற சிறிய சொற்கள் ஆடிப் பாடி மகிழ்வதற்கு உதவுகின்றது. இவையெல்லாம் குழந்தைகளுக்கு அழகியல் உணர்வை வளர்ப்பதுடன், மொழியையும், உலகத்தையும் கற்றுக் கொள்ள வழிவகுக்கின்றது.

இவ்வாறு இந்த நூல் குழந்தைக் கவிதைகளுக்கு தேவையான அனைத்து அம்சங்களையும் இணைத்திருக்கின்றது. சுவையாக மிகவும் கரிசனையுடன் இந்நூலைப் படைத்த அம்பி ஐயாவிற்கு நாங்கள் எல்லோரும் நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும். அதை நாம் எவ்வாறு செய்யலாம் என்றால் இந்தப் பாடல்களை வீடுகளில் சிறுவர்கள் படிக்க வேண்டும். எல்லாத் தமிழ் பாடசாலைகளிலும் சிறுவர்களுக்கு பாட நூலாகச் சேர்க்க வேண்டும். குழந்தைகளின் நாவில் இப்பாடல்கள் விளையாட வேண்டும் இது தான் நாம் அவ்ருக்குச் செய்யும் கைமாறாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் அம்பிகைபாகன் அவர்களுக்கு எனது பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ஆ. ந. இராசேந்திரன்
தலைவர் , பனை அபிவிருத்திச் சபை

திருவாளர் இ.அம்பிகைபாகன் அவர்கள் அகவை தொண்ணுறை எட்டிப்பிடிக்கும் செய்தி தம்பி திரு.நடராசா கருணாகரன் அவர்களின் முகநூல் பக்கத்தின் வாயிலாக அறிந்து மிக மகிழ்ச்சியடைந்தேன்.

அவருடன் அறுபது, எழுபதுகளில் பழகி மகிழ்ந்த நாட்களை நினைவு கூர்வது சாலச் சிறந்ததாகும். தெல்லிப்பளை யூனியன் கல்லூரியின் விஞ்ஞான ஆசிரியராக அவர்களை முதலில் அறிந்து கொண்டேன்.நான் கலைப்பிரிவு மாணவனாக இருந்த காரணத்தினால் அவரிடம் கல்வி கற்கும் பாக்கியம் எனக்குக் கிடைக்கவில்லை.ஆனால் 1966 இல் கோலாலம்பூரில் நடைபெற்ற உலகத் தமிழாராச்சி மகாநாட்டில் தமிழ் மொழி மூலம் மருத்துவக் கல்வி என்ற தலைப்பில் ஆராய்ச்சிக்கட்டுரையை சமர்ப்பித்த காலத்திலிருந்து அவர்களின் ரசிகனாக மாறிவிட்டேன்.

அவர் எழுதிய கிறீனின் அடிச்சுவடு என்னும் நூல் மானிப்பாயில் அமைத்திருந்த கிறீன் வைத்தியசாலையில் அமெரிக்க மிசனரிமாரால் தமிழ் மொழி மூலம் மருத்துவம் கற்பித்த சரித்திரத்தை சித்தரித்தது.அதன் வெளியீட்டு விழாவில் ஓடியாடி ஒத்தாசை புரிந்ததை நினவு கூருகிறேன்

1968 ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற இரண்டாவது உலகதமிழ்ழாராச்சி மகாநாடுக்கு நடத்தப்பட்ட கவிதைப் போட்டியில் பல்வேறு நாடுகளையும் சேர்ந்த கவிஞர்களுடன் பங்குபற்றி பத்து ஆறுதல் பரிசுகளில் ஒன்றைப் பெற்று கொண்ட காலத்திலிருந்து அவரது அன்புக்குரிய மாணவர் வட்டத்தில் ஒருவனாகியதை எண்ணிப் பெருமைப்படுகிறேன்.

அக்காலம் பலாலி விமானநிலையத்திலிருந்து சென்னைக்கும் திருச்சிக்கும் இலங்கை விமான சேவை (Air Ceylon) விமானங்கள் பறந்த காலம். சென்னையில் கவிதைக்கு பரிசு பெற்ற அம்பிகைபாகன் அவர்கள் பலாலி விமான நிலையத்தில் வந்திறங்கிய பொது மேளதாளத்துடன், மாலைமரியாதைகளுடன் வரவேற்று கல்லூரிக்கு அழைத்துச் சென்று பாராட்டிய பசுமையான நினைவுகளை மீட்டுப் பார்க்கிறேன்.

திருவாளர் அம்பிகைபாலன் அவர்கள் பலாலி ஆசிரியர் கலாசாலையில் விரிவுரையாளராகி பின் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தில் விஞ்ஞானப் பாடப் புத்தகங்களை எழுதுவதிலும் மொழிபெயர்ப்பதிலும் பணியாற்றினார்.

ஆசிரியராக, விரிவுரையாளராக, நூலாசிரியராக, கவிஞராக பல்துறை விற்பன்னராகிய விளங்குகின்ற எமது அம்பி அவர்கள் பலாண்டுகாலம் வாழ எனது இதயம் நிறைந்த வாழ்த்துக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்துலக ஆளுமை கவிஞர் அம்பி ஐயாவுக்கு

மனம் நிறைந்த வாழ்த்துக்கள்

என்றும் அன்புடன்
வைத்திய கலாநிதி பொன் அநுர மற்றும்
எஸ்.பொ. குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Milestones and Highlights

Ramalingam Ambihaipahar

D.O.B : 17th February 1929
Father : Thamotharar Ramalingam
Mother : Thamboo Sivagami Pillai
Place of Birth : Chetti Gardens, Navatkuli, Sri Lanka

1934 - Attends C.M.S primary school, Navatkuli

1938 - Admitted to St John's College as a scholar in prep class

1948 - Passed London Matriculation

1950 - Passed London Inter-Science
Joined Union College, Tellipalai as an assistant teacher
First story published in Thinakkaran weekly in Sri Lanka

1954 - A series of Science articles in Tamil published in Eelakesari daily in Jaffna

1955 - Honoured amongst popular writers with the title of "Pena Mannar"
Begins writing Tamil poetry

1960 - Entered Teacher Training Course, specialising in Mathematics

1962 - Married Manoharidevi Sivasothy

1964 - Assigned to work for the Department of Educational Publications - Tamil Textbook Committee as its secretary

1968 - Received the International Tamil Poetry Award in Madras, India
Appointed as writer for Mathematics textbooks by the Educational Publications Department

1972 - Transferred as Mathematics writer to work in the Curriculum Development Committee

1974 - Appointed as Program Officer in Population Education
Sent to U.S for training in Population Education at the Institute of Public Service, University of Connecticut

1975 - Returned from U.S and continued work as Program Officer

1981 - Received the People's Award in the 5th International Tamil Conference in Madurai, India
Retired from active service in Sri Lanka
Accepted a post as course writer in Mathematics for College of Distance Education in Port Moresby, Papua New Guinea

1983 - Appointed as Head of Mathematics at College of Distant Education

1992 - Retired from post in Port Moresby
Moved to Sydney, Australia
Began preparing Tamil text book for Tamil schools in Sydney
Received a honorary award from Sydney's Balar Malar Educational Association Inc.

1993 - Honoured with the title, "Tamil Mani" by the Cultural Ministry of Sri Lanka

1995 - Received the Sahitya Award for children's literature - Konchum Thamil

1997 - Received the "Nammavar" award by Mugunthan Publications in Melbourne, Australia

1998 - Organised a commemorative stamp in honour of Dr Samuel Fisk Green
Decorated with the Tamil scholar C.W. Thamotharampillai Memorial Medal in Toronto, Canada for his outstanding literary contributions for over 40 years

2003 - Received a recognition award for the contributions to the Tamil community from the Australian Society of Graduate Tamils

2004 - 75th birthday celebration of Poet Ambi felicitated by Mithra Publications in Sydney
Received the Canberra Tamil Literary Association Award
Received a "Pavazha Vizha" Award from the Homebush Tamil Study Centre
Received a "Literary and Arts" Recognition Award from the Australian Federation of Tamils (Inc)

2012 - Received the Tamil Osai award in recognition of his contributions to children's literature in Sydney

2013 - Received Kamban Santror Award in Sydney

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Designed & Printed by Gnanam Art Creation, Sydney. Mob: +61 409 826 521